பக்கங்கள்: பதினாறு

# உதயன்

Registered as a Newspaper

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 24 வள்ளுவர் ஆண்டு 2039 மார்கழி 12 சனிக்கிழமை (27.12.2008) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்:031

# நீதிமன்றை அவமதித்ததாக அரசு மீது வழக்குத் தொடர ஐ.தே.கட்சி முஸ்தீபு

## டீசல், மண்ணெண்ணை விலைகளைக் குறைக்கவும் கோரப்படும்

கொழும்பு, டிசெம்பர் 27

பெற்றோலின் விலையைக் குறைக்குமாறு நீதிமன்றம் விடுத்த தீர்ப்பை நடைமுறைப் படுத்தாமல், நீதிமன்றத்தை அவமதித்த குற்றத்துக்காக அரசு மீது மீண்டும் வழக்குத் தொடர்வதற்கு ஐக்கிய தேசியக் கட்சி திட்டமிட்டு வருகின்றது. அத்தோடு சமையல் எரிவாயு (காஸ்), டீசல் மற்றும் மண்ணெண்ணை ஆகியவற்றின் விலைகளையும் குறைக்க உத் தரவிடுமாறு அந்த வழக்கில் நீதிமன்றிடம் கேட்டுக்கொள்வதற்கும் ஐ.தே.கட்சி முடிவு செய் திருக்கிறது.

(16 ஆம் பக்கம் பார்க்க)

## மட்டு. கரடியனாறில் இரு சடலங்கள் மீட்பு

மட்டக்களப்பு, டிசெ.27

மட்டக்களப்பு கரடியனாறு, பொத்தானைப் பகுதியில் உள்ள கடை ஒன்றில் இருந்து நேற்றுமுன்தினம் காலை இருவரது சடலங்களைப் பொலிஸார் மீட்டுள்ளனர்.

வேலாயுதம் (வயது - 51) மற்றும் ரவிச்சந்திரன் (வயது - 39) ஆகியோரது சடலங்களே இவை என்று அடையாளம் காணப் பட்டன.

(16 ஆம் பக்கம் பார்க்க)

## யாழ். மாவட்டத்தின் புதிய படைத் தளபதியாக மெண்டக்க சமரசிங்க

கொழும்பு, டிசெ.27

யாழ்.மாவட்டத்தின் புதிய படைத் தளபதியாக மேஜர் ஜெனரல் மெண்டக்க சமரசிங்க எதிர்வரும் முதலாம் திகதி பதவியேற்கவுள்ளார்.

யாழ்.மாவட்ட படைகளின் தளபதியாக பணியாற்றிவரும் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி கொழும்பு இராணுவத் தலைமையகத்துக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளதையடுத்தே மேஜர் ஜெனரல் மெண்டக்க சமரசிங்க யாழ். மாவட்ட தளபதியாக நியமிக்கப்பட்டுள்ளார்.

1974 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 2 ஆம் திகதி இராணுவ சேவையில் இணைந்து கொண்ட மேஜர் ஜெனரல் சந்திரசிறி ஜனவரி 6 ஆம் திகதியுடன் ஓய்வு பெறவிருக்கிறார்.

## பெற்றோல் விவகாரத்தில் அரசை எதிர்த்து ஜனவரி 5ஆம் திகதி நாடெங்கும் போராட்டம்

கொழும்பு, டிசெ. 27

பெற்றோல் விலையைக் குறைக்காமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து எதிர்வரும் ஜனவரி மாதம் ஐந்தாம் திகதி நாடு முழுவதிலும் பாரிய ஆர்ப்பாட்டங்களை நடத்தவுள்ளதாக ஐ.தே.க. தெரிவித்துள்ளது.

எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் இத்தகவல் தெரிவிக்கப்பட்டது.

பெற்றோல் விலையைக் குறைக்க எடுக்கப்படும் நடவடிக்கையை நாட்டுக்கு எதிரான சர்வதேச சதித்திட்டம் என்று அரசு வர்ணித்துள்ளது.

மக்களின் வாழ்க்கையை இலகுபடுத்துவதற்காக எடுக்கப்படும் இவ்வாறான

(16 ஆம் பக்கம் பார்க்க)

## இராணுவத்திற்கு 1,300 பெண் சிப்பாய்கள்

கொழும்பு, டிசெ.27

இராணுவச் சேவைக்கு புதிதாக 1,300 பெண் சிப்பாய்களை இணைத்துக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக இரா ணுவத் தலைமையகம் தெரிவித்துள்ளது.

கடந்த மாதம் 24 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்ட இந்த ஆள் சேர்ப்பு நடவடிக்கையில் இதுவரை 700 பேர் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

(16 ஆம் பக்கம் பார்க்க)

## வன்னியில் நேற்றும் விமானங்கள் குண்டு மழை

### குடிமனைகள் சேதம், மக்களும் இடம்பெயர்வு

வவுனியா, டிசெ.27

விமானப்படையினரின் மிக் - 27 ரக ஹெலிகள் முல்லைத்தீவு, விசுவமடு மற்றும் மயில் வாகனபுரம் மக்கள் குடியிருப்புகள் மீது நேற்று மாலை 5.30 மணிக்கும் 5.50 மணிக்கும் செறிவான் குண்டுத்தாக்குதல்களை நடத்தின என்று அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவித்தன.

இந்தத் தாக்குதலின்போது 22 குண்டுகள் வீசப்பட்டன என்றும் கூறப்பட்டது.

இடம்பெயர்ந்த நிலையில் குடியிருப்புக்களை தற்காலிகமாக அமைத்துத் தங்கியுள்ள மக்கள் மீதே இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டிருக்கின்றது என்றும், இதன்போது

(16 ஆம் பக்கம் பார்க்க)

## தமிழக மக்களின் பொருள்கள் இன்று 19 லொறிகளில் வன்னிக்கு

கொழும்பு, டிசெ. 27

வன்னியில் இடம்பெயர்ந்துள்ள மக்களுக்காகத் தமிழக மக்களால் வழங்கப்பட்ட நிவாரணப் பொருள்களில் மேலும் ஒரு தொகுதி இன்று அங்கு கொண்டு செல்லப்படவுள்ளன. 19 லொறிகளில் இந்த நிவாரணப் பொருள்கள் கொண்டுசெல்லப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது.

## கணிதபாட மீள் பரீட்சை ஜனவரி 24க்கு ஒத்திவைக்கப்பட்டதாக திணைக்களம் அறிவிப்பு

கொழும்பு, டிசெ.27

ஜனவரி 17 ஆம் திகதி நடைபெறவிருந்த ஜீ.சி.ஈ. சாதாரணதர கணிதப் பாடத்தின் பகுதி 2 (புதிய பாடத்திட்டம்) மீள்பரீட்சை ஜனவரி 24 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப் பட்டுள்ளது என பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இரத்துச் செய்யப்பட்ட கணித பாடம் பகுதி 2 இற்குரிய பரீட்சையை எதிர்வரும் 17 ஆம் திகதி நடத்த முன்னர் தீர்மானிக்கப்பட்டிருந்தது. இந்நிலையிலேயே எதிர்

(16 ஆம் பக்கம் பார்க்க)

## முள்ளியவளைக்குள் இராணுவத்தினர் நுழைந்து விட்டனர் என்று அறிவிப்பு!

கொழும்பு, டிசெ.27

ஒட்டுசுட்டான் - முல்லைத்தீவு வீதியில் அமைந்துள்ள பிரதான நகரான முள்ளியவளைப் பகுதிக்குள் இராணுவத்தினரின் 59 ஆவது படையணியினர் நேற்று முன்தினம் நுழைந்துள்ளனர் என பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது.

இப்பிரதேசத்தில் நேற்று முன்தினம் புலிகளுடன் ஏற்பட்ட கடும் மோதலுக்குப் பின்னர் படையினர் இப்பிரதேசத்துக்குள் நுழைந்தனர். நேற்றுக்காலை தரைப் படையின் 16 ஆவது ரெஜிமென்ட் படையணியும், முள்ளியவளைப் பகுதிக்குள் நுழைந்துள்ளதனால் அங்கு கடுஞ்சமர் இடம்பெற்று வருகிறது எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, முள்ளியவளைப் பிரதேசத் தில் அமைக்கப்பட்டிருந்த புலிகளின் பாரிய தகவல் பரிமாற்றுக் கோபுரம் ஒன்றைப் படையினர் கைப்பற்றியுள்ளனர் எனவும் பாதுகாப்பு அமைச்சு தெரிவிக்கின்றது.

(அ-சி)

## அனைத்துக் கட்சிக் குழுவின் நகல் திட்டம் ஐக்கிய தேசியக் கட்சியிடம் கையளிக்கப்படும்

கொழும்பு, டிசெ. 27

அனைத்துக் கட்சி பிரநிதிகள் குழுவின் உத்தேச இறுதி தீர்வு நகல் குறித்து அடுத்தவாரம் ஐ.தே.கட்சியுடன் பேச்சு நடத்த இருப்பதாக குழுவின் தலைவரான அமைச்சர் பேராசிரியர் திஸ்ஸ விதாரண தெரிவித்தார்.

உத்தேச இறுதித் தீர்வு நகலை ஜனாதிபதியிடம் சமர்ப்பிப்பதற்கு முன்னர் ஐ.தே. கட்சியுடன் பேச்சு நடத்தி அவர்களின் யோசனையைப் பெற்று தீர்வுத்திட்டத்துக்கு இறுதி வடிவம் கொடுக்க இருப்பதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

(16 ஆம் பக்கம் பார்க்க)

## கொழும்பிலும் புறநகர்ப் பகுதிகளிலும் படையினர் தீவிர தேடுதல் வேட்டை!

கொழும்பு, டிசெ.27

கொழும்பு மற்றும் அதனை அண்டிய பல பகுதிகளில் பொலிஸாரும் இராணுவத்தினரும் இணைந்து நடத்திய திடீர் சுற்றிவளைப்புத் தேடுதலில் சந்தேகத்தின் பேரில் பலர் கைது செய்யப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

கொழும்பு, முகத்துவாரம், கொட்டாஞ்சேனை, வெள்ளவத்தை மற்றும் இராஜகிரிய ஆகிய பகுதிகளிலும் கொழும்பை அண்டிய பிரதேசங்களான தெஹிவளை, கொகுவளை, நுகேகொடை போன்ற பகுதிகளிலுமே இந்த திடீர் சுற்றிவளைப்புத் தேடுதல்கள் நடத்தப்பட்டுள்ளன.

பண்டிகைக் காலத்தை முன்னிட்டு பொதுமக்களை இலக்கு வைத்து தாக்குதல் நடத்த விடுதலைப் புலிகள் தீர் மானித்துள்ளனர் எனப் பாதுகாப்புப் புல னாய்வுப் பிரிவினருக்கு கிடைத்ததகவலை அடுத்தே

(16 ஆம் பக்கம் பார்க்க)

## யாழ்.நகரில் இன்று முதல் 3 நாள்களுக்கு கண்காட்சியும் களியாட்ட விழாவும்

### படையினர் ஏற்பாடு செய்துள்ளனர்

யாழ்ப்பாணம், டிசெ.27

'யாழ்ப்பாணத்தின் எதிர்கால நோக்கு' என்ற தொனிப்பொருளுடனான தொழில் சார் மற்றும் கல்விக் கண்காட்சியும் களியாட்ட விழாவும் இன்று யாழ்.நகரில் ஆரம்பமாகின்றன.

இன்று காலை 8.30 மணிக்கு வைபவ ரீதியாக ஆரம்பமாகும் இந்த நிகழ்வு மூன்று நாள்கள் நடைபெறவுள்ளது.

யாழ்.மத்தியகல்லூரி, வேம்படி மகளிர் கல்லூரி ஆகியவற்றில் தொழில்சார் மற்றும் கல்விக் கண்காட்சிகள் இடம்பெறவுள்ளன.

யாழ்.மத்திய கல்லூரி மைதானத்தில் இன்னிசைக் கச்சேரிகள், வடக்கின் தாரகை

(16 ஆம் பக்கம் பார்க்க)

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்.வர்த்தகக் கண்காட்சியை முன்னிட்டு
**Dialog** G.S.M வாடிக்கையாளர்களுக்கு
ஓர் அரிய சந்தர்ப்பம்




வேம்படி மகளிர் பாடசாலையில்
டிசெம்பர் 27,28,29 திகதிகளில் மட்டும்.
விவரங்கட்கு: 0777 330328, 0777 334436, 077 3331350


## மூத்த வங்கியாளர் கௌரவிப்பு - 2008

தற்பொழுது சேவையிலுள்ள யாழ்.மாவட்ட வங்கிகளைச் சேர்ந்த ஊழியர்கள் தமது வங்கிகளிலிருந்து இளைப்பாறியும் அன்றி வேறு வழிகளில் விலகியும் சென்ற மூத்த வங்கியாளர்களை (ஓய்வூதியம் பெறும் விதவைகள் உட்பட) கௌரவிக்கும் வருடாந்த நிகழ்வானது எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை 28.12.2008 இடம்பெறவுள்ளது.

இடம்: யாழ்ப்பாணக் கல்லூரி மண்டபம்
(வர்த்தக வங்கி அருகில்)
464, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

நேரம்: முற்பகல் 9.00 மணி

பிரதம விருந்தினர்: உயர்திரு மாணிக்கம் நடராஜசுந்தரம்
(பேராசிரியர், யாழ்.பல்கலைக்கழகம்)

கௌரவிக்கப்படுபவர்களையும் கௌரவிப்பவர்களையும் இவ் விழாவில் பங்குகொண்டு மதியபோசன விருந்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

திரு.என்.சிவரத்தினம்
தலைவர்.

திரு.வி.அருளானந்தம்
செயலாளர்.

குறிப்பு: பங்குகொள்பவர்கள் தமது வருகை பற்றி இது வரை அறிவிக்காவிடின் தயவுசெய்து செயலாளருக்கு அறிவித்து ஏற்பாடுகளுக்கு உதவிசெய்யுமாறு வேண்டப்படுகின்றனர்.

நிகழ்வு குறிப்பிட்ட நேரமான 9 மணிக்கு ஆரம்பமாகும்.

வங்கியாளர் சங்கம்,
யாழ்.மாவட்டம்.

Bankers' Association,
Jaffna District.

## மரண அறிவித்தல்

### கார்த்திகேசு மனோகரன்



பழவத்தை, வியாபாரிமூலை, பருத்தித்துறையைப் பிறப்பிடமாகவும் மொன்றியல், கனடாவை வதிவிடமாகவும் கொண்ட கார்த்திகேசு மனோகரன் 24.12.2008 புதன்கிழமை கனடாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வி.க.முருகுப்பிள்ளை - வள்ளிப்பிள்ளை தம்பதியினரதும் காலஞ்சென்ற பொ.கணபதிப்பிள்ளை மற்றும் சின்னப்பிள்ளை தம்பதியினரதும் அன்புப் பேரனும் காலஞ்சென்ற தபாலதிபர் மு.கார்த்திகேசு மற்றும் மங்கையர்க்கரசி தம்பதியினரின் பாசமிகு புதல்வனும் காலஞ்சென்ற மதியழகன் மற்றும் சோதிமதி, இளங்கோ ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஜெயலட்சுமி, சிவாசன் ஆகியோரின் மைத்துனரும் அமலன், அஞ்சலி, ஆஷா ஆகியோரின் சிறிய தகப்பனும் கெவின், நிவேதா ஆகியோரின் அன்பு மாமனும் திரு.திருமதி பொன்னுத்துரை - தெய்வநாயகி, திரு.திருமதி தர்மலிங்கம் - கோமதி, திரு.திருமதி சோமசுந்தரம் - மகேஸ்வரி, திரு.திருமதி வயிரமுத்து - இந்திராணி, திரு. திருமதி திருநாவுக்கரசு - தெய்வநாயகி ஆகியோரின் பெறாமகனும் திரு.திருமதி தங்கவேலு - நாகேஸ்வரி, திரு.திருமதி சுப்பையா - குழந்தைநாயகி, காலஞ்சென்ற இராசையா மற்றும் திருமதி பத்மராணி, திருமதி சி.தனபாக்கியம், திரு.இராமச்சந்திரா, காலஞ்சென்ற திருமதி சரோஜினி தேவி ஆகியோரின் மருமகனும் ஆவார்.

கனடாவில் நடைபெறவுள்ள அன்னாரின் இறுதிக் கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மு.தர்மலிங்கம் (சிறிய தகப்பன்).

## 'செந்தாரகை' சேவை வெள்ளோட்டம் இன்று

புங்குடுதீவு - நயினாதீவு ப.நோ.கூ.சங்கத்தின் 'செந்தாரகை' படகின் வெள்ளோட்ட விழா இன்று சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு இடம்பெறவுள்ளது.

சங்கத்தின் தலைவர் வைத்திய கலாநிதி க.இராசரெட்ணத்தின் தலைமையில் நடைபெறும் இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.அரச அதிபர் க.கணேஷ் கலந்து கொள்வார்.

அரச அதிபர் சேவையை வைபவ ரீதியாக ஆரம்பித்து வைக்கவிருக்கிறார். (1)

## பட்டதாரி ஆசிரியர்களை சமுகமளிக்க கோரிக்கை

தீவகக் கல்வி வலயத்தில் புதிதாக நியமனம் பெற்ற பட்டதாரி ஆசிரியர்களின் முன் சேவைப்பயிற்சிக்காக விவரங்கள் தேவைப்படுவதால் புதிய ஆசிரியர்கள் (கடமைஏற்றவர்கள்) அனைவரையும் நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு யாழ்.கொட்டடி நமசிவாய வித்தியாசாலையில் ஒன்று கூடுமாறு வலயக் கல்விப்பணிப்பாளர் கேட்டுள்ளார். (1)


### தவறிவிட்டது

செல்லத்துரை கனகராசா என்பவருடைய தேசிய அ.அட்டை இல 591624288V நெல்லியடிக்கும் தம்பசிட்டிக்கும் இடையில் தவறிவிட்டது.
தொடர்பு:- 021 226 4184

### வீடு வாடகைக்கு

இல. 820, ஆஸ்பத்திரிவீதியில் உள்ள வீடு வாடகைக்கு கொடுக்கப்படும்.
தொடர்பு:- 0777110569

### தவறிவிட்டது

இல. 12, புது வீதி, கொய்யாத்தோட்டம் என்னும் முகவரியுடைய, இராசதுரை யேசுதாசன் என்பவருடைய தேசிய அடையாள அட்டை (840101377V)தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் அடையாள அட்டையில் குறிக்கப்பட்ட விலாசத்திற்கு ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

### தவறிவிட்டது

இல.214/11, இராமநாதன் வீதி என்னும் முகவரியுடைய கருணதாஸ் கிரோஷன் என்பவரது தே.அ.அட்டை (912382192V) கடந்த (24.12.2008) புதன்கிழமை புளியங்கூடலுக்கும் நடராஜா வித்தியாலயத்துக்கும் இடையில் (வேலணை) தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் புளியங்கூடலிலுள்ள சதாசிவம் திருவருள் (J.P) என்பவரது வீட்டிலோ அல்லது அ.அட்டையிலுள்ள முகவரிக்கோ சேர்த்து விடவும். சன்மானம் வழங்கப்படும்.
T.P. 0776090045, 0779004457, 0776136860

### வீடு, வளவு, தோட்டக் காணி விற்பனைக்கு

சிறுப்பிட்டி தெற்கில் தம்பு சேனாதிராயருக்குச் சொந்தமான நல்ல சூழலில் அமைந்த நன்னீர்க் கிணற்று வசதியுடனான வீட்டுடன் கூடிய 10 பரப்புக் காணியும், சாளம்பையடி என்னும் 7 1/2 பரப்பு தோட்டக்காணியும் (கிணற்றுப் பங்குடன்), காளையன் புலம் என்னும் 28 1/4 பரப்பு தனிக்கிணற்றுடன் கூடிய காணியும் உடன் விற்பனைக் குண்டு.
தொடர்பு:- த.நந்தகுமாரன் (ஆசிரியர்)
முத்துக்கிருஸ்ணர் வீதி, சுன்னாகம்.
T.P:- 060 221 4951

### கோழிக்குஞ்சு விநியோகம்

Pirima சிகப்பு பேட்டுக் குஞ்சுகள்
Bahira புறொயிலர் குஞ்சுகள்
29.12.2008 விநியோகிக்கப்படும்.
பதிவுகளை மேற்கொள்ளவும்.
★றாஜீவ் - நவாலி வீதி, ஆனைக் கோட்டை.
★கோல்டன் பாம் - பருத்தித்துறை.
★மதுரா - ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
★சிற்றிபாம் றேடர்ஸ் - கல்வியங்காடு.
★P.ரவி - தபாற் கந்தோர் வீதி, சாவகச்சேரி.
★திருமகள் களஞ்சியம் - சிவலிங்கப்புளியடி.


## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



தோற்றம்
27 ★ 03 ★ 1944

மறைவு
27 ★ 11 ★ 2008

### அமரர் திருமதி குணம் சரஸ்வதி

முன்னுலகில் நாம் செய்த பலன்
இவ்வுலகில் தாயாக வந்துதித்தீர்
முப்பது தினங்கள் கழிந்தும்
இத்துடிப்பு மாறவில்லை - நீர்
முத்தி பெறுவதற்கு - நாங்கள்
இப் பாரினிலே வாழ்ந்து
இறைவனைப்பிரார்த்திக்கின்றோம் தாயே!

பழைய வீதி,
கோப்பாய் தெற்கு (81198)

குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்கள்

### வேலுப்பிள்ளை பாலகிருஷ்ணன்

மாவிட்டபுரத்தைச் சேர்ந்த வேலுப்பிள்ளை பாலகிருஸ்ணன் ஓமானில் (முன்னாள் காங்கேசன் சிமெந்துக் கூட்டுத்தாபன உத்தியோகஸ்தர் தற்போது (ஓமான் ஜெய்துட் சிமெந்து கொம்பனி) காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற வேலுப்பிள்ளை - வள்ளிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகனும் நல்லூர் றக்கா வீதியைச் சேர்ந்த இராசையா தம்பதிகளின் அன்பு மருமகனும்கொள்ளுப்பிட்டி மெதடிஸ்த கல்லூரி ஆசிரியை ரதியின் அன்புக் கணவரும் திலக்சனின் பாசமிகு தந்தையும் ஜெயராஜசிங்கம் (முன்னாள் சிங்கர் கொம்பனி)புஸ்பராணி, பாலசுப்பிரமணியம் (முன்னாள் சிமெந்து கூட்டுத்தாபனம்), செல்வராணி, இந்திராணி, பத்மலோஜினி (ஆசிரியை, மகாஜனக் கல்லூரி, தெல்லிப்பழை), தர்மசீலன் ஆகியோரின் பாசமிகு சகோதரரும் சுப்பிரமணியம் (கே.ஜி.கொம்பனி), லோகநாதன் (முகாமையாளர் H.N.B), பிரேமரூபன் (லண்டன்), புஸ்பராணி, ரமணி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ரவிகுலன், ராகுலன், செந்தில் ஆகியோரின் அன்பு சித்தப்பாவும் சேந்தன், அம்பிகைபாலன் ஆகியோரின் பாசமிகு மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (28.12.2008) ஞாயிற்றுக்கிழமை மு.ப 10மணிக்கு கொழும்பு கனத்தை மயானத்தில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஈஸ்வரிவாசா,
உடுவில் கிழக்கு,
சுன்னாகம்.

தகவல்:
சகோதரன்.

### சூரிப்பிள்ளை பாலகிருஸ்ணன்

(Employment Initiative Advisor, UK)



யாழ்ப்பாணம் கரவெட்டி, துன்னாலை ஞானாசாரியார் வீதியைப் பிறப்பிடமாவும், இலண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட சூரிப்பிள்ளை பாலகிருஸ்ணன் அவர்கள் 21.12.2008 அன்று இலண்டன் New Ham வைத்தியசாலையில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சூரிப்பிள்ளை - சின்னம்மா தம்பதியினரின் மகனும், கார்த்திகேசு - பரமேஸ்வரி தம்பதியினரின் மூத்த மருமகனும், வாசுகியின் அன்புக் கணவரும் பிரணவன், பானுஜா, பிரகலாதன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், பாலச்சந்திரன் காலஞ்சென்ற Dr.பாலசுந்தரம், பாலயோகன், கிருஸ்ண தேவி, பாலசோதி, பாலேந்திரன் பாலதெய்வேந்திரதேவி, பாலசிங்கம், தெய்வநாயகி, யோகதேவி ஆகியோரின் அன்புச் சகோதரனும் காந்தரூபன், சிவரூபன், சிவானந்தி, மதிவதனி, பாமதி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 28.12.2008 ஞாயிற்றுக் கிழமை காலை 340, Horns Road, Barkingside,Ilford, Essex உள்ள அன்னாரது இல்லத்தில் நடைபெற்று City of London Crematorium இற்கு நண்பகல் தகனத்திற்காக எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்பு: 0112576227/8 0773171947
பிரணவன் (மகன்) - 00447944833272,
00442085516162

தகவல்:
மனைவி, மக்கள்.




கிறிஸ்மஸ் முதல்
முதன் முறையாக யாழ்.மாவட்டத்தில்....
மாபெரும் பரிசுகளுடன்
விரையுங்கள்....
ஒவ்வொரு வாடிக்கையாளருக்கும் அதிகூடிய பங்குலாபம்

கிறிஸ்மஸ் மற்றும் புதுவருடத்தினை முன்னிட்டு
சிறிலங்கா இன்சூரன்ஸ்
MAK Cost Cutter Super Market
உடன் இணைந்து நடாத்தும் மாபெரும் விற்பனைத் திருவிழா
18.12.2008 முதல் 18.01.2009 வரை
You are Safer with the Leader
வருட இறுதியில் மாபெரும் சீட்டிழுப்பில் 2 மில்லியன் ரூபா வரையான பரிசில்கள்

என்றுமே இல்லாதவாறு குறைந்த கட்டுப் பணத்தில் கூடிய காப்புறுதித்தொகை
பொங்கல் வரை
உங்களின் காலவூதியான காப்புறுதிப் பத்திரங்களை புதுப்பிக்க ஓர் சந்தர்ப்பம்
(நிபந்தனைகளிற்குட்பட்டது)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# என்ன செய்யப் போகிறார் கலைஞர்?

உடனடியாக யுத்த நிறுத்தம் செய்யும்படி இலங்கை அரசை வற்புறுத்துவதற்காகத் தமது வெளிவிவகார அமைச்சர் பிரணாப் முகர்ஜியைக் கொழும்புக்குத் தாம் அனுப்புவார் என இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங், தமிழக அனைத்து அரசியல் கட்சித் தலைவர்களுக்கும் வாக்குறுதி அளித்து மூன்று வாரங்கள் கடந்துவிட்டன.

இந்திய வெளிவிவகார அமைச்சரின் உத்தேச கொழும்பு விஜயம் கிணற்றில் போட்ட கல்லாக முடங்கிப் போய்க் கிடக்கின்றது. இயன்ற விரைவில் அவர் கொழும்புக்கு வருவார் என்பதற்கான முகாந்திரம் ஏதும் காணப்படவேயில்லை.

ஈழத்திலே, இலங்கை அரசு தொடுத்திருக்கும் கொலைவெறி யுத்தத்தினால் தமிழர் தாயகம் பற்றி எரிந்துகொண்டிருக்கின்றது. கணத்துக்குக் கணம் சாவும் அழிவுமாகத் தமிழர் தாயகம் ரணகளமாகிக் கொண்டிருக்கின்றது. ஆகவே, விரைந்து சென்று, யுத்தத்தை உடனடியாக நிறுத்துவதற்கு ஆவன செய்யுங்கள் - ஆக்கபூர்வ நடவடிக்கை எடுங்கள் - என்பதே ஒட்டுமொத்தத் தமிழகத்தின் வற்புறுத்தலாகவும், வலியுறுத்தலாகவும் வெளிப்பட்டிருக்கின்றது.

விரைந்து நடவடிக்கை எடுக்க வாக்குறுதி அளித்த புதுடில்லி அரசியல் தலைமை, சரியான பிரதிபலிப்புகளைக் காட்டாமல் காலத்தை இழுத்தடிக்கின்றது.

இலங்கையில் ஈழத் தமிழர்களுக்கு எதிராக அந்நாட்டு அரசு தொடுத்திருக்கும் கொடூர யுத்தத்துக்கு இந்தியா, தோள் கொடுத்து உதவி, ஆயுதத் தளபாடங்கள் மற்றும் வசதிகளை அளித்தும் வருகின்றது என்பதே இந்திய மக்களின் பொதுவான குற்றச்சாட்டாகும்.

சிங்களப் படைகளுக்கு ஆயுதங்கள் மற்றும் பயிற்சி உதவிகளை வழங்குவதை இந்திய அரசு அடியோடு நிறுத்த வேண்டும் என்பதும் -

தமிழர் தாயகம் மீது தான் தொடுத்துள்ள யுத்தத்தை இலங்கைப் படைகள் உடனடியாக நிறுத்தச் செய்ய வேண்டும் என்பதும் -

தமிழக மக்களின் ஒட்டுமொத்த உணர்வு நிலைப்பாடாக இருக்கின்றது.

இதையே ஒக்ரோபர் மத்தியில் நடைபெற்ற சர்வ[illegible]சிக் கூட்டத்தில் தமிழகத் தலைவர்கள் தங்களது முடி[illegible]க அறிவித்தார்கள்.

இந்த இரண்டு கோரிக்கைகளையும் இரண்டு வாரங்களுக்குள் நிறைவேற்றுவதற்கு இந்திய மத்திய அரசு ஆக்கபூர்வமான நடவடிக்கை எடுக்காவிட்டால் தமிழகம் மற்றும் பாண்டிச்சேரியிலிருந்து நாடாளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் 40 எம்.பிக்களும் கூட்டாக இராஜிநாமாச் செய்வர் என்றும் இந்திய மத்திய அரசை எச்சரித்து அறிக்கையும் விட்டனர் தமிழக அரசியல் கட்சித் தலைவர்கள்.

ஆனால், தமது கட்சியுடன் கூட்டணி அமைத்து, அதை நம்பி ஆட்சியை நடத்தும் இந்திய மத்திய அரசை இவ்விடயத்தில் வழிக்குக் கொண்டுவரத் திராணியற்ற - இலாயக்கு அற்ற - தமிழக முதல்வர் கலைஞர் கருணாநிதி, இவ்விடயத்தில் நழுவல், வழுவல் போக்கைக் கைக்கொண்டார். அதன்மூலம் ஈழத் தமிழர்களுக்கு எதிராகத் தமிழகத்தில் கிளர்ந்த எழுச்சியை நீர்த்துப் போகச் செய்து, பயனற்றதாக்கி இருக்கிறார் - செல்லாக்காசாக்கி இருக்கிறார் கலைஞர்.

இந்திய வெளிவிவகார அமைச்சர் பிரணாப் முகர்ஜிக்கும், இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் விசேட பிரதிநிதியான பஸில் ராஜபக்ஷவுக்கும் இடை[illegible] புதுடில்லியில் நடந்த பேச்சுகளை அடுத்து -

மேற்படி இரு கோரிக்கைகள் தொடர்பாக எந்த ஆக்கபூர்வமான உறுதிமொழியோ, சைகையோ காட்டப்படாத நிலையில் -

இவ்விடயத்தில் இந்திய மத்திய அரசின் நடவடிக்கைகள் மனநிறைவை அளிக்கின்றன என ஒருதலைப்பட்சமாக அறிவித்து, நாற்பது நாடாளுமன்ற உறுப்பினர்களினதும் இராஜிநாமாத் திட்டத்தையும் கெடுத்துக் குட்டிச் சுவராக்கினார் அவர்.

அதன் பின்னரும் தமிழகத்தில் ஈழத் தமிழர் ஆதரவு எழுச்சி கிளர்ச்சியாக - புரட்சியாக - வெடித்ததை அடுத்துத் திரும்பவும் தமிழகத்தில் சர்வகட்சிக் கூட்டம் என்ற கண்துடைப்பு நாடகத்தை நடத்தி, அத்தலைவர்களோடு புதுடில்லிக்குப் பறந்தார் அவர். இந்தியப் பிரதமரையும் சந்தித்தார். இலங்கை விடயம் பற்றி விரிவாகப் பேசினார் என்றும் தெரிவிக்கப்பட்டது.

தமது வற்புறுத்தலின் பேரில் - இந்தியப் பிரதமர் தனது பிரதிநிதியாக இந்திய வெளிவிவகார அமைச்சரை இயன்ற விரைவில் கொழும்புக்கு அனுப்பி, அங்கு யுத்தநிறுத்தத்தை ஏற்படுத்துமாறு இலங்கை அரசுக்கு அழுத்தம் கொடுக்க உறுதி தந்தார் என இச்சந்திப்பை அடுத்து கலைஞர் அறிவித்தார்.

ஈழத்தில் தமிழர்கள் செத்துக்கொண்டிருக்கையில் - பற்றி எரியும் யுத்தம், ஊழிப் பெரும் கூத்தாய் கணத்துக்குக் கணம் பேரழிவை ஏற்படுத்தி நாசமாக்கும் நிலைமை தொடர்ந்து கொண்டிருக்கையில் - மூன்று வாரம் கழித்தும் கூட, இந்திய வெளிவிவகார அமைச்சர் கொழும்புக்குச் செல்வதற்கான - 'இயன்ற விரைவில்' என்ற காலக்கெடு - இன்னும் முடிவடையவில்லை. இன்னும் ஒரு மாதம் பூர்த்தியானாலும் கூட, அந்த 'இயன்ற விரைவில்' என்பது அப்போதும் சாத்தியமில்லை என்றே தோன்றுகின்றது.

ஈழத் தமிழர் விடயத்தில், ஒருபுறம் இலங்கை அரசுக்கு யுத்த தளபாட மற்றும் பயிற்சி உதவிகளை வழங்கிக் கொண்டு, யுத்தத்தில் சிக்கித் தவிக்கும் ஈழத் தமிழர்களுக்காக எதுவும் செய்ய விருப்பற்ற - திராணியற்ற - நிலையில் உள்ள மத்திய அரசுடன் கூடிக் குலாவியபடி கலைஞர் என்ன செய்யப் போகிறார்?

அவரது பதிலைப் பதிவுசெய்ய வரலாறு பார்த்திருக்கின்றது.

# கிழக்கில் கடத்தல்களும் கொலைகளும் தொடர்கின்றன மக்களின் பாதுகாப்பை அரசு உறுதிப்படுத்தவேண்டும்

## நத்தார் செய்தியில் மட்டு - திருமலை ஆயர் கவலை தெரிவிப்பு

கொழும்பு, டிசெ.27

கிழக்கு மாகாணத்தில் படுகொலைகளும் கடத்தல்களும் தொடர்வதாக மட்டக்களப்பு திருகோணமலை மாவட்டங்களுக்கான ஆயர் மேதகு கிங்ஸ்லி சுவாம்பிள்ளை ஆண்டகை நத்தார் நாள் செய்தியில் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு:

வன்முறைகள் மனிதாபிமானத்தை அழித்து விட்டன. மோதல்கள் நடைபெறும் பகுதிகளில் சிக்கியுள்ள மக்கள் பாரிய நெருக்கடிகளை சந்தித்துள்ளனர். ஆயிரக்கணக்கான மக்கள் வாழ்வதற்கான ஆதாரங்களை இழந்துள்ளனர்.

கிழக்கில் கடத்தல்களும்படு கொலைகளும் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. அங்கு மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும். இரு வருடங்களுக்கு முன்னர் இடம் பெயர்ந்த மக்களில் சிலர் இன்றுவரை மீண்டும் தமது இடங்களில் மீளக் குடியேற முடியாதது வருந்தத்தக்கது. அமைதியை [illegible]படுத்துவதற்கு நேர்மையான செயற்பாடுகள் தேவை- எனத் தெரிவித்துள்ளார்.

# மத்தியதர வருமானம் ஈட்டும் நாடுகளின் பட்டியலில் இலங்கை

கொழும்பு, டிசெ.27

மத்திய தர வருமானம் ஈட்டும் நாடுகளின் பட்டியலில் இலங்கை இணைக்கப்பட்டுள்ளதாக உலக வங்கி அறிக்கை தெரிவித்துள்ளது.

உலக வங்கியினால் ஆசிய நாடுகளின் இறுதியாண்டுக்கான வருமான மட்டங்கள் தொடர்பான கணிப்பீட்டு அறிக்கையில் இவ்விவரம் தெரிவிக்கப்பட்டுள்ளது. கடந்த சில தசாப்தங்களாக சார்க் பிராந்திய நாடுகளில் அபிவிருத்தி பாதிப்படையும் நாடுகளில் இலங்கையும் இடம்பெற்றுள்ளதாக தெரிவித்துள்ளது.

இதேவேளை உலகின் அதிக வறியவர்கள் வாழும் பிரதேசங்களில் ஒன்றாக காணப்படுவதாகவும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கிறது மேலும், இந்தியா, மாலைதீவு மற்றும் பூட்டான் உள்ளிட்ட நாடுகளிலும் பொருளாதார வளர்ச்சி பாதிக்கப்பட்டுள்ளதாகவும் உலக வங்கியின் அறிக்கையில் சுட்டிக்காட்டியுள்ளது. (சி)

# ஆழிப்பேரலையால் பாதிப்புற்றோரின் மறுவாழ்வுக்கென கட்டமைப்பினை உருவாக்கும் முயற்சி பயனளிக்கவில்லை

## நினைவு நிகழ்வில் யாழ்.அரச அதிபர் தெரிவிப்பு



யாழ்ப்பாணம், டிசெ.27

ஆழிப்பேரலை அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களின் மறு வாழ்வுக்கென கட்டமைப்பு ஒன்றினை உருவாக்குவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. எனினும் அந்த முயற்சிகள் வெற்றியடைய வில்லை. 11.08.2006 இல் துரதிஷ்ட வசமாக ஏற்பட்ட அசம்பாவிதத்தினால் ஆழிப்பேரலை மறுசீரமைப்புப் பணிகளை மேற்கொள்ள முடியாமல் போய் விட்டது.

இவ்வாறு தெரிவித்தார் யாழ்.அரச அதிபர் கே.கணேஷ்.

யாழ்.செயலகத்தில் நேற்றுக் காலை 9 மணிக்கு நடைபெற்ற ஆழிப்பேரலை அனர்த்த நினைவு நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் கூறியவை வருமாறு:

எதிர்காலத்தில் இவ்வாறான அனர்த்தங்களை எதிர்கொள்வதற்கு எம்மால் எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் யாவை என்பது பற்றி ஆலோசிப்பதற்காகவும் இங்கு கூடியிருக்கிறோம். அத்தோடு யாழ். மாவட்டத்தில் அண்மையில் ஏற்பட்ட வெள்ள அனர்த்தம் சம்பந்தமாகவும் சிந்திக்க வேண்டிய காலகட்டத்தில் நாம் உள்ளோம்.

### இழப்புக்கள் ஈடுசெய்ய முடியாதவை

சுனாமியால் ஏற்பட்ட உயிர் இழப்புக்கள் எவராலும் ஈடுசெய்ய முடியாதவையாகும். இருப்பினும் பல இன்னல்களையும் அவலங்களையும் சந்தித்துள்ள மக்களுக்குத் தேவையான உதவிகளைச் செய்து கொடுக்க வேண்டியது எம் அனைவரினதும் பாரிய கடப்பாடாகும். இதற்காக பல நிறுவனங்கள் உதவிசெய்வதற்கு முன்வந்து தற்போது அவற்றின் பணிகள் சுனாமியினால் கடுமையாக பாதிக்கப்பட்ட பருத்தித்துறை, வடமராட்சி கிழக்குக் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

அனர்த்தங்களை எவ்வாறு குறைத்துக் கொள்ளலாம் என்பது பற்றி ஒவ்வொருவரும் விழிப்புணர்வுடன் இருக்க வேண்டும். அண்மையில் ஏற்பட்ட வெள்ள அனர்த்தம் தொடர்பாக உரிய நிர்வாக இயந்திரம் மேலும் சிறப்பாக செயற்பட்டிருந்தால் பாதிப்புக்களை ஓரளவு குறைத்திருக்கலாம். குறிப்பாக முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் உரிய நேரத்தில் மேற்கொள்ளப்பட இயலாது போய்விட்டது. எனவே அரச உத்தியோகத்தர் என்ற ரீதியில் இவ்வாறு அனர்த்தங்களுக்கு உள்ளான மக்களுக்கு எவ்வாறான உதவிகளைச் செய்ய முடியும் என அனைவரும் சிந்திக்க வேண்டும்.

### வெள்ள அனர்த்தத்துக்கு வடிகால்கள் சீர்செய்யப்படாமையே காரணம்

அண்மையில் ஏற்பட்ட வெள்ள அனர்த்தத்தினால் யாழ்.நகரப் பகுதியில் 3 நாள்களாக வெள்ளம் நின்றமைக்குக் காரணம் வெள்ள வாய்க்கால்கள் உரிய திணைக்களங்களால் சீராக பராமரிக்கப்படாமையும், வெள்ள வாய்க்கால்களில் ஏற்படுத்தப்பட்டிருந்த தடைகளுமாகும். அவர்களுக்கு இந்தத் திட்டங்களை நிறைவேற்றுவதற்குத் தேவையான வளங்கள் இருக்க வில்லை.

எதிர்காலத்தில் சம்பந்தப்பட்ட அனைவரும் இவ்வாறான பாதிப்புக்களுக்கு முகம்கொடுக்கக் கூடிய பணிகளை உணர்ந்து செய்ய வேண்டும். மாவட்டத்தில் உள்ள பிரச்சினைகளை அடையாளம் கண்டு அதற்குரிய திட்டங்களை உரிய முறையில் திட்ட மிட்டுச் செய்ய வேண்டும்.

சுனாமி அனர்த்தத்தினால் பாதிப்புக்குள்ளான மக்கள் எல்லோரும் எங்கள் சகோதரர்கள், சகோதரிகள் என உணர்ந்து அவர்களுக்குத் தொடர்ந்து சேவையாற்ற வேண்டும் - என்றார் அரச அதிபர்.

இந்த நிகழ்வில் மேலதிக அரச அதிபர் ஆ.சிவசுவாமி மற்றும் செயலகக் கிளைகளின் உத்தியோகத்தர்கள் அனைவரும் கலந்து கொண்டனர். ஆழிப்பேரலை அனர்த்தத்தின் போது உயிரிழந்தோருக்கென் காலை 9.25 முதல் 9.27 வரை இரண்டு நிமிட மௌன அஞ்சலியும் செலுத்தப்பட்டது. (50)

# 1,500 பேரை பலிகொடுத்த ரயில் மீண்டும் நேற்று முதல் சேவையில்

கொழும்பு, டிச.27

2004 ஆம் ஆண்டு ஆழிப்பேரலை அனர்த்தத்தில் சிக்கி ஹிக்கடுவ, பராலியவில் ஆயிரத்து 500 பயணிகளுடன் விபத்துக்குள்ளான ரயில் திருத்தப்பட்டு ஆழிப்பேரலை அனர்த்த நான்காவது ஆண்டு நிறைவு தினமான நேற்று சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தது.

அந்த அனர்த்தத்தில் மரணித்த ஆயிரத்து 500 பயணிகளை நினைவு கூரும் முகமாகவே அந்த ரயில் பயணம் ஆரம்பிக்கப்பட்டது. இந்த ரயில் நேற்றுக் காலை 6.30 மணிக்கு கொழும்பு மருதானை ரயில் நிலையத்தில் இருந்து மாத்தளை நோக்கிப் புறப்பட்டது.

ஆயிரத்து 500 பயணிகளை பலிக்கொடுத்த ஹிக்கடுவ, பராலியவில் காலை 9.25 மணிக்கு ரயில் நிறுத்தப்பட்டு ரயிலில் பயணித்த பயணிகள் அனர்த்தத்தில் உயிர் நீத்தவர்களுக்கு இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்தினர்.

அதன் பிறகு ரயில் மாத்தளையைச் சென்றடைந்தது. பின்னர் அங்கிருந்து மீண்டும் அது கொழும்பு நோக்கி புறப்பட்டது.

அந்த அனர்த்தத்தில் சிக்கிய ரயில் என்ஜினே இந்த ரயிலில் பொருத்தப்பட்டிருந்தது. அத்தோடு அனர்த்தத்தில் சிக்கிய 5 ரயில் பெட்டிகளுடன் இன்று வேறுபல பெட்டிகளும் பொருத்தப்பட்டிருந்தன.

இந்த அனர்த்தத்தில் சிக்கி உயிர் தப்பிய இரண்டு ரயில் சாரதிகளே நேற்று இந்த ரயிலை செலுத்திச் சென்றமையும் குறிப்பிடத்தக்கதாகும். (சி)

# மடு ஆலயம் அடுத்த மாதம் திறப்பு

கொழும்பு, டிசெ.27

மடு தேவாலயம் ஜனவரி மாதத்தில் திறக்கப்பட உள்ளதாக இலங்கை அரசாங்கம்தெரிவித்துள்ளது.

இது குறித்து கிறிஸ்தவ விவகாரங்களுக்கான அமைச்சர் மில்ரோய் பெர்னாண்டோ கூறுகையில், தேவாலய மறுசீரமைப்புப் பணிகள் படையினரின் உதவியுடன் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருவதாகக் கூறினார்.

தேவாலயத்துக்கான மின்சார இணைப்புக்கள் மீள ஏற்படுத்தப்பட்டுள்ளபோதும் குடிதண்ணீர் விநியோக வேலைகள் உருவாக்கப்படவேண்டியுள்ளது என்றும் அவர் கூறினார்.

# சுயதொழில் பயிற்சி நிலையம் வெள்ளியன்று ஆரம்பம்

யாழ்ப்பாணம், டிசெ.27

'துளிர்கள்' சுயதொழில் பயிற்சி நிலையமும் 'மூன்ஸ்ரார்' நிறுவனமும் எதிர்வரும் வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு திருநெல்வேலியில் திறந்து வைக்கப்படவுள்ளன.

துளிர்கள் நிறுவன இயக்குநர் கே. எஸ். ரகு தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக இலங்கை தொழில் அதிகார சபையின் மாவட்ட இணைப்பாளர் ஆர்.அகிலன் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார்.

நேற்றைய உதயனில் வெளியான இது தொடர்பான செய்தியில் வலுவிழந்தோர் புனர்வாழ்வுச் சங்கத்தின் பெயர் தவறுதலாக இடம்பெற்றிருந்தமைக்கு வருந்துகின்றோம்.

# நாளை

| | |
|---|---|
| மார்கழி 13 | 28.12.2008 |
| | ஞாயிற்றுக்கிழமை |
| திதி: | பிரதமை |
| | மு.இ. 08.27வரை |
| நட்சத்திரம்: | பூராடம் |
| | மு.இ. 11.30வரை |
| சுப நேரம்: | [illegible] |
| ராகுகாலம்: | [illegible] |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நத்தார் கொண்டாட்டத்தில் 8 பேரை சுட்டுப் பொசுக்கிய 'நத்தார் பாப்பா'!

## கலிபோர்னியாவில் அதிர்ச்சி

கலிபோர்னியா,டிச. 27

அமெரிக்காவின் கலிபோர்னியா புறநகர்ப் பகுதியிலுள்ள வீடொன்றில் அமர்க்களமாக நிகழ்ந்துகொண்டிருந்த நத்தார் கொண்டாட்டத்தில் பங்குபற்றி அற்புதமாக ஆடிய 'நத்தார் பாப்பா' எட்டு பேரை சுட்டுக் கொன்றார். இறுதியில் வீட்டுக்கும் தீ மூட்டினார் என நேரில் கண்டவர்கள் தெரிவித்தார்கள்.

'நத்தார் பாப்பா' வேடத்தில் வந்த நபர் மூட்டிய தீக்கு இரு மாடிகளைக் கொண்ட வீடு இரையானது. மூவரைக் காணவில்லை. எரிகாயங்களுக்குள்ளானவர்களில் எட்டு வயது சிறுமி ஒருவரும் அடங்குவார் என நகர பொலிஸ் அதிகாரி பெட் புச்சனான் குறிப்பிட்டார்.

'நத்தார் பாப்பா' வேடத்தில் வந்தவர் பின்னர் தன்னைத் தானே சுட்டுத் தற்கொலை செய்துகொண்டுள்ளார். இவர் புரூஸ் ஜிப்ரி பார்டோ என அடையாளங் காணப்பட்டுள்ளார். 45 வயதான இவரின் சடலம், அவரது சகோதரரின் இல்லத்தில் கிடந்தது என்றும் பொலிஸ் அதிகாரி கூறினார்.

''புரூஸ் ஜிப்ரி தனது மனைவியை விட்டு ஒதுங்கி வாழ்ந்து வந்தவர். இவர்களுக்கிடையே பிணக்கு உண்டு. நத்தார் கொண்டாட்ட வைபத்தில் இவரது மனைவியும் இருந்திருக்கலாம். இந்த வீடும் உறவினர் வீடாக இருக்கலாமென கருதுகிறோம். விசாரணை மேற்கொள்ளப்பட்டுள்ளது'' என்றும் அவர் விவரித்தார்.

''துப்பாக்கிப் பிரயோகம் நடத்திவிட்டு புரூஸ் தனது சகோதரர் வீட்டுக்குச் சென்றுள்ளார். அங்கு அவர் தற்கொலைச் செய்துள்ளார். தலையில் ஒரே ஒரு துப்பாக்கிச் சூட்டுக் காயமிருந்தது'' என பிறிதொரு உள்ளூர் பொலிஸ் அதிகாரி மார்ட்டின் குரிஅரா, ஏ.பி. செய்தி நிறுவனத்துக்குத் தெரிவித்தார்.

''புதன்கிழமை இரவு இடம்பெற்ற நத்தார் கொண்டாட்ட வைபவத்தில் இருபத்தைந்துக்கு மேற்பட்ட விருந்தினர்கள் பங்குபற்றியிருந்தார்கள். குதூகலத்துக்கும் மத்தியில் திடீரென 'நத்தார் பாப்பா' வேடத்தில் இருந்தவர் தான் மறைத்து வைத்திருந்த கைத் துப்பாக்கியை எடுத்துக் கண்டபடிச் சுட ஆரம்பித்தார். பின்னர், வீட்டுக்குத் தீ 'மூட்டினார்'' என நேரில் கண்டவர்கள் குறிப்பிட்டார்கள்.

''எனது குடும்பத்தைச் சுட்டுவிட்டார்களே எனப் புலம்பியவாறு இளைஞர் ஒருவர் ஓடினார். அவ்வீடு தீப்பிழம்புகளுக்கு இரையாகிக் கொண்டிருந்தது'' என அயலவரான ஜேன் கிரிகோரி என்பவர் எசோசியேட்டட் பிரஸ் செய்தி நிறுவனத்துக்குத் தெரிவித்தார்.

''துப்பாக்கிப் பிரயோகம் செய்த நபர் 'நத்தார் பாப்பா' ஆடையைக் களைந்துவிட்டுச் சாதாரண உடையில் செல்வதைக் கண்டோம். அவர் துப்பாக்கியை அங்குமிங்கும் காட்டியவாறே வேகமாகச் சென்றார்'' என்றும் சிலர் குறிப்பிட்டனர்.

''சடலங்கள் எரிந்த வீட்டுக்குள் கிடந்தன. தீயால் அடையாளங் காணமுடியாதவாறு உருக்குலைந்தும், கருகியும் கிடந்தன'' என உள்ளூர் சடுதி மரண விசாரணை அதிகாரி எட்வின்டர் குறிப்பிட்டார். கொவினா என்னும் இப்புறநகர்ப் பகுதி, ஏஞ்சல்ஸின் கிழக்கே 25 மைல்(40 கிலோ மீற்றர்) தொலைவில் அமைந்துள்ளது.

# சீனாவில் பூகம்பம் ஒன்பது பேர் காயம்

பீஜிங், டிச. 27

சீனாவில் மியான்மர் எல்லைப் பகுதியில் நேற்று வெள்ளிக்கிழமை, அதிகாலை ஏற்பட்ட பூகம் பத்தில் சிக்கி 9 பேர் காயம் அடைந்தனர். இதில் இருவரின் நிலை கவலைக்கிடமாக உள்ளது.

தென்மேற்கு சீனாவிலுள்ள யன்னான் மாகாணத்தில் நேற்று அதிகாலை ஏற்பட்ட இந்தப் பூகம்பத்தின் தாக்கம் ரிச்டர் அளவு கோலில் 4.9 புள்ளிகளாகப் பதிவாகியுள்ளது என அதிகாரிகள் தெரிவித்தார்கள்.

ரூலி நகரத்தின் தலைவர் யங் யிகோ சீனாவின் அரசு செய்தி நிறுவனமான ஜின்ஹுவாவிற்குத் தெரிவிக்கையில், ''இப்பூகம்பத்தில் கட்டடங்கள் குலுங்கின. மக்கள் அச்சத்தால் வீடுகளை விட்டு வெளியேறி வெட்டவெளியில் நின்றார்கள். பல கட்டடச் சுவர்களில் விரிசல்கள் ஏற்பட்டுள்ளன'' - என்றார்.

# காதலர்கள் இனி வேண்டாம்!

## பிரான்ஸ் அதிபரின் மனைவி 'தாராளம்'

லண்டன், டிச. 27

''என் காதல் கணவரின் மனதை புண்படுத்த நான் விரும்பவில்லை. அதனால், இனிமேல் காதலர்களைத் தேடி அலையமாட்டேன்'' என்று பிரான்ஸ் அதிபர் நிகோலஸ் சர்கோசியின் மனைவி கர்லா புரூனி மனம் திறந்து பேசியுள்ளார்.

இத்தாலியின் முன்னாள் மொடல் அழகியான கர்லா புரூனி, ஆடைகளை மாற்றுவது போல் அடிக்கடி காதலரை மாற்றுவார். கோடிகள் கொட்டித்தரும் பத்திரிகைகளுக்கு நிர்வாண போஸ் கொடுப்பது இவரது பொழுதுபோக்கு. பொப் பாடகர் மைக் ஜாக்கர், அமெரிக்க கோடீஸ்வரர் டொனால் டிரம்ப் ஆகியோர் புரூனியின் காதலர் பட்டியலில் இடம்பெற்று 'ஓய்வு' பெற்றவர்களில் சிலர்.

கடந்த 6 மாதங்களுக்குமுன் புரூனி வெளியிட்ட புது ஆல்பத்தில், அவரது காதலர்கள் 30 பேரின் பெயர்கள் இடம்பெற்றிருந்தன. இப்போது 41 வயதாகிவிட்ட புரூனியின் வலையில் கடைசியாக விழுந்தவர், பிரான்ஸ் அதிபர் நிகோலஸ் சர்கோஷி (வயது 53).

அடிக்கடி இவருடன் வெளியில் சுற்றித் திரிந்த புரூனியால், நிகோலசின் மனைவி அவரை விட்டுப் பிரிந்துச் சென்றார். தங்களுக்கு இருந்த ஒரே தடை விலகிவிட்ட நிலையில், நிகோலசும், புரூனியும் கடந்த பெப்ரவரியில் திருமணம் செய்துகொண்டனர்.

ஆயுத விற்பனை பேரத்தில் கையெழுத்து இடுவதற்காக, அதிபர் நிகோலஸ் பிரேசில் வந்துள்ளார். அவருடன் மனைவி புரூனியும் வந்துள்ளார். இங்கு பத்திரிகை ஒன்றுக்கு புரூனி அளித்த பேட்டியில் கூறியுள்ளவை வருமாறு:-

நீண்ட நாள்கள் என்னால் தவறான பாதையில் செல்ல முடியாது. என் கணவரை நான் மிகவும் நேசிக்கிறேன். அவரது மனதை புண்படுத்த நான் விரும்பவில்லை. இனிமேல், நான் காதலர்களைத் தேடி அலையமாட்டேன். நாங்கள் புதிதாக திருமணம் ஆனவர்கள்.

நாங்கள் அதிகம் பேசமாட்டோம். முத்தத்தை மட்டுமே அதிகமாகப் பரிமாறிக் கொள்வோம். இனி காதலர்களை தேடுவது இல்லை என்ற முடிவை என்னுடைய திருமணத்துக்கு 2 நாள்களுக்கு முன்னர்தான் எடுத்தேன். அதை நன்கு பின்பற்றி வருகிறேன். இதன் மூலம் மக்களுக்கு என் மீது நம்பிக்கை பிறக்கும். உலகம் எப்படி மாறிக்கொண்டு இருக்கிறது என்றெல்லாம் புலம்பமாட்டார்கள் - என்று புரூனி கூறினார்.



இங்கிலாந்தில் நார்போக் என்னும் இடத்தில் நடைபெற்ற நத்தார் விழாவில் இங்கிலாந்து மகாராணியார் இரண்டாம் எலிசபெத் கலந்துகொண்டார். அவருக்குச் சிறுமிகள் மலர்க்கொத்து கொடுத்து வாழ்த்துத் தெரிவிக்கின்றனர்.

# ரொக்கெட் தாக்குதலை உடனடியாக நிறுத்துக; ஹமாஸ் தீவிரவாதிஎளுக்கு இஸ்ரேல் எச்சரிக்கை

ஜெரூசலேம், டிச. 27

இஸ்ரேல் மீதான ரொக்கெட் தாக்குதலை உடனடியாக நிறுத்துமாறு பலஸ்தீன ஹமாஸ் தீவிரவாத அமைப்புக்கு இஸ்ரேலிய தலைவர்கள் கடும் எச்சரிக்கை விடுத்துள்ளார்கள். தவறும் பட்சத்தில் பாரதூரமான அனர்த்தங்களுக்கு முகங்கொடுக்க நேரிடும் என்றும் அவர்கள் சுட்டிக் காட்டியுள்ளார்கள்.

ரொக்கெட் தாக்குதல் நீடித்தால், காசாவிலுள்ள ஹமாஸ்களின் நிலைகள் மீதும், பிறிதொரு தீவிரவாதக் குழுவான இஸ்லாமிய ஜிகாத்தின் இலக்குகள் மீதும் கடுந் தாக்குதல்கள் நடத்தப்படும். இது இறுதி நிமிட எச்சரிக்கை என இஸ்ரேலிய பிரதமர் ஈகுட் ஒல்மேர்ட் தெரிவித்துள்ளார்.

''இஸ்ரேலிய பிரஜைகளை இலக்கு வைத்து பலஸ்தீன போராளிகள் மிலேச்சத்தனமான தாக்குதல்களை மேற்கொள்கிறார்கள். அவற்றால் அப்பாவிப் பெண்கள், குழந்தைகள், சிறுவர்கள் ஆகியோரும் கொல்லப்படுகின்றனர். இது விடயத்தில் இஸ்ரேல் தொடர்ந்தும் சகிப்புத் தன்மையைக் கடைப்பிடிக்க மாட்டாது'' என வெளிவிவகார அமைச்சர் சிபி லிவ்னி தமது எச்சரிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

இஸ்ரேலிய வெளிவிவகார அமைச்சர் சிபி லிவ்னி அம்மையார் எகிப்திய தலைநகரான கெய்ரோவில், எகிப்திய தலைவர்களுடன் பேச்சுகள் நடத்தினார். போர் நிறுத்தம் முடிவுற்ற பின்னர், ஹமாஸ் போராளிகள் இஸ்ரேல் மீது மேற்கொண்டுவரும் ரொக்கெட் தாக்குதல்கள், இஸ்ரேல் தரப்பிலான பாதிப்புகள் ஆகியவற்றை இச்சந்திப்பில் இவர் விவரித்தார்.

''இஸ்ரேலுக்கும், ஹமாஸுக்குமிடையிலான 6 மாத கால யுத்த நிறுத்த உடன்படிக்கை கடந்த வாரம் முடிவடைந்தது. அது முதல் காசாவிலிருந்து இஸ்ரேல் மீது ஐம்பது ரொக்கெட் தாக்குதல்கள் நடத்தப்பட்டுள்ளன. இவற்றில் எண்மர் கொல்லப்பட்டுள்ளனர். பலர் காயமடைந்துள்ளனர்'' என்றும் அவர் சுட்டிக் காட்டினார்.

''சமாதான வாழ்வே எங்களது அபிலாஷையாகும். இதனை ஹமாஸ் புரிந்துகொள்ள வேண்டும். அதேவேளை, இஸ்ரேல் தொடர்ந்தும் சகிப்புத்தன்மையைக் கடைப்பிடிக்கும் என்றும் அது எண்ணிவிடக்கூடாது. நாங்கள் பொறுத்தது போதும்'' என்றும் சிபி லிவ்னி அம்மையார் தெரிவித்துக்கொண்டார்.

இஸ்ரேல் பிரதமர் ஈகுட் ஒல்மேர்ட் அரேபிய தொலைக்காட்சி நிறுவனமான அல்-அரேபியாவுக்குத் தாம் அளித்த பேட்டியொன்றில், ''இஸ்ரேலிய அப்பாவி சிவிலியன்கள் மீது போராளிகள் மிலேச்சத்தனமாக மேற்கொள்ளும் தாக்குதல்களை காசா குடியிருப்பாளர்கள் தடுக்க வேண்டும்'' எனக் கேட்டுக்கொண்டார்.

# பலஸ்தீன ஆயுதக் குழுவின் தலைவருக்கு 30 வருடச் சிறை

பலஸ்தீன ஆயுதக்குழு ஒன்றின் தலைவருக்கு இஸ்ரேலிய நீதிமன்றமொன்று 30 வருட சிறைத்தண்டனை விதித்துள்ளது.

பலஸ்தீன விடுதலைக்கான மக்கள் முன்னணி என்னும் அமைப்பின் தலைவரான அஹமட் சதாத் என்பவரே தாக்குதல்கள் தொடர்பில் குற்றங்காணப்பட்டவராவார். முன்னதாக 2001ஆம் ஆண்டில் இஸ்ரேலிய அமைச்சரவை உறுப்பினர் ஒருவரைக் கொலை செய்யத் திட்டமிட்டார் என்ற குற்றச்சாட்டிலிருந்து அவர் விடுவிக்கப்பட்டிருந்தார்.

இந்தக் கொலை தொடர்பில் அதே அமைப்பைச் சேர்ந்த மேலும் இருவருக்கு நீண்ட காலச் சிறைத்தண்டனை வழங்கப்பட்டுள்ளது.

# பாகிஸ்தானியர் என நிரூபிக்கப்பட்டால்தான் மும்பைத் தீவிரவாதிக்குச் சட்ட உதவி

## அந்நாட்டு உள்துறை அமைச்சு அதிகாரி தெரிவிப்பு

இஸ்லாமாபாத், டிச. 27

மும்பைத் தாக்குதலின்போது கைதான தீவிரவாதி அஜ்மல் அமீர் இமான், பாகிஸ்தானைச் சேர்ந்தவர் என்பது நிரூபணமானால் மட்டுமே, அவருக்குச் சட்ட உதவி அளிக்கப்படும் என பாகிஸ்தான் உள்துறை அமைச்சக தலைமை அதிகாரி ரகுமான் மாலிக் தெரிவித்தார்.

பாகிஸ்தானின் தேசிய தகவல் தொகுப்பு மற்றும் பதிவு ஆணைய தலைமையகத்தில் நடந்த நிகழ்ச்சியில் பங்கேற்ற அவர், ''மும்பையில் தாக்குதல் நடத்தியபோது கைதான தீவிரவாதி அஜ்மல் அமீர் இமான் பற்றிய விவரங்களைப் பரிசோதித்தோம். எங்களின் தகவல் தொகுப்பில் அவரைப் பற்றிய விவரங்கள் இல்லை. அனைத்து பதிவு ஆவணங்களையும் நாங்கள் முழுமையாக பரிசிலித்து விட்டோம். அதனால், அவர் பாகிஸ்தானைச் சேர்ந்தவரா என்பதை எங்களால் உறுதி செய்ய முடியவில்லை'' என்றார்.

''அவர் எந்த நாட்டைச் சேர்ந்தவர் என்பது தெரியாமல், தூதரக ரீதியாக அவருக்கு எப்படி உதவி செய்ய முடியும்? அஜ்மல் கடிதம் எழுதியுள்ளார் என்பதற்காக அவருக்கு நாங்கள் உதவி செய்ய முடியாது. அவர் பாகிஸ்தானைச் சேர்ந்தவர் என்பது நிரூபிக்கப்பட வேண்டும். இல்லையெனில், அவருக்கு நாங்கள் சட்ட உதவி அளிக்க வாய்ப்பில்லை'' என்றும் கூறினார்.

அதேவேளை, பாகிஸ்தானின் மொத்த மக்கள் தொகையான 16 கோடி பேரில், ஆறு கோடி பேர் பற்றிய விவரங்கள் மட்டுமே தேசிய தகவல் தொகுப்பில் இடம்பெற்றுள்ளன. அதனால், அஜ்மலின் பெயர் அதில் இடம்பெற்றிருக்க வாய்ப்பில்லை என இதர சில தகவல்கள் தெரிவிக்கின்றன.

# பாகிஸ்தானில் சிறுமிகள் பள்ளிக்கூடம் செல்லத் தடை!

## தலிபான் தீவிரவாதிகள் மிரட்டல்

இஸ்லாமாபாத், டிச. 27

பாகிஸ்தானில் சிறுமிகள் பள்ளி செல்ல தலிபான் தீவிரவாதிகள் தடை விதித்துள்ளனர். தங்களின் உத்தரவை யாராவது மீற முற்பட்டால், அவர்கள் கொல்லப்படுவர் என்றும் எச்சரித்துள்ளனர். ஆப்கானிஸ்தானில் பெண்கள் கல்வி கற்க தலிபான் தீவிரவாதிகள் தடை விதித்துள்ளனர். அதே பாணியை தற்போது பாகிஸ்தானின் வட மேற்குப் பகுதியிலும் அமுல்படுத்தி வருகின்றனர்.

சிறுமிகளை பள்ளிக்கு அனுப்பக்கூடாது என எச்சரித்துள்ள தலிபான்கள், ''மீறுவோர் மரண தண்டனையை சந்திக்க நேரிடும். மேலும், பள்ளிகளும் குண்டு வைத்துத் தகர்க்கப்படும். இல்லையேல் தீ வைத்து எரிக்கப்படும்'' என எச்சரித்துள்ளனர்.

இது தொடர்பாக பாகிஸ்தான் சுவாத் பள்ளத்தாக்கு பகுதியின் தலிபான் உதவிக் கொமாண்டர் ஷா தவ்ரன், ''சிறுமிகளைப் பள்ளிக்கு அனுப்புவதை ஜனவரி 15 ஆம் திகதிக்குள் நிறுத்திவிடவேண்டும். மேலும் அரசு மற்றும் தனியார் பள்ளிகளும் சிறுமிகளை பள்ளியில் சேர்ப்பதை நிறுத்திக்கொள்ளவேண்டும். இல்லையெனில், அனைத்து பள்ளிகளும் குண்டு வைத்துத் தகர்க்கப்படும் அல்லது தீ வைத்து எரிக்கப்படும்'' எனக் கூறியுள்ளார்.

இந்தத் தடையுத்தரவை வெளியிடுவதற்கு முன்னர், சுவாத் பள்ளத்தாக்கிலுள்ள நகரங்கள் மற்றும் கிராமங்களில் இருக்கும் பள்ளிகளுக்கு சிறுமிகளைச் செல்லவிடாமல் தலிபான்கள் தடுத்தனர். மேலும், பள்ளிக்கு வரக்கூடிய ஆசிரியர்களும் பர்தா அணிந்து வரவேண்டும் என கடும் உத்தரவிட்டனர்.

சுவாத் பகுதியில் தலிபான்களுக்கு எதிராக பாக். படையினர் அதிரடி தாக்குதல் நடத்தினாலும், தலிபான்களின் கெடுபிடி காரணமாக இப்பகுதியில் ஏராளமான பள்ளிகள் மூடப்பட்டுள்ளன அல்லது அழிக்கப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

''பெண்கள் கல்வி கற்பது இஸ்லாம் மதத்திற்கு விரோதமானது'' எனத் தெரிவித்துள்ள இப்பகுதி தலிபான் கொமாண்டர் மௌலானா பாசியுல்லா, பாடல்கள் மற்றும் திரைப்படங்கள் பதியப்பட்ட வீடியோ, ஆடியோ 'சிடி'க்கள் மற்றும் 'விசிடி'க்கள் விற்கும் கடைகள் மீதும், முடி திருத்தும் கடைகள் மீதும் தாக்குதல் நடத்தும்படியும் தலிபான் தீவிரவாதிகளுக்கு உத்தரவிட்டுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





கடந்த மாதம் ஏற்பட்ட இயற்கை அனர்த்தத்தினால் அழிவுகளைச் சந்தித்த செலிங்கோ (வி.ஐ.பி) நிறுனத்தின் வாடிக்கையாளர்களுக்கு நஷ்டஈடு வழங்கும் வைபவம் நேற்று ஸ்ரான்லி வீதியில் அமைந்துள்ள அந்த நிறுவனக்காரியாலயத்தில் நடைபெற்றது. இந்த வைபவத்தில் விருந்தினராகக் கலந்துகொண்ட மக்கள் வங்கியின் வடவலய உதவிப் பொது முகாமையாளர் ரி.கே.ஆனந்தராஜா, தேசிய சேமிப்பு வங்கியின் யாழ்.கிளை முகாமையாளர் எம்.அருளானந்தம், இலங்கை வங்கியின் ஓய்வுபெற்ற உதவிப் பொதுமுகாமையாளர் கே.பாலசுப்பிரமணியம், கொமர்ஷல் வங்கியின் முகாமையாளர் எஸ்.ரவீந்திரா, த பினான்ஸ் கம்பனி முகாமையாளர் எம்.ரகுநாதன், செலான் வங்கியின் யாழ்.கிளை முகாமையாளர் சு.கி.அரவிந்தன், செலிங்கோ (வி.ஐ.பி) யாழ். முகாமையாளர் கே.தவசீலன் ஆகியோர் வாடிக்கையாளர்களுக்கு நஷ்டஈட்டுக் கொடுப்பனவுகளை வழங்குவதைப் படங்களில் காணலாம்.

இந்த வைபவத்தின்போது மொத்தம் 4 கோடி 38 லட்சத்து 48 ஆயிரத்து 108 ரூபா நஷ்ட ஈடாக வழங்கப்பட்டது.

# ஒரு பாடசாலையின் வளர்ச்சியும், அபிவிருத்தியும் அது சார்ந்துள்ள சமூகத்தின் கைகளிலேயே தங்கியுள்ளன

## பரிசளிப்பு விழாவில் உதவிக் கல்விப் பணிப்பாளர்

சித்தங்கேணி, டிசெ.27

ஒரு பாடசாலையின் வளர்ச்சியும் அதன் அபிவிருத்தியும் அது சார்ந்துள்ள சமூகத்தின் கைகளிலேயே தங்கியுள்ளது. இது எங்கள் பாடசாலை, அதன் வளர்ச்சிதான் எமது கிராமத்துக்கு பெருமை தேடித்தரவல்லது என்பதனை சமூகத்தில் உள்ள ஒவ்வொருவரும் உணரவேண்டும்.

இவ்வாறு தெரிவித்தார் உதவிக் கல்விப் பணிப்பாளர் செல்வி வி.கந்தையா. வடலியடைப்பு சைவப்பிரகாச வித்தியாசாலையின் பரிசளிப்பு விழாவும், நிறுவுநர் தின விழாவும் அண்மையில் இடம்பெற்றன.

இந்நிகழ்வில் முதன்மை விருந்தினராக கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் தெரிவித்தவை வருமாறு:

இப்பாடசாலையானது ஓர் ஆரம்பப் பாடசாலை. இங்கு சைவமும், தமிழும் தழைத்தோங்க வேண்டும் என்ற நோக்கோடு ஸ்தாபிக்கப்பட்டதாக இங்கு நிறுவுநர் பேருரை ஆற்றியவர் கூறினார். எனவே இப் பாடசாலை எந்த நோக்கத்திற்காக ஸ்தாபிக்கப் பட்டதோ அதை பேணிக்காக்க வேண் டியது இந்தச் சமூகத்தின் கடமையாகும்.

இங்கு ஆசிரியர் வளம் இருந்தும் மாணவ வளமே மிகக்குறைவாகக் காணப்படுகிறது. இக்குறையை நிவர்த்தி செய்வது இந்தச் சமூகத்தின் கைகளிலேயே தங்கியுள்ளது. எனவே நீங்கள் ஒவ்வொருவரும் உங்களது பிள்ளைகள் மற்றும் அயலவர் பிள்ளைகள் ஆகியோரை இந்த ஆரம்பப் பாடசாலையில் இணைத்து இந்தப் பாடசாலையை முறையாகப் பயன்படுத்தவேண்டும். இங்கும் முறையான கல்விச் செயற்பாடுகள் நடைபெறுகின்றன. இந்த சிறிய பாடசாலையிலேயே இம்முறை மூன்று மாணவர்கள் புலமைப் பரிசில் பரீட்சையில் தேர்ச்சி அடைந்துள்ளனர். இது அடுத்தமுறை அதிகரிக்கவேண்டும்.

பெற்றோர்களாகிய நீங்கள் அன்று கற்ற கல்வி முறைமைக்கும் இன்று உங்கள் பிள்ளைகள் கற்கின்ற கல்வி முறைமைக்கும் நிறைய வேறுபாடு உண்டு. எனவே நீங்கள் பாடசாலை அதிபர், ஆசிரியருடன் நெருங்கிய உறவைப் பேணி இன்றைய மறுசீரமைக்கப்பட்ட கல்வி முறைமையை அறிந்து அதன்படி பிள்ளைகளை வழிநடத்துவதன் மூலம் மாணவர்களின் தேர்ச்சிமட்டத்தை அதிகரிக்க முடியும்.

இன்று இங்கு கல்வியில் முன்னிலையில் உள்ள மாணவர்களைத் தெரிவுசெய்து பரிசில்கள் வழங்கிப் பாராட்டப்பட உள்ளார்கள். இதையிட்டு ஏனைய மாணவர்கள் மனங்கோணாது அடுத்தமுறை இந்தப் பரிசை தாங்கள் வெல்வதற்காக முயற்சிக்கவேண்டும் - என்றார்.

வித்தியாசாலை அதிபர் வ.அம்பலநாதன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் நிறுவுநர் பேருரையை நிறுவுநர் வழித்தோன்றலில் ஒருவரான உடுவில் மான்ஸ் பாடசாலை அதிபர் பா.பாலச்சந்திரனும் ஆசியுரையை அருணோதயா கல்லூரி ஆசிரியர் பிரம்மஸ்ரீ இ.பிரதாபசர்மாவும் நிகழ்த்தினர்.

சிறப்பு விருந்தினராக ஆசிரிய ஆலோசகர் க.செல்வராசு, பொதுச்சுகாதார பரிசோதகர்களான க.நிர்மலாநந்தன், ஜெ.உமாசுதன் ஆகியோரும் கௌரவ விருந்தினராக ஓய்வுபெற்ற ஆசிரியர் ச.திருக்குமாரும் கலந்துகொண்டனர். (202)

## கிளைக்குழுக் கூட்டம்

இணுவில், டிசெ.27

யாழ்.மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் பிரதேச வாரியாக தனது கிளைக் குழுக்களைத் தெரிவுசெய்து வருகிறது.

இதன் ஒரு கட்டமாக வலிகாமம் தெற்குப் பிரதேசத்துக்கான கிளைக்குழுத் தெரிவு இன்று சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு மானிப்பாய் வீதி, மருதனார்மடம், இணுவிலில் அமைந்துள்ள யாழ்ப்பாணக் கல்லூரி விவசாய நிறுவனத்தின் மண்டபத்தில் இடம்பெற உள்ளது. (202-45)

## மார்கழித் திருவிழா

யாழ்ப்பாணம், டிசெ.27

பொன்னாலை வரதராசப் பெருமாள் ஆலய மார்கழி மாதத் திருவிழா எதிர்வரும் செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெறவுள்ளது. தேர்த்திருவிழா எதிர்வரும் 7ஆம் திகதி புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கும், அடுத்தநாள் வியாழக்கிழமை தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும். (204-28)

## யாழ்.நகரில் கட்டாக்காலி கால்நடைகளால் தொல்லை

யாழ்ப்பாணம், டிசெ.27

யாழ்.நகரில் கட்டாக்காலியாகத் திரியும் கால்நடைகளின் தொல்லை அதிகரித்துக் காணப்படுகின்றது.

ஆனைப்பந்தி வீதி, கஸ்தூரியார் வீதி மற்றும் முனீஸ்வரன் வீதி போன்றவற்றில் கட்டாக்காலியாகத் திரியும் ஆடுகள் மற்றும் மாடுகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளன. வீதிகளின் குறுக்கே நிற்கும் இந்த கால் நடைகளால் போக்குவரத்துக்கு இடைஞ்சல் ஏற்படுவதோடு விபத்துக்களும் ஏற்படுகின்றன.

நேற்றுமுன்தினம் ஆஸ்பத்திரி வீதியில் வீதிக்கு நடுவே படுத்திருந்த மாடு ஒன்றுடன் மோட்டார் சைக்கிளில் பயணித்த ஒருவர் மோதுண்டு காயப்பட்டார்.

அத்துடன் இதர போக்குவரத்து வாகனங்களும் இவ்வீதியின் குறுக்கே நிற்கும் கால்நடைகளால் போக்குவரத்து செய்வதற்குச் சிரமப்படுவதைக் காணமுடிந்தது. (202-224)

## 25 வருடங்களாகத் திருத்தப்படாத புங்குடுதீவு கழுதைப்பட்டி வீதி

யாழ்ப்பாணம், டிசெ.27

புங்குடுதீவு, சோனாவோடை கழுதைப் பட்டி வீதி கடந்த 25 வருடங்களுக்கு மேலாகத் திருத்தியமைக்கப்படாத நிலையில் உள்ளது. அத்துடன் அண்மையில் ஏற்பட்ட 'நிஷா' அனர்த்தத்தினால் இவ்வீதி மேலும் சேதமடைந்துள்ளது. வீதியில் மூன்று பகுதிகள் ஊடாக வெள்ளம் வெளியேறியதால் புங்குடுதீவுப் பகுதியில் உவர்த்தன்மை மேலும் அதிகரிக்க வாய்ப்புள்ளதாக அப்பகுதி மக்கள் கூறுகின்றனர்.

குறிப்பிட்ட வீதி நீண்டகாலமாகச் சேதமடைந்துள்ள நிலையில் இந்த வீதியைத் திருத்தியமைக்குமாறு வீதி அபிவிருத்தி அதிகார சபையிடம் ஏற்கனவே கோரிக்கை விடுக்கப்பட்டது. எனினும் அதற்கான நடவடிக்கைகள் எதுவும் இடம்பெறவில்லை. தற்போதைய வெள்ளம் காரணமாக வீதி முழுமையாச் சேதமடைந்துள்ளதாக வேலணைப் பிரதேச செயலர் மு.நந்தகோபாலன் தெரிவித்தார்.

மழைநீரைச் சேமித்து இப்பிரதேசத்தின் உவர்த்தன்மையைக் கட்டுப்படுத்தும் செயற்பாடுகளும் வீதி உடைவின் காரணமாகப் பாதிக்கப்பட்டுள்ளது. வீதிச் சேதத்தினால் புங்குடுதீவில் மழைநீர் தேங்கி நிற்காது முழுமையாக வெளியேறிவிட்டது. உடைந்த பகுதிகள் ஊடாக கடல்நீர் உட்புகுந்து கொண்டதால் உவர்த்தன்மை மேலும் அதிகரிக்கவுள்ளது எனப் பொது மக்கள் சுட்டிக்காட்டுகின்றனர். (202-11)

## நுவரெலியாவில் 71 ஆயிரம் பேரிடம் தே.அ.அட்டை இல்லை

கொழும்பு, டிசெ.27

நுவரெலியா மாவட்டத்தில் 71 ஆயிரம் பேரிடம் தேசிய அடையாள அட்டைகள் இல்லை என்று நுவரெலியா மாவட்ட செயலாளர் வி.பி.குமணசிறி தெரிவித்துள்ளார்.

இதனால் எதிர்வரும் மாகாணசபைத் தேர்தலில் அவர்கள் வாக்களிக்க முடியாத நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

அவர்களில் அதிகமானவர்கள் தமிழர்கள் என்றும் அவர்களிடம் பிறப்புச் சான்றிதழ்கள் இல்லாமையே அடையாள அட்டைகளைப் பெறமுடியாமைக்குக் காரணம் என்றும் மாவட்ட செயலாளர் சொன்னார்.

தேர்தலில் வாக்களிப்பவர்கள் தங்களது ஆள் அடையாளத்தை நிரூபிக்க தேசிய அடையாள அட்டைகளை நிச்சயம் காட்டவேண்டும் என்பதனாலேயே இந்த 71 ஆயிரம் பேரும் வாக்களிக்க முடியாத நிலையை எதிர்நோக்கியுள்ளனர். (சி)

## வாழ்வாதார உதவி

கோப்பாய், டிசெ.27

சமுர்த்தி கமநெகும திட்டத்தின்கீழ் தெரிவு செய்யப்பட்ட இருபாலை கிழக்கு வசந்தபுரம் கிராமத்தில் வாழ்வாதாரத் திட்டத்தில் தெரிவுசெய்யப்பட்ட ஐவருக்கு கோழிவளர்ப்பிற்காக கோழிக்குஞ்சுகளும், இருவருக்கு மாடு வளர்ப்பிற்காக மாடுகளும் வழங்கப்பட்டுள்ளன. (202-72)

## கண்காட்சியை ஒட்டி பொதுநூலகம் மூடப்பட்டிருக்கும்

யாழ்ப்பாணம், டிசெ.27

யாழ்.மத்திய கல்லூரியில் இன்று ஆரம்பமாகவுள்ள வர்த்தகக் கல்விக் கண்காட்சியை முன்னிட்டு கண்காட்சி முடிவடையும் வரை யாழ்.பொது நூலகம் பொதுமக்கள் பாவனைக்கு மூடப்பட்டிருக்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

கண்காட்சி முடிவடைந்ததும் நூலகம் மீண்டும் பொதுமக்கள் பாவனைக்கு விடப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

பாதுகாப்புக்காரணங்களுக்காகவே நூலகம் மூடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப் படுகிறது. (202-120)

## நாளையே கப்பல் சேவை

யாழ்ப்பாணம், டிசெ.27

காங்கேசன்துறைக்கும் திருகோணமலைக்கும் இடையிலான பயணிகள் கப்பல் சேவை இன்று இடம்பெறாது. நாளை ஞாயிற்றுக்கிழமை வழமைபோல் இடம்பெறும் என யாழ்.அரச அதிபர் அறிவித்துள்ளார்.

மாவட்டச் செயலகத்தில் பிரயாணத்தினை மேற்கொள்வதற்கு அனுமதிச் சீட்டைப் பெற்றுக்கொண்டவர்கள் தமது அனுமதிச் சீட்டில் குறிப்பிட்டுள்ள திகதிக்கு மறுதினம் தமது பயணத்தை மேற்கொள்ளுமாறும் அரசாங்க அதிபர் அறிவித்துள்ளார். (202)

## ஓய்வுபெற்ற கிராம அலுவலர்களுக்கு மீள் நியமனம்

யாழ்ப்பாணம், டிசெ.27

தமது பிரதேச செயலகப் பிரிவில் உள்ள வெற்றிடங்களில் அல்லது தமது பிரிவு அல்லாத வேறு பிரதேச செயலர் பிரிவுகளில் உள்ள வெற்றிடங்களில் பணியாற்ற விரும்பும் ஓய்வுபெற்ற கிராம அலுவலர்கள் ஒப்பந்த அடிப்படையில் மீள் நியமனத்திற்கு விண்ணப்பிக்கலாம்.

உரிய தகவல்களைப் பெற்று மீள்நியமனத்திற்கு சிபார்சு செய்யுமாறு யாழ்.மாவட்டத்தின் பிரதேச செயலர்கள், உதவி அரசாங்க அதிபர்களை யாழ்.செயலகம் கேட்டுள்ளது.

இது தொடர்பான கடிதம் பிரதேச செயலர்களுக்கும் உதவி அரசாங்க அதிபர்களுக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. (202-120)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சேர்.ஜோன் கொத்தலாவலை வரவேற்பில் ஹன்டி பேரின்பநாயகம் காட்டிய சாணக்கியம்

## ஞாபகார்த்த நிகழ்வில் பிரமுகர்கள் புகழாரம்

யாழ்ப்பாணம், டிசெ.27

சேர்.ஜோன் கொத்தலாவலையைக் கொக்குவில் இந்துக் கல்லூரிக்கு அழைக்கும் முகமாக, மாணவர்களும், ஆசிரியர்களும் காங்கேசன்துறை வீதியின் இரு மருங்கிலும் அணிவகுத்து நின்று கௌரவிக்க வேண்டும் என அன்றைய அரச அதிபர் ஹன்டி பேரின்பநாயகத்திடம் வலியுறுத்தினார்.

இந்தச் செயற்பாடு பாடசாலைச் சமூகத்தின் கௌரவத்தைப் பாதிக்கும் எனக்கருதி, அதற்கு மாற்றீடாக பாடசாலைக்குள் வரவேற்பதாகத் தெரிவித்தார் ஹன்டி பேரின்பநாயகம். இவ்வாறு பிரதமரையும் கௌரவித்து, ஆசிரியர்களின் கௌரவத்தையும் காப்பாற்றியவர் ஆவார்.

இவ்வாறு ஹன்டி பேரின்பநாயகத்தின் 31 ஆவது ஞாபகார்த்த விழாவிலே யாழ். இந்துக் கல்லூரியின் இளைப்பாறிய அதிபர் அ.பஞ்சலிங்கம் கூறினார்.

இந்த நிகழ்வு வட்டுக்கோட்டை மூளாய் வீதியில் அமைந்துள்ள ஸ்ரீ வாசிகசாலை மண்டபத்தில் சி.இராமச்சந்திரா தலைமையில் நடைபெற்றது.

பிரதமரின் வருகையை எதிர்த்து பாடசாலையில் கிடுகால் வேயப்பட்ட வகுப்பறையை பொஸ்பரஸ் என்னும் பொருளைப் பாவித்து எரிப்பதில் வெளிக்காட்டப் பட்டது என மேலும் அவர் தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் கொக்குவில் இந்துக் கல்லூரியின் முன்னாள் அதிபர் பொ.கமலநாதன் உரையாற்றுகையில்:

பாடசாலையில் கிடுகால் வேயப்பட்ட வகுப்பறை எரிந்திருப்பதைப் பார்த்து ஹன்டி பேரின்பநாயகம் கவலை அடைய வில்லை. எல்லாம் நன்மைக்குத்தான் எனக் கருதினார்.

இந்தப் பாடசாலையில் ஓலையால் வேயப்பட்ட வகுப்பறை இனி ஒருபோதும் இருக்காது என்று தெரிவித்து அத்தோடு புதிய கட்டடம் நிர்மாணிக்கக் கடுமையாக உழைத்தார்.

நிதி சேர்ப்பதற்கு களியாட்ட விழா நடத்தப்பட்டது. வெளிநாடு சென்று நிதி சேகரிக்கப்பட்டது. பலர் ஆர்வத்துடன் கடன் வழங்கினாலும், சிலர் அவ்வாறு நடந்து கொள்ளவில்லை. இருப்பினும் எல்லோரையும் ஒரேமாதிரிக் கௌரவித்தார்.

பாடசாலையில் பௌதிகவளம் மட்டுமல்ல, மாணவர்களின் கல்வித் தரமும் மேம்பட்டது - எனக் கூறினார்.

இளைப்பாறிய முன்னாள் தபாலதிபர் மு.சண்முகம் உரையாற்றுகையில்- ஹன்டிப் பேரின்பநாயகம் மாணவர்,ஆசிரியர் காலத்திலும் காந்திய சிந்தனையால் ஈர்க்கப்பட்டு பின் முழுமையான காந்தியவாதியானார்.

இந்திய் தேசிய விடுதலைப் போராட்டம் அவரின் சிந்தனையையும், செயல்பாட்டையும் ஆக்கிரமித்தது.

இந்திய தேசிய விடுதலைப் போராட்டத்துக்கு முதன் நிலைத் தலைவர்கள் பலர் யாழ்ப்பாணம் வரக் காரணமாக இருந்தார். பாடசாலையில் நடைபெற்ற களியாட்ட விழாவிற்கு என்.எஸ்.கிருஷ்ணன் உட்பட தென் இந்திய திரைப்பட கலைஞர்களையும் வரவழைத்தார் எனக் கூறினார்.

முன்னாள் தொழிற்சங்கவாதியான வே.சிவராசா கூறியதாவது:

முழு இலங்கைக்கும் பூரண சுதந்திரத்தைக் கோரிச் செயற்பட்டார். இந்தநோக்கத்தைச் செயற்படுத்த இளைஞர் காங்கிரசை அமைப்பதில் முனைப்புடன் செயற்பட்டார்.

இவரின் பல்வேறுபட்ட முயற்சியின் பிரதிபலிப்பால் தென் இலங்கையில் பல தலைவர்களின் அங்கீகாரத்தையும், மதிப்பையும் பெற்றார்.

இலங்கை ஆசிரியர் சங்கத்தில் தன்னை முழுமையாக ஈடுபடுத்திச் செயற்பட்டதோடு, அகில இலங்கை ஆசிரியர் சங்கத்திலும் இணைந்து செயற்பட்டு, நாட்டின் முழு ஆசிரிய சமூகத்திற்கும் சேவை செய்தார் - என்றார். (204)

# யாழ்.வலயப் பாடசாலைகளுக்கு சீருடை விநியோகம்

யாழ்ப்பாணம், டிசெ.27

யாழ்.கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளுக்கு நாளை மறுதினம் திங்கட்கிழமை தொடக்கம் யாழ்.இந்து மகளிர் கல்லூரியில் வைத்து சீருடை விநியோகிக்கப்படவுள்ளது.

நாளை மறுதினம் திங்கட்கிழமை உயர்தரப் பாடசாலைகளுக்கும் மறுநாள் செவ்வாய்க்கிழமை கனிஸ்ட இடைநிலைப் பாடசாலைகளுக்கும் 31 ஆம் திகதி புதன்கிழமை ஆரம்பப்பாடசாலைகளுக்கும் சீருடைத்துணிகள் வழங்கப்படவுள்ளன.(203)




இலங்கை வங்கியில் 40 ஆண்டுகள் சேவையாற்றி வவுனியா மேற்றரக் கிளையில் சிரேஷ்ட முகாமையாளராகப் பதவி வகித்து ஓய்வுபெற்ற க.சிவபாலனுக்கு அண்மையில் சேவைநலன் பாராட்டு விழா இடம்பெற்றது.

வவுனியாக் கிளை ஆளணி முகாமையாளர் செல்வி சி.அகல்யா பாராட்டுரை வழங்குவதையும் விழா நாயகன், பாரியார் மற்றும் சிரேஷ்ட முகாமையாளர் க.விக்னேஸ்வரன் ஆகியோர் அமர்ந்திருப்பதையும் படத்தில் காணலாம்.

# குடாநாட்டில் குறைந்த விலையில் மென்பான வகைகள் விற்பனை

நவாலி, டிசெ.27

குடாநாட்டிலுள்ள வர்த்தக நிலையங்களில் சில மென்பான வகைகள் மிகக் குறைந்த விலையில் விற்பனை செய்யப்படுவதனால் மக்கள் முண்டியடித்துக் கொண்டு அவற்றை பெற்றுக் கொள்கின்றனர்.

இந்த மென்பான வகைகள் காலாவதியாவதற்கு இன்னும் சில தினங்களேயிருப்பதனால் அவை 90 ரூபா முதல் 110 ரூபா வரை விற்பனை செய்யப்படுகின்றன.

பண்டிகைத் தினங்களையொட்டி பலரும் இவற்றை பெற்றுக் கொள்வதைக் காண முடிந்தது. (202-100-224-131-28)

# பங்கீட்டு அடிப்படையில் வழங்கப்பட்ட உருளைக்கிழங்கு பலருக்குக் கிடைக்கவில்லை

யாழ்ப்பாணம், டிசெ.27

யாழ்.மாவட்டத்தில் பங்கீட்டு அடிப்படையில் விநியோகம் செய்யப்பட்ட உருளைக்கிழங்கு பல குடும்பங்களுக்கு கிடைக்கவில்லையென தெரிவிக்கப்படுகின்றது.

முதலில் சென்றவர்கள் உருளைக்கிழங்கைப் பெற்றபோதிலும் இரண்டாம், மூன்றாம் நாள்களில் சென்றவர்களுக்கு கிடைக்கவில்லையெனவும் தெரிய வருகின்றது.

சில இடங்களில் கொண்டு வரப்பட்ட உருளைக்கிழங்குளில் ஒரு பகுதி பழுதடைந்துள்ளமையால் வழங்க முடியவில்லையெனவும் மற்றும் சில இடங்களில் முடிவடைந்து விட்டது. அடுத்த கட்டத்தில் தரப்படும் எனவும் கிளை முகாமையாளர்களினால் தெரிவிக்கப்பட்டு திருப்பி அனுப்பப்பட்ட சம்பவங்களும் இடம்பெற்றுள்ளன.

செல்வாக்கு மிக்கவர்களுக்கு பங்கீட்டு அளவுக்கு மேலதிகமாக உருளைக்கிழங்குகள் வழங்கப்பட்ட சம்பவங்களும் கூட இடம்பெற்றுள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

(202-68)

# வாசகர் திருமுகம்

## ஆசிரியர் இடமாற்றமும் யாழ்.கல்வி நிர்வாகமும்

யாழ்.மாவட்ட ஆசிரியர் , அதிபர்களின் இடமாற்ற விடயத்தில் ''இலங்கை ஆசிரியர் தேசிய இடமாற்றக் கொள்கையை'' நடைமுறைப் படுத்துவதற்கு தயங்குவது ஏன்? ஆசிரியர், அதிபர்கள், கல்வி அதிகாரிகள் ஒரே இடத்தில் நீண்ட காலம் தொடர்ந்து கடமையாற்ற முயற்சிப்பதன் பின்னணி என்ன? என்பது போன்ற கேள்விகள் சமூகத்தால் எழுவதற்கு ஏன் இடமளிக்க வேண்டும்.

யாழ்.மாவட்டப் பாடசாலைகள் பலவற்றில் 15 வருடங்களுக்கு மேல் ஆசிரியர்கள் தொடர்ந்து கடமை புரிவதையும் குடும்ப உறவுகள் சகிதம் அதிபர், பகுதித் தலைவர் என்ற வகையில் பாடசாலை நிர்வாகம் மற்றும் கல்விச் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுவதும், இந்த விடயத்தில் மாற்றங்களை மேற்கொள்வதற்கு வலயக் கல்வி நிர்வாகம் தயக்கம் காட்டுவது நடைமுறையில் உள்ளது.

ஆசிரியர் இடமாற்றம் தொடர்பாக கடந்த காலங்களில் நிலவிய ஒழுங்கீனங்கள், முறைகேடுகளைச் சீர்படுத்தி ஒழுங்கமைப்பதற்கு ஏதுவாக ''தேசிய ஆசிரியர் இடமாற்றக் கொள்கை'' உருவாக்கப்பட்டு 2008 ஆம் ஆண்டில் இருந்து உரிய முறையில் பின்பற்றப்பட்டு நடைமுறைப்படுத்த வேண்டும் என மத்திய கல்வி அமைச்சு கண்டிப்பான முறையில் அறிவித்துள்ளது.

தேசிய இடமாற்றக் கொள்ளையின் பிரகாரம்-

★குறித்த காலத்துக்குமேல் தொடர்ந்து ஒரே பாடசாலையில் கடமையாற்றும் ஆசிரியர்கள் வேறுபாடசாலைகளுக்கு இடமாற்றம் செய்யப்படவேண்டும்.

(தென்னிலங்கையில் 8 வருடங்களுக்கு மேல் தொடர்ந்து ஒரு பாடசாலையில் கடமை புரியும் ஆசிரியர்கள் இடமாற்றம் செய்யப்படுகின்றார்கள்)

★ஆசிரியர்களின் இடமாற்றம் தொடர்பான தகவல்களைத் திரட்டுதல், இடமாற்றம் செய்தல், மேன்முறையீடுகளைப் பரிசீலனை செய்தல், ஆசிரியர் இடமாற்ற சபைகளை நிறுவி இடமாற்ற சபைகளின் ஆலோசனையுடன் இடமாற்றங்களை மேற்கொள்ளுதல் போன்ற வரையறைகள் திட்டவட்டமாக வரையறை செய்து நடைமுறைப்படுத்த வேண்டும்.

ஆசிரியர் ஒருவர் இடமாற்றத்தை ஏற்றுக் கொள்ளாமல் மேன்முறையீடு செய்யும் போது மேன்முறையீடு ஒருமாத காலத்துக்குள்ளேயே மேல் முறையீட்டுச் சபையால் பரிசீலனை செய்யப்பட்டு எழுத்து மூலம் சம்பந்தப்பட்ட ஆசிரியருக்கு அறிவிக்கப் படவேண்டும். மேன்முறையீடு தொடர்பான பதில் கிடைக்கும்வரை குறித்த ஆசிரியர் தொடர்ந்து பாடசாலையில் கடமை புரிவதற்கு அனுமதிக்கப்பட வேண்டும்.

மேற்படி விடயங்களை உள்ளடக்கி ஆசிரியர் இடமாற்றங்களை மேற்கொள்வதற்கு வலய கல்வி நிர்வாக மட்டத்தில் ஒழுங்கு முறையான செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுவதில்லை.

ஆசிரியர்களின் இடமாற்ற விடயத்தில் கண்டிப்புடனும் ஆசிரியர்களின் நியாய பூர்வமான கோரிக்கைகளை புறம் தள்ளியும் நடவடிக்கைகளை மேற்கொள்ளும் முறை குடாநாட்டின் கல்வி நிர்வாகத்தில் வழக்கமாகிவிட்டது.

நீர்வேலி. லிங்கதாசன்.

## மின்சார சபையினருக்கு ஒரு பாராட்டு

அண்மைய இயற்கை அனர்த்தத்தின் சுவடுகள் இன்னும் மறையவே இல்லை. இந்த ''நிஷா''வினால் ஏற்பட்ட அழிவுகள், சொல்லொணாத் துயரத்தையே எமக்குத்தந்தது. குடாநாட்டில் தென்மராட்சி மண் சந்தித்த இழப்புகளே மிக அதிகமானவை. இந்த இழப்புகளுக்கு முகம் கொடுத்த நாம் மீண்டெழுவதற்கு ஆவன செய்ய சகல தரப்பினரும் முன்னின்றனர் எனினும் அவர்களில் முதன்மையானவர்கள் இலங்கை மின்சார சபையினர். இவர்களின் சேவைகள் அனைத்தும் முற்றிலுமாக சேதமடைந்த பிரதேசம் தென்மராட்சி. இவற்றையெல்லாம் மீளமைத்து எமக்கு மின்சாரம் தருவதற்கு ஆகக்குறைந்தது இரண்டரை மாதங்களாவது செல்லும் என நாம் எண்ணியிருந்தவேளை மிக குறுகிய காலத்திற்குள் (வெள்ள நீர் வற்ற முன்னமே) அவற்றினை மீளமைத்து (சேதமடைந்தவற்றின் பெரும்பகுதி) மின்னிணைப்பை தந்திருக்கின்றார்கள். பிள்ளைகளின் கல்விக்கு ஊக்கத்தை ஏற்படுத்தியிருக்கின்றார்கள்.

எதுவித பேதமுமின்றி சகலரையும் பாதித்ததே இவ்வனர்த்தம். அவ்வகையில் தமக்கு ஏற்பட்ட பாதிப்புகளுக்கிடையிலும் தமது மக்களுக்காக இப்புனரமைப்பு வேலைகளை செய்த சபையின் ஊழியர்கள் அனைவரும் போற்றுதற்குரியவர்கள். இவர்களை ஊக்கப்படுத்தி வழிப்படுத்திய தென்மராட்சி பிரதேச மின் அத்தியட்சகர், யாழ்.பிரதேச மின் பொறியியலாளர் மற்றும் ஊழியர்கள் என அனைத்து தரப்பினரையும் பாராட்ட வேண்டும்.

உருத்திரசுந்தரம்.

## இந்து பாடசாலைகளுக்கு ரின் மீன் வழங்குவது பொருத்தமாகுமா?

பாடசாலைகளில் மாணவர்களுக்கு மதிய உணவு வழங்கும் திட்டத்தின் கீழ் உலக உணவுத்திட்டம் உணவுப்பொருள்களை வழங்கி வருகிறது. பாடசாலைகள் இந்த உணவுப் பொருள்களை சமைத்து மாணவர்களுக்கு உணவு வழங்கி வருகின்றன.

இப்போது உலக உணவுத் திட்டம் உலர் உணவுப் பொருள்களுடன் ரின் மீனையும் வழங்க உத்தேசித்துள்ளது. யாழ்.மாவட்டப் பாடசாலைகளில் பெரும்பாலானவை இந்துப் பாடசாலைகள். பல பாடசாலைகளில் பாடசாலை வளவுக்குள் மாமிசம் கொண்டு வரக்கூடாது என பாடசாலைச் சட்டதிட்டங்கள் கூறுகின்றன. அத்துடன் மரக்கறிக் கழிவுகளைவிட மாமிசக் கழிவுகளால் சுற்றாடல் பாதிப்பும் தொற்று நோய்களும் ஏற்பட வாய்ப்புள்ளதாக சில பாடசாலை அதிபர்கள் கூறுகின்றனர்.

வலிகாமம் மேற்கிலுள்ள ஒரு பாடசாலை அதிபர் இது பற்றிக் கூறுகையில் எமது பாடசாலையில் சமைப்பதற்கு இடமில்லாத படியால் அருகிலுள்ள கோயில் மடைப் பள்ளியிலேயே சமையல் செய்து வருகின்றோம். இந்த நிலையில் கல்வித் திணைக்களம் மீன் ரின்களை வழங்கினால் நாம் என்ன செய்வது என்றார்.

கல்வித் திணைக்களம் சிந்திக்குமா?

ந.பரமேஸ்வரன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 80 பேரின் வாகனப் பதிவுச் சான்றிதழ்கள் யாழ்.போக்குவரத்துத் திணைக்களத்தில்

யாழ்ப்பாணம்,டிசெ.27

கொழும்பு மோட்டார் போக்குவரத்துத் திணைக்களம் பதிவு செய்யப்பட்ட வாகன உரிமையாளர்களுக்கு வாகனப் பதிவுச் சான்றிதழ் மற்றும் உடைமை மாற்றம் தொடர்பான வாகன் பரிசோதனைக் கடிதங்கள் என்பவற்றை பதிவுத் தபால் மூலம் அனுப்பி வைத்திருந்தது.

எனினும் உரியவர்கள் குறித்த முகவரியில் இல்லாததால் திருப்பி அனுப்பட்ட 80 பேரின் சான்றிதழ்கள் மற்றும் கடிதங்கள் யாழ். மாவட்ட மோட்டார்ப் போக்குவரத்துத் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

உரியவர்கள் தமது தேசிய அடையாள அட்டை மற்றும் வாகன ஆவணங்களுடன் அலுவலக நாள்களில் நேரில் வந்து பெற்றுக் கொள்ளுமாறு உதவி ஆணையாளர் வ.பத்மநாதன் கேட்டுள்ளார்.

**பதிவுச் சான்றிதழ்கள்**

தம்பு தேவராஜா-NP GS-6587, செல்லன் செல்வராசா-5-9890, வேலாயுதபிள்ளை நித்தியானந்தசிவம்-149-5091, இராசையா மகேஸ்வரன்-NP GH-6008, சிவசுப்பிரமணியம் கோபிநாத்-NP GS-6617, மேகிபராஜ் செல்லையா-141-0522, சகாயநாயகம் இராஜநாயகம் கன்ஸ்பார்-121-2949, சிவசாமி கிருபாகரன்-113-4714, கணேசமூர்த்தி சரஸ்வதி-112-5926, கருணாகரன் மகாரத்தினம்-92 SRI 1596, இராசதுரை சண்முகம்பிள்ளை-84-4463, பாலசுந்தரம் அஜந்தன்-NP HF-8875, தர்மநாதன் பேரம்பலம்-86-4515, சற்குனானந்தா சிறிஸ்கந்தராஜா-54-1022, கந்தையா யோகநாதன்-26SRI 1098, சுப்பையா ஸ்ரீனிவாசன்-9-6961, சந்திரசேகரம் இளங்குமரன்-500-9889, தம்பித்துரை ராஜதுரை-500-9984, மானுவேற்பிள்ளை சார்ள்ஸ் விஜய்ன்-500-9340, கதிரவேலு தெய்சீஸ்வரராசன்-500-9809, இராமகிருஸ்ணன் பிரபாகரன்-500-9791, சீவரத்தினம் சுதர்சன்-500-9728, பாலசிங்கம் நடனராசா-500-9706, சுப்பிரமணியம் ஞானமூர்த்தி-500-8264, கந்தையா பாலச்சந்திரன்-500-7670, சீனியன் குணபாலன்-500-7339, சின்னத்துரை சிவகுமார்-500-7242, கனகரத்தினம் சாம்பசிவம்-500-6855, ரவி பொன்னையா-500-6644, இராஜேந்திரம் தவராஜா-500-0731, பாலசுப்பிமணியம் பொன்னம்பலம்-500-1569, மகாலிங்கம் சிவானந்தராஜா-500-2697, மந்திரி தங்கவேலு-500-2872, விசுவலிங்கம் சச்சிதானந்தராஜா-500-3066, கந்தையா சிவபாதம்-500-3108, யோகராஜா செபமாலை செக்ரஸ்-500-3467, தர்மகுலசிங்கம் கதிரன்-500-3925, நாகமணி பாலசிங்கம்-88 SRI 8042, பிரான்சிஸ் சிறில்அன்ரனி-500-3935, பாலசுப்பிரமணியம் பாலகிருஸ்ணன்-500-3681, ஐயாத்துரை பொன்னன்-500-3754, வேனட் அல்பிரட் புனிதா-500-3865, நாகமுத்து யோகராஜா-500-5494, சிவசம்பு இரத்தினம்-500-5602, பவிலுப்பிள்ளை தேவதாசன்-500-5807, விநாயகமூர்த்தி சிறிதரன்-EN-9175, சின்னப்பன் அமிர்தலிங்கம்-CN-6645, அந்தோனிப்பிள்ளை தவதாஸ்-500-5421, இரவிகுமார் தியாகராஜா-500-3827

**வாகன உடமை மாற்றம் தொடர்பான கடிதங்கள்**

எஸ்.எஸ்.ஜெயசீலன்-NP GG-9846, எஸ்.சிவபாதசுந்தரம்-NPHV-5138, எஸ்.சதீசன்-NPHW-2181, எம்.பிரான்ஸிஸ்-40-1692, எஸ்.சிவரூபன்-206-5983, எஸ்.சுதாகர்-NP HI-9543, எம்.ஞானகரன்-NP HI-0896, எஸ்.கே.கந்தசாமி-NP GI-3462, என்.சுகந்தாஸ்-41-2479, வி.ஜி.நரயன்- 7-7324, ஜி.பாஸ்கரன்-41-6015, எஸ்.சுப்பிரமணியம்-3-6593, ரி.தயாபரன்-NP ME-2397, வி.ஜெயவதனி-NP GR-2096, ஜெ.டி.டில்றுக்சன்-NP ME-0210, ஆர்.யோகமலர்-3-4898, எஸ்.சீனிவாசகம்-124- 7736, பி.தெய்வேந்திரம்-149-5531, எ.ஆர்.அன்னசோதி-28-9315, எஸ்.சிவசங்கர்-NP JT-3017, எஸ்.சுந்தரம்-6-1538, சி.தினகரன்-96-7612, எஸ்.ராகுசன்-NP JK-8881, என்.சிறிகாந்தராசா-56-9208, ரி.சின்னராசா-92-9547, எஸ்.திருச்செல்வம்-25-3074, எ.குமாரசாமி-25-8979, வி.பாலசிங்கம்-NP JY-6771, எஸ்.சிவரூபன்-202-5594, எஸ்.சக்திதாசன்-203-6357, எச்.புஸ்பகாந்தி-61-6413.

## சிமெந்துத் தட்டுப்பாட்டால் மீன் பதனிடும் நிலைய கட்டட வேலைகள் இடைநடுவில்

யாழ்ப்பாணம்,டிசெ.27

ஊர்காவற்றுறை தம்பாட்டிக் கிராமத்தில் அமைக்கப்பட்டுவரும் மீன் பதனிடும் நிலைய கட்டட வேலைகள் சிமெந்துத் தட்டுப்பாடு காரணமாக தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளது.

தட்டுப்பாடு நீங்கி சிமெந்து கிடைத்ததும் இக்கட்டட வேலைகள் தொடர்ந்தும்முன்னெடுக்கப்படும் என ஊர்காவற்றுறை கடல்தொழில் பரிசோதகர் எம்.பி.அன்று ஊர்காவற்றுறைபிரதேச ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில் உரை நிகழ்த்திய போது தெரிவித்தார். (202-300)

## வேலணைப் பிரதேசத்தில் துப்புரவுப் பணிகள்

நல்லூர்,டிசெ.27

வேலணைப் பிரதேச சபைக்குட்பட்ட பிரதேசங்களில் 'நிஷா' அனர்த்தத்தின் போது வீழ்ந்தும், சேதடைந்து வீதிகளில் போடப்பட்டிருந்த மரக்கழிவுகள் உட்பட குப்பை கூழங்களை அகற்றும் பணிகள் துரிதமாக மேற்கொள்ளப்பட்டுள்ளது என வேலணைப் பிரதேசசபை வட்டாரங்கள் தெரிவித்தன.

வேலணை பிரதேச சபையின் உப அலுவலகங்களான புங்குடுதீவில் 20 தொழிலாளர்களும் நயினாதீவில் 30 தொழிலாளர்களும் மண்டைதீவில் 15 தொழிலாளர்களும் இந்தப் பணிகளுக்கு ஈடுபடுத்தப்பட்டனர். (202-111)

# நிகழ்வுகள்

குருநகர்,டிசெ.27

யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலக்தின் ஒளிவிழா நாளை மறுதினம் திங்கட்கிழமை பிற்பகல் 2 மணிக்கு அலுவலக மகாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (202-51)

* * *

வடமராட்சி, டிசெ.27

வடமராட்சி லயன்ஸ் கழகம் நடத்தும் இலவச வைத்திய முகாம் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணி முதல் நண்பகல் 12 மணிவரை பிரதான வீதி, பருத்தித்துறையில் உள்ள ஜே.சி.மெடிக்கல் கிளினிக்கில் நடைபெறவுள்ளது.

இவ்வைத்திய முகாமில் சகலவிதமான வைத்திய சேவைகளும் இடம்பெறும் என வடமராட்சி லயன்ஸ்கழகம் அறிவித்துள்ளது. (202-236)

* * *

வடமராட்சி, டிசெ.27

பருத்தித்துறை - கட்டைவேலி மெதடி ஸ்த திருச்சபை சேகர வாலிபர்கள் ஒன்று கூடல் இன்று சனிக்கிழமை காலை 8 மணிக்கு கற்கோவளம் மெதடிஸ்த தேவாலயத்தில் நடைபெறவுள்ளது. (202-236)

* * *

வடமராட்சி, டிசெ.27

பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலை மெதடிஸ்த சிற்றாலயத்தின் 13 ஆம் ஆண்டு நிறைவு விழாவும், ஒளி விழாவும் நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு பருத்தித்துறை கட்டைவேலி சேகர முகாமைக்குரு வண.பிதா டேவிட் அழகராசா தலைமையில் நடைபெறவுள்ளது.

* * *

வடமராட்சி, டிசெ.27

மேலைப்புலோலி நாவற்கலட்டி ஆலயத்தில் இன்று சனிக்கிழமையும், மந்திகை கண்ணகை அம்மன் கோவிலில் நாளை ஞாயிற்றுக்கிழமையும் காலை 7 மணி முதல் மாலை 5 மணி வரை திருவாசக முற்றோதல் நடைபெறவுள்ளது.

சதாவதானி கதிரவேற்பிள்ளை சனசமூக நிலையம் சதாவதானி அறநெறிப் பாடசாலை ஆகியவற்றைச் சேர்ந்த ஓதுவார் குழுவினர் இத்திருவாசக முற்றோதலை ஓதுவார்கள்.

* * *

கரவெட்டி, டிசெ.27

நெல்லியடி சனசமூக நிலைய சன்மார்க்க சபை பாலர் பாடசாலையின் கலை விழாவும் பரிசளிப்பு விழாவும் இன்று சனிக்கிழமை பிற்பகல் 1 மணிக்கு நெல்லை முருகன் திருமண மண்டபத்தில் நடைபெறவுள்ளன.

வல்லை சிவகுரு வித்தியாலய அதிபர் ஆ.சிவநாதன் தலைமையில் நடைபெறும் விழாவில் கலைஞானகேசரி சரோஜாதம்பு பிரதம விருந்தினராகவும் கிராம அலுவலர் சி.பிரபாகரன் சிறப்பு விருந்தினராகவும் நெல்லியடி முருகமூர்த்தி, ஆலயத் தலைவர் பொ.கதிரமலை கௌரவ விருந்தினராகவும் கலந்து கொள்வர். (202-70)

## ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம்

யாழ்ப்பாணம்,டிசெ.27

தீவகம் வடக்கு ஊர்காவற்றுறைப் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் உதவி அரசாங்க அதிபர் பணிமனை மகாநாட்டு மண்டபத்தில் தீவகம் வடக்கு ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் க.ஸ்ரீமோகனன் தலைமையில் நடைபெறும்.

(202-300)

# அரச சாரதிகள் பதவி உயர்வு பெற்றிருந்தால் தடைதாண்டல் பரீட்சை தேவையில்லை

## வடமாகாண பொது நிர்வாக செயலகம் அறிவிப்பு

யாழ்ப்பாணம்,டிசெ.27

இலங்கை அரச சேவையின் சாரதிகளாகச் சேவையில் இணைந்து கடமைபுரியும் சாரதிகள் பதவியுயர்வு மூலம் வகுப்பு I க்குத் தரம் உயர்வு பெற்றிருந்தால் அவர்கள் வினைத்திறமைகாண் தடைப்பரீட்சைக்குத் தோற்ற வேண்டியதில்லை என வடமாகாண பொது நிர்வாக செயலகத்தின் பிரதிப் பிரதம செயலாளர் இ.இரவீந்திரன் வடமகாணத்தில் இயங்கும் திணைக்களத் தலைவர்களுக்கு அனுப்பி வைத்துள்ள சுற்றறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

இவ்விடயம் தொடர்பாக ஏற்கனவே 1101/9 ஆம் இலக்க 1999.10.13 ஆம் திகதிய சேவைப் பிரமாணக் குறிப்பிற்கு அமைய வகுப்பு I இற்குப் பதவியுயர்வு வழங்கப்பட்ட சாரதிகளின் நியமனக் கடிதங்களில் வினைத்திறன்காண் தடை எல்லை குறிப்பிட்டிருந்தாலும் அவர்கள் குறித்த வினைத்திறன்காண் தடைப் பரீட்சை எடுக்க வேண்டிய அவசியமில்லையென்பதையும், சாரதி சேவையின் வகுப்பு I பதவியுயர்வுக் கடிதத்தில் வினைத்திறன்காண் தடை எல்லை குறிப்பிட்டு வழங்கப்பட்டிருப்பின் அக்கடிதத்தை மீள அனுப்பினால் திருத்தப்பட்ட பதவியுயர்வுக் கடிதம் வழங்கப்படும் எனவும் அவர் தெரியப்படுத்தியுள்ளார். (202-300)

# 'சிலப்பதிகாரம் என்றோர் மணியாரம்' நூல் வெளியீடு எதிர்வரும் வெள்ளியன்று

யாழ்ப்பாணம், டிசெ.27

'சிலப்பதிகாரம் என்றோர் மணியாரம்' என்னும் நூலின் வெளியீட்டு விழா எதிர்வரும் வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு நல்லை ஆதீன மண்டபத்தில் கலாநிதி க.குணராசா தலைமையில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் ஆசியுரையை நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாசாரிய சுவாமிகளும் வாழ்த்துரையை துர்க்காதேவி தேவஸ்தானத்தின் தலைவர் செஞ்சொற் செல்வர் ஆறு.திருமுருகனும் வெளியீட்டுரையை யாழ்.பல்கலைக்கழக மொழியியல் மற்றும் ஆங்கிலத்துறைத் தலைவர் கலாநிதி சுபேதினி ரமேஸும் மதிப்பீட்டுரையை யாழ். பல்கலைக்கழக இந்துநாகரிகத்துறைப் பேராசிரியர் கலாநிதி கலைவாணி இராமநாதனும் நிகழ்த்துவர்.

முதல் பிரதியைக் கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ் யாழ்.கொமர்ஷல் வங்கியின் முதன்மை முகாமையாளர் ச.ரவீந்திராவிடம் வழங்குவார். (202)

## சான்றிதழ் வழங்கும் நிகழ்வு

தொல்புரம், டிசெ.27

வலிகாமம் கல்வி வலயத்துக்குட்பட்ட பாடசாலைகளில் முறைசாராக் கல்விப் பிரிவால் நடத்தப்பட்ட தொழில் கல்வியைப் பூர்த்தி செய்த மாணவர்களுக்கு சான்றிதழ் வழங்கும் நிகழ்வு நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு மல்லாகம் மகாவித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது. (202-119)







உடுவில் பிரதேச செயலகத்தில் சிறுவர், முதியோர் தினவிழா அண்மையில் கொண்டாடப்பட்டது.

இந்த நிகழ்வில் மல்லாகம் நீதிமன்ற நீதிபதி திருமதி சரோஜினி இளங்கோவன் மங்கள [illegible] பிரதேச செயலர் திருமதி சதீசன் மஞ்சுளாதேவி தலைமை உரை நிகழ்த் [illegible] நிகழ்வில் கலந்து கொண்ட சிறியோர், முதியோர்களையும் படங்களில் காணலாம்.

(படங்கள்: நேசன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



அன்புக்காக
அன்னை
மடிமேல்
09.06.1982

அருளுக்காக
ஆடும் ஈசன்
திருவடியின் கீழ்
27.11.2008

## அமரர் செல்வராசா வசந்தகுமார் (வசந்தன்)

[மாணவன், யா/க.ம.ம.வி. (ஸ்ரான்லிக் கல்லூரி) கலைப்பிரிவு- 2001]

வண்ணமுறும் வரணியிலே வசந்தனே நீ உதித்தாய்
அத்தை மாமாவுடன் அரியாலையில் நீ வளர்ந்தாய்
பெருமைதரும் கல்வியினை ஸ்ரான்லியிலே நீ பயின்றாய்
தந்தை இறந்ததினால் தாய் சகோதரத்திடம் நீ சென்றாய்
அங்கு உன் வரவை விரும்பாத காலன் ஆற்றமுடியாத நோய் தந்தான்
அதனால் ஆறமுடியாத் துயருடன் அப்பாவிடம் விரைந்தாயோ
நேசமுடைய உறவுகளை விட்டு நீண்ட தூரம் சென்றாயோ
ஏற்றமுடைய உன் ஆன்மா ஈசனடியில் சாந்தி பெறுக!

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

இன்று (27.12.2008) சனிக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

மகேந்திரம் நந்தினி,
(அரியாலை, யாழ்ப்பாணம்).

குடும்பத்தினர்.
மாசேரி, வரணி.

(81152)

## இறைச்சிக் கோழி விற்பனை

புறொயிலர், கல்பேட் தினமும் சுத்தம் செய்து குறைந்த விலையில் பெற்றுக் கொள்ளலாம்.

**நல்லூர் பாம் சென்ரர்**
19, முருகேசர் லேன், நல்லூர்.

(81123)

## தவறிவிட்டது

'முருகவாசா', காரத்திகேசர் வீதி, புலோலி மேற்கு, பருத்தித்துறை என்னும் முகவரியுடைய அருளானந்தன் தர்ஷன் என்னும் பெயரைக் கொண்ட தேசிய அடையாள அட்டை (851582509V) பருத்தித்துறை- யாழ்ப்பாண வீதியில் தவறி விட்டது. அதனைக் கண்டு எடுத்தவர்கள் மேற்படி முகவரியிலோ அல்லது கீழ்க்காணும் தொலை பேசி இலக்கத்துடனோ தொடர்பு கொள்ளவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

★ 021 226 4703 ★ 0776391312
★ 021 222 7455

## Organ/ Violin Notes

Organ, வயலின், Guitar, புல்லாங்குழல், வீணை போன்ற இசைக்கருவிகளுக்கான 300 சினிமாப்பாடல்களின் Notes விற்பனைக்குண்டு. Organ, Guitar புல்லாங்குழல் வகுப்புகள் தினமும் பிற்பகல் 4 மணியிலிருந்து நடைபெறுகின்றன.

**கரவீணா இசைமன்றம்,**
S.S.Rajendran,
75, கோயில் வீதி, நல்லூர்.
T.P.: 0713055991, 0777031293.

(81162)

## கோழிப் பண்ணை விற்பனைக்கு

நிலக்கூடு, கம்பிக்கூடு, மேஸ் கான், தண்ணிக் கான் (அனைத்து அளவுகளிலும்) விற்பனைக்குண்டு. அல்லது அனைத்தையும் வாங்கி 2010ஆம் ஆண்டு வரை கோழி வளர்ப்பதற்கான அனுமதிப் பத்திரத்துடன், அதே காணியில் வாடகைக்கு 2000/= அடிப்படையிலும் மேற்கொள்ளலாம்.

தொடர்பு: இல.5, இராமநாதன் வீதி,
செம்மணி றோட், செம்மணி.
தொ.பே.: 077 5293042.
(3.00 மணிக்குப் பின் பார்வையிடலாம்).

(81074)

# நிர்வாகிகள் தெரிவு

சாவகச்சேரி கச்சாய் வீதி, திருவள்ளுவர் சனசமுக நிலையத்தின் புதிய தலைவராக சி.பூமிசேகரனும், செயலாளராக ப.அஜந்தனும், பொருளாளராக மா.ஜயகுமாரும் நிர்வாக உறுப்பினர்களாக 12 பேரும் தெரிவு செய்யப்பட்டனர். (202-207)

* * *

மானிப்பாய் ப.நோ.கூ.சங்கத்தின் புதிய தலைவராக இ.வன்னியசேகரம் போட்டியின்றி தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

உப தலைவராக மா.மகாலிங்கமும் 5பேர் கொண்ட நிர்வாக உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (202-100)

* * *

யாழ்ப்பாணம், டிசெ.27

வட்டுக்கோட்டை கிழக்கு துறட்டிப்பனை முத்துமாரி அம் பாள் பரிபாலன சபைக்கு புதியநிர்வாகிகள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

தலைவராக மயில்வாகனம் இராசதுரையும், உப தலைவராக வேலுப்பிள்ளை மகிழ்ராஜனும், செயலாளராக பொன்னம்பலம் யோகேஸ்வரனும், பொருளாளராக சோமசுந்தரம் கனகநாயகமும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (202)

# நவாலி வடக்கில் கிணறுகள் இறைப்பு

நவாலி, டிசெ.27

நவாலி வடக்கு புலவர் முகாமிலுள்ள கிணறுகளைச் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினர் இறைத்துத் துப்புரவு செய்து கொடுத்துள்ளனர்.

மேலும் இங்கு பழுதடைந்த நிலையிலிருந்த மலசலகூடங்களையும் திருத்தியமைத்துக் கொடுத்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (202-100)

# புதிய அதிபர் நியமனம்

சங்கானை, டிசெ.27

வட்டு.சுப்பிரமணிய வித்தியாசாலையின் புதிய அதிபராக சு.திருக்கேதீஸ்வரன் நியமிக்கப்பட்டுள்ளார். வித்தியாசாலையின் அதிபராகக் கடமையாற்றிய மா.செல்வராசா ஓய்வுபெற்றதையடுத்தே புதிய அதிபர் நியமிக்கப்பட்டுள்ளார்.

புதிதாக நியமனம் பெற்றவர் சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலயத்தில் சிரேஷ்ட ஆசிரியராகக் கடமையாற்றி வந்தவர். (202- 29)

# ENGLISH & SINHALA
## PERSONAL CLASSES

இரு மொழிகளும் அடிப்படையிலிருந்து ஆரம்பித்து சகல வித மொழியாள்கைத் திறன்களையும் உள்ளடக்கிக் கற்பிக்கப்படும், ஆறாம் ஆண்டுக்கு மேற்பட்ட மாணவர்கள், G.C.E.(O/L, A/L) பரீட்சைகளுக்குத் தோற்றியவர்கள் மற்றும் அரச/ தனியார் நிறுவன சேவையாளர் உட்பட எவ்வயதினரும் எத்திகதியிலும் இணைந்து கொள்ளலாம், தினசரி வகுப்புகளும் ஒழுங்கு செய்து கொள்ளலாம்.

**வகுப்பு நேரங்கள்**

முற்பகல் 8.30-11.30
பிற்பகல் 2.45- 5.30+ 6.00- 7.00

ஆய்வுக் கட்டுரைகள் சம்பந்தமான பிரத்தியேக மொழிபெயர்ப்பு வேலைகள் மற்றும் கடிதங்கள் (மூன்று மொழிகளிலும்) செய்து தரப்படும்.

**T.SAGATHEVAN**, B.A.London.
Trilingual Tutor/ Translator (PVT),
46, Pirappankulam Lane, Vannarpannai, Jaffna.
T.P.: 2223520/ 077- 8210178.

(81146)

# அந்தியேட்டி அழைப்பு

தோற்றம்
01 ★ 05 ★ 1932



மறைவு
29 ★ 11 ★ 2008

கடந்த 29.11.2008 அன்று சிவபதமடைந்த எமது ஒளிவிளக்கு

## அமரர் மயில்வாகனம் இராமச்சந்திரன்

(விஞ்ஞானப் பட்டதாரி- ஓய்வுபெற்ற உபஅதிபர்)

அவர்களின் அந்தியேட்டி சபிண்டீகரணக் கிரியைகள் நாளை (28.12.2008) ஞாயிற்றுக்கிழமை காலை 6 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெறும். இக்கிரியைகளில் கலந்து அன்னாரின் ஆத்மா சாந்திபெறப் பிரார்த்திப்பதோடு, தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

(குறிப்பு: இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்)

பாரதி வீதி, கம்பர்மலை,
வல்வெட்டித்துறை.

(81149)

குடும்பத்தினர்.

# புத்தக சாலை



## ஸ்ரீ முருகன் பாமாலை

பருத்தித்துறை ஸ்ரீராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமத்தினர் முருகன் மீது கொண்ட பக்தியின் ஊற்றாக முருகன் பாமாலையைத் தொகுத்து வெளியிட்டுள்ளனர்.

முருக பக்திப் பாடல்களுடன் முருகன் பற்றிய இலக்கியங்களையும் இந்நூலில் தொகுத்துள்ளனர்.

## பரத நாட்டியம்



தரம் 6 தொடக்கம் 9 வரையான மாணவர்கள் நடன பாடத்தைக் கற்பதற்கு இலகுவாக மீசாலை 'சுபாலயம்' நடனப்பள்ளி ஆசிரியை பரத கலாவித்தகர் திருமதி சுபாதினி தயாபரன் தயாரித்து வழங்கியுள்ள நூல் பரத நாட்டியம்.

மாணவர்கள் நடனபாடக் கற்றலில் கொண்டுள்ள இடர்பாட்டைத் தவிர்க்கும் முகமாக புதிய கலைத்திட்டத்துக்கு அமைவாக இந்நூல் தயாரிக்கப்பட்டுள்ளது.

## காதோடு வாய் புதைத்து



மரபுக் கவிஞர் பொலிகை ச. திருப்பதி எழுதிய கவிதைகளின் தொகுப்பாக வெளிவந்துள்ளதே 'காதோடு வாய் புதைத்து' நூல்.

கவிஞரின் கவித்துவச் சிறப்புக்கு ஓர் எடுத்துக்காட்டாக இந்நூல் வெளிவந்துள்ளது.

அவர் தமது கவிதைகளில் பெண்ணியம், சமூகத்தின் பொதுப் பிரச்சினைகள், சமூகக் கொடுமைகள் என்பன பற்றி கவிதைகளுக்கேயுரிய சிறப்புகளுடன் கூறுகின்றார்.

ஈழத்து இலக்கிய வரலாற்றில் இக்கவிதை நூலும் ஒரு பதிவாகக் கொள்ளப்படக்கூடியது. ஈழத்து கவிதை இலக்கியப் பாரம்பரியத்தில் இந்நூலும் ஒரு கல்வெட்டே.

## மனத்திரை மேகங்கள்




காலத்தின் கண்ணாடியான கவிதை இலக்கியத்துக்கு மேலும் ஓர் அணிகலனாய் வளரும் கவிஞர் நெடுந்தீவு முகிலனின் 'மனத்திரை மேகங்கள்' கவிதைத் தொகுதி நூல் வெளியாகியுள்ளது.

தன் காலத்தில் மக்கள் படும் வேதனைகளுக்கான காரணிகளைப் பல்வேறு தளங்களிலும் நின்று நோக்கி கவிதைகளாக யாத்து வெளியிட்டுள்ளார்.

வளங்களும், வசதிகளும் குறைந்த நெடுந்தீவிலிருந்து தன்னை ஓர் கவிஞனாக வளர்த்தெடுத்து பல்வேறு கவிதைகளை உருவாக்கித் தொகுத்து வெளியிட்டுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# படங்கள் தரும் பதிவுகள்





மழை வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டு இடம்பெயர்ந்த சாவகச்சேரி கோயிற்குடியிருப்புப் பிரிவு மக்களுக்கு இலங்கை சிறுவர் பாதுகாப்பு நிறுவனத்தின் அனுசரணையுடன் சாந்திகம் நிறுவனத்தினர் உணவுப்பண்டம் அல்லாத பொருள்களை அண்மையில் வழங்கினர்.


பிரிவு கிராம அலுவலர் க.செல்வராசா பயனாளி ஒருவருக்குப் பொருள்களை வழங்குவதைப் படத்தில் காணலாம்.



கோப்பாய் கோட்ட பாடசாலைகளுக்கிடையே நடத்தப்பட்ட உதைபந்தாட்டப் போட்டியில் முதலிடம் பெற்ற 16 வயதுப் பிரிவு அணியினரைப் படத்தில் காணலாம். (72)



அதிஉயர் பாதுகாப்பு வலயமான காங்கேசன்துறையிலிருந்து இடம்பெயர்ந்து இருபாலை கிழக்கில் வசிக்கும் மக்களுக்கென 'கியூடெக்' நிறுவனம் அமைத்துக்கொடுத்த அரை நிரந்தர வீடுகளும் 'நிஷா' புயலால் அழிவடைந்தன. அவ்வாறு சேதமடைந்த வீடுகளில் ஒன்றைப் படத்தில் காணலாம். (படம்: த.பரமலிங்கம்)



வலிகாமம் வலய பிள்ளைநேயப் பாடசாலைகளுக்கான பரிசளிப்பு விழாவில், சுழிபுரம் ஐக்கிய சங்க சைவ வித்தியாசாலையின் அதிபர், ஆசிரியர்களுக்கு வலிகாமம் வலயக் கல்விப்பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் பரிசில் வழங்குவதைக் காணலாம். (படம்: [illegible])



தூய அன்னை ஸ்ரீ சாரதாதேவியின் 156ஆவது பிறந்த தின நிகழ்வு பருத்தித்துறை ஸ்ரீ இராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமத்தில் நடைபெற்றபோது மருந்துப் பொருள்களை ஆச்சிரமத்தின் பீடாதிபதி சுவாமி சித்ருபானந்தா கரவெட்டிப் பிரதேச அரசினர் வைத்தியசாலைக்கென வைத்திய பொறுப்பதிகாரி டாக்டர் எம்.யோகேஸ்வரதேவரிடம் வழங்குவதைப் படத்தில் காணலாம். (படம்: கர்ணன்)




சுன்னாகம் றோட்டறக் கழகத்தினர் சபாபதிப்பிள்ளை வீதியில் அமைந்துள்ள கேன் நிறுவனத்தில் உள்ள புற்றுநோயாளர்களுக்கு ஒரு தொகுதிப் பொருள்களை அன்பளிப்புச் செய்துள்ளார்கள்.

புற்றுநோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு கேன் நிறுவனத்தில் வைத்துப் பொருள்கள் அன்பளிப்புச் செய்யப்படுவதைப் படத்தில் காணலாம்.



ஊர்காவற்றுறை கரம்பொன்னில் அமைந்துள்ள சனசமூக நிலையமொன்றின் கூரைகள் 'நிஷா' புயலால் தூக்கி வீசப்பட்டபோது எடுக்கப்பட்ட படம். (படம்: லோகவர்ணன்)



சாவகச்சேரி சுகாதாரப் பிரிவினர் அண்மையில் சாவகச்சேரி நகர்ப்பகுதி வர்த்தக நிலையங்களில் திடீர்ப் பரிசோதனை நடத்தியபோது திகதி காலாவதியான பெருமளவு மென்பானங்களைக் கைப்பற்றினர். கைப்பற்றிய மென்பானங்களுடன் பொதுச்சுகாதாரப் பரிசோதகர்கள் [illegible]. (படம்: தென் [illegible])

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பாடசாலை அதிபர் நியமனங்களில் பாரபட்சம் காட்டப்படுவது ஆசிரிய சமூகத்தின் அதிருப்திக்குக் காரணமாகியுள்ளதுடன், மறுபுறத்தில் அது மாணவ சமுதாயத்தின் கல்வி அபிவிருத்திக்கும் பாதிப்பை ஏற்படுத்துகின்றது என்பதைச் சுட்டிக்காட்ட முயல்கிறது இக்கட்டுரை.**

**சிங்கள மூலம் 'ராவய' பத்திரிகையில் காலிங்க எழுதும் பத்தியிலிருந்து பெறப்பட்டது.**

# பாடசாலை அதிபர் நியமனங்களில் அரசியல் செல்வாக்குப் பயன்படுத்தப்படுகிறதா?

ஒரு நாட்டின் எதிர்காலம் சிறப்பாய் அமைவதற்கு முக்கிய காரணமாய் அமைவது அந்நாட்டின் கல்வித்தரமே என்பதில் இருவேறு கருத்துக்கு இடமில்லை. அந்த வகையில் எந்தவொரு நாட்டின் அரசும், தனது நாட்டின் கல்வித்தரத்தைச் சிறப்பாகப் பேணி மேம்படுத்தினால் மட்டுமே, அந்நாட்டின் எதிர்கால சமூகம் நாட்டுக்கு பயனுள்ள, அவசியமான முன்னேற்றத்தை மேற்கொள்ளத்தக்க, சிறந்த எதிர்காலச் சமூகமாக உருவெடுக்கும் என்பதிலும் இருவேறு கருத்துக்கு இடமில்லை.

### கல்வி நிர்வாகத்தில் ஏற்படும் அழிவு

இந்நாட்டில் இன்று ஏனைய சகல துறைகளிலும் நிலவி வரும் ஊழலும், அதமத்தனமானதுமான அரசியல் நிர்வாக நடைமுறை போன்றே இந் நாட்டின் கல்வித்துறை நிருவாகத்திலும் பயனற்ற, அழிவு தரும் நிர்வாக நடைமுறையே கடைக்கொள்ளப்பட்டு வருவதன் காரணமாக அது, இந்நாட்டின் கல்வித்துறை மேம்பாட்டுக்குப் பெரும் பாதிப்பை ஏற்படுத்துமொன்றாக அமைந்துவிட்டுள்ளது.

இந்நாட்டில் இத்தகைய ஊழல் நிறைந்த அரசியல் நடைமுறை செயற்பட ஆரம்பிப்பதற்கு முன்னரான காலகட்டத்தில் ஒப்பீட்டளவில் இந் நாட்டின் சகலதுறை நிர்வாகத்திலும் கல்வித்துறை நிர்வாகம் பெறுமதியான பயன்பாட்டை நாட்டுக்கு ஈட்டிக்கொடுப்பதில் முன்னிலை வகித்துவந்துள்ளது. ஆயினும் நிறைவேற்று அதிகார நடைமுறையில் செயற்பாடுகளும் நலிவடைந்து நாசமுற நேர்ந்துள்ளது.

### அரசியல் மயப்படுத்தப்பட்ட கல்விச் சேவை

பொதுவாக எந்த ஒரு நாட்டிலும், அந் நாட்டின் கல்வி செயற்பாட்டு நடைமுறையின் அபிவிருத்தியோ - பின்னடைவோ - வெற்றியோ - தோல்வியோ அந்நாட்டின் கல்விக் கூடங்களின் அதிபர்கள், ஆசிரியர்களின் கைகளிலேயே தங்கியுள்ளது என்பது மறுத்துரை இயலாததொரு உண்மையாகும். ஆனால் இன்று இந்நாட்டின் அரசியல் நடைமுறையின் கீழ் செயற்படுத்தப்படும் அரசியல் மயப்படுத்தப்பட்ட கல்விச் சேவைச் செயற்பாடுகள் இந்நாட்டின் மாணவ சமுதாயத்தின் கற்றல் செயற்பாடுகளுக்கும் கல்வித்தர உயர்ச்சிக்கும் நாசம் ஏற்படுத்துமொன்றாக அமைந்து காணப்படுகின்றன. அந்த வகையில் இந் நாட்டின் கல்வித்துறை நிர்வாகத்தின் முதுகெலும்பு அதற்குப் பொருத்தமானவர்களாலும், தகுதியானவர்களாலும் அன்றி, அரசியல் அடிவருடிகளினாலேயே இட்டு நிரப்பட்டுள்ளன.

உதாரணமாக இலங்கை கல்வி நிர்வாக சேவையின் முதலாம் தரத்துக்கென 200 பேருக்கான பதவிகள் ஒதுக்கிக்கொடுக்கப்பட்டிருந்தன. அப் பதவிகளுக்கு நியமிக்கப்பட்ட 198 பேரினது நியமனங்கள் பதில் நியமனங்கள் என்ற அடிப்படையிலானவையாகும். உண்மையில் கல்வி நிர்வாக சேவையில் முதல் தரத்துக்கான நியமனங்களைப் பெற அவசியமான தகுதிகள் கொண்டுள்ளோர் பலர் இலங்கை கல்விச் சேவையில் கடமையாற்றி வருகின்ற போதிலும், அரசியல் மற்றும் வேறு பல தரப்பட்ட காரணங்கள் காரணமாக அத்தகுதி கொண்டோர் பலர் குறிப்பிட்ட பதவிகளுக்கு நியமிக்கப்படவில்லை.

இலங்கை கல்விச்சேவையின் பொறுப்புமிக்க அதிஉயர் பதவிகளை வகித்து வருவோர், அப் பதவிகளுக்கு அவசியமான தராதரங்களையோ அனுபவங்களையோ கொண்டிராத நிலையில், குறிப்பிட்ட அப்பதவிகளுக்கு அவசியமான அடிப்படைத் தகுதிகளைக் கொண்டிருப்போர் கல்விச் சேவையில் கடமையாற்றிவரும் நிலையிலும், அத்தகையோர் புறக்கணிக்கப்பட்டு, தகுதியற்றோரால் அப் பதவிகள் நிரப்பப்படுமானால் அத்தகைய நிலை, கல்விச்சேவை நிர்வாகத்தின் நலன் பயக்கத்தக்க பெறுமதியைப் பெரும் நலிவு படுத்த முக்கிய காரணமாக அமைவதைத் தவிர்க்க முடியாமல் போய்விடக் கூடும்.

கல்லூரி அதிபர்கள் விடயத்திலும் கூட, மேற் குறிப்பிட்ட வகையிலான நிலைப்பாடு, நாட்டின் கல்விச் சேவைச் செயற்பாட்டுக்குப் பெரும் தாக்கத்தையும் நலிவு நிலையையும் ஏற்படுத்துமொன்றாக அமைகிறது.

### கல்வித்துறை தொடர்பான புள்ளி விவரத் தகவல்கள்

அந்த வகையில் நாட்டின் கல்வித்துறை தொடர்பான புள்ளிவிவரத் தகவல்களின்படி, இன்று இந்நாட்டில் மொத்தாக 9 ஆயிரத்து 727 பாடசாலைகளில் கற்பித்தல் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இவற்றில் ஏறக்குறைய 50 வீதமான பாடசாலைகளில் கடமையாற்றும் அதிபர்கள் பதில் அதிபர்கள் என்ற நியமனத்தின் அடிப்படையிலேயே பாடசாலைகளை நிர்வகித்து வருகின்றனர்.

அதிபர் சேவையில் இணைந்து கொள்வதற்கான போட்டிப் பரீட்சையொன்று ஆசிரியர் சேவையிலுள்ளோர் மத்தியில் 1999ஆம் ஆண்டில் நடத்தப்பட்டது. ஆயினும் குறிப்பிட்ட அந்தப் பரீட்சைக்குத் தோற்றி சித்தியடைந்தோரில் பலருக்கு இன்று வரையிலும் அதிபர் பதவி நியமனம் வழங்கப்படவில்லை. அதன் பின்னர் 2006ஆம் ஆண்டில் அதிபர் சேவை தரம் 2 - II ஆம் பிரிவில் இணைத்துக் கொள்வதற்கான போட்டிப் பரீட்சையொன்று நடத்தப்பட்டது. குறிப்பிட்ட அந்தப் பரீட்சைக்கு, அந்த வேளையில் பதில் அதிபர்கள் என்ற நியமனத்துடன் அதிபர்களாகக் கடமையாற்றி வந்தோரும் தோற்றியிருந்தனர். பதில் அதிபர் பதவியை வகித்த அனுபவத்துக்காக அவர்களுக்கு மேலதிகமாக 30 மதிப்பெண்கள் வழங்கியிருந்தும்கூட குறிப்பிட்ட அந்தப் பரீட்சைக்குத் தோற்றிய பதில் அதிபர் பதவிகளை வகித்து வந்த 4 ஆயிரம் பேருக்கு மேற்பட்டோரில் 370 பேர் மட்டுமே குறிப்பிட்ட பரீட்சையில் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

### ஆட்சியாளர்களின் ஆதரவாளர்களுக்கே முன்னுரிமை

குறிப்பிட்ட இந்தச் சிக்கலான விடயம் அரசுக்கு சிரமத்தை ஏற்படுத்துமொன்றாக ஆகியுள்ளது. இவ்விதம் பதில் அதிபர் என்ற பதவி நியமனம் பெற்றுக் கடமையாற்றி வந்தோரில் பெரும்பாலானோர் அரச தரப்புக் கட்சிகளின் ஆதரவளார்களே. ஐ.தே.கட்சி அரசு நாட்டை நிர்வகித்த வேளையிலும்கூட பதில் அதிபர்களாகப் பதவி வகித்தவர்களில் பெரும்பாலோர் ஐ.தே.கட்சியின் தீவிர ஆதரவாளர்களே. அரசியல் ரீதியில் தமது கட்சிக்கு ஆதரவான பதில் அதிபர்களது பதவிகளை நிரந்தரமாக்கி அதன் மூலம் அவர்களை நிரந்தர அதிபர்களாக ஆக்கிவிட இயலுமென்ற நோக்கிலேயே அரசு அத்தகைய பதில் அதிபர்களுக்கு அவர்களது சேவை அனுபவத்துக்காக 30 மதிப்பெண்கள் மேலதிகமாக வழங்கும் நடைமுறையைக் கைக்கொண்டிருக்கக்கூடும்.

அவ்விதம் சேவை அனுபவத்துக்கென மேலதிகமாக 30 மதிப்பெண்களை அந்தப் பதில் அதிபர்கள் தரப்பினர் ஈட்டிக்கொள்ள நேர்கையில் குறிப்பிட்ட அத்தரப்பினரில் பெரும்பாலானோர் குறிப்பிட்ட அந்தப் போட்டிப் பரீட்சையில் இலேசாக சித்தியடைய முடியும் என அரசு நம்பியிருந்திருக்கக்கூடும்.

ஆனால், தமது சேவை அனுபவத்துக்காக மேலதிகமாக 30 மதிப்பெண்களைப் பெறமுடிந்திருந்தும், 4 ஆயிரத்து 500 பேருக்கு மேலான பதில் அதிபர்களில் 370 பேரினால் மட்டுமே குறிப்பிட்ட அந்தப் போட்டிப் பரீட்சையில் சித்திபெற முடிந்தமை ஆச்சரியம் தருமொரு விடயமாகும்.

### அரசின் கைநழுவல் போக்கு

குறிப்பிட்ட போட்டிப் பரீட்சையில் சித்தியடையத் தவறிய பதில் அதிபர்கள் அரசின் தீவிர ஆதரவாளர்களாக அடையாளப்படுத்தப்படுவதன் காரணமாக, போட்டிப் பரீட்சையில் சித்தியெய்தத் தவறிய பதில் அதிபர்கள் விடயத்தில் அரசினால் அவர்களுக்கு எந்த வகையிலும் உதவிட இயலாது எனக்கூறி அரசு இன்றைய இந்த அரசியல் நடைமுறையில் இலேசாக அத்தரப்பினரைக் கைகழுவி விட்டுவிட இயலாது. அத்தரப்பினர் இந்த அரசைப் பதவியில் அமர்த்துவதற்கு முன்னின்று செயற்பட்டவர்களாவர். எதிர்காலத்திலும் கூட அத்தரப்பினரின் ஆதரவு இந்த அரசுக்கு அவசியமானதொன்றே. எனவே அரசு, அவர்கள் போட்டிப் பரீட்சையில் சித்தியெய்தத் தவறியமையைக் கணக்கில் கொள்ளாது அவர்களைப் பாதுகாக்கும் விதத்தில் தேர்வு நடைமுறையை வகுத்துச் செயற்பட்டால் மட்டுமே அரசால் அத்தரப்பினரின் அரசியல் ரீதியிலான ஆதரவை எதிர்காலத்திலும் தொடர்ந்து ஈட்டிக்கொள்ள இயலும்.

அதற்காக அரசினால் மேற்கொள்ளப்படத்தக்க ஒரேயொரு வழிமுறை, குறிப்பிட்ட அத்தரப்பினர் போட்டிப் பரீட்சையில் சித்திபெறத் தவறியமையை கணக்கில் எடுக்காமலும், அதேசமயம் குறிப்பிட்ட போட்டிப் பரீட்சையில் சித்தியடைந்த தரப்பினருக்கு முன்னுரிமை வழங்காத விதத்திலும், பதில் அதிபர்களாகக் கடமையாற்றும் சகலரையும் அவர்களது பதவிகளில் நிரந்தர நியமனம் வழங்கும் நடைமுறையைச் செயற்படுத்துவது மட்டுமேயாகும். அத்தகையதொரு நிலையில் மட்டுமே, நாம் குறிப்பிட்ட போட்டிப் பரீட்சையில் சித்திபெறத் தவறியபோதிலும் அரசு எம்மைக் கைவிடவில்லை என்றதொரு மதிப்புணர்வு அவர்கள் மத்தியில் உருவாகும். தமது தரப்பு ஆதரவாளர்களைத் திருப்திப்படுத்தி மகிழவைக்கும் அத்தகைய செயற்பாடுகள் இந்த அரசியல் நடைமுறையின் இருப்பை உறுதிசெய்வதற்கு அத்தியாவசியமானதொன்றாகும்.

குறிப்பிட்ட இந்த விடயத்தில், போட்டிப் பரீட்சைக்குத் தோற்றி அதில் சித்திபெறத் தவறிய பதில் அதிபர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கப்பட வேண்டுமென்பதில் பொதுப் போக்குவரத்துத்துறை அமைச்சர் வெளிப்படையாகவே ஆதரவு தெரிவித்து வருகிறார்.

அது மட்டுமல்லாமல், குறிப்பிட்ட இந்தப் பதில் அதிபர்களை அவர்களது பதவிகளில் நிரந்தரமாக்குவதற்கு சுதந்திரக்கட்சி கடும் ஆர்வம் காட்டிச் செயற்படுவதாகவும் பகிரங்கமாகத் தெரிவித்துள்ளார். அதேவேளை ஐ.தே.கட்சி தற்போது ஆட்சி அதிகாரத்தில் இருந்தாலும்கூட, ஐ.தே.கட்சியினர் இவ்விடயத்தில் இத்தகைய கருத்து நிலைப்பாட்டைப் பேணுவதின்றும் தவிர்த்துவிட இயலாது.

### என்ன நோக்கத்தில் அரசு போட்டிப் பரீட்சையை நடத்துகிறது?

சகல அரசதுறை நியமனங்களை மேற்கொள்ளவும், பதவி உயர்வுகளை வழங்கவும் பற்பல போட்டிப் பரீட்சைகள் நடத்தப்படுகின்றன. அதற்காக அரசு குறிப்பிடத்தக்க அளவு நிதியைச் செலவு செய்யவும் நேரிடுகின்றது. குறிப்பிட்டதொரு போட்டிப் பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்திகள் அதற்காகக் குறிப்பிடத்தக்க அளவு காலத்தை பரீட்சைக்குத் தம்மைத் தயார் செய்வதற்காகப் பயன்படுத்த நேர்கிறது. அத்துடன் குறிப்பிடத்தக்கதொரு தொகைப் பணத்தையும் அவர்கள் செலவு செய்யவேண்டி நேர்கிறது. ஆயினும் இத்தகைய பெரும்பாலான போட்டிப் பரீட்சைகளின் முடிவுகள் பகிரங்கமாக வெளியிடப்படுவதில்லை.

அது மட்டுமல்லாது, இத்தகைய பதவி வெற்றிடங்களுக்காக நியமனம் பெறுவோர், சம்பந்தப்பட்ட போட்டிப் பரீட்சைக்குத் தோற்றி அவற்றின் முடிவுகளின் அடிப்படையில் சித்தியடைந்தோரல்லாது, அரசியல்வாதிகளது அடிவருடிகளேயாவர். இத்தகைய ஊழல் மிக்க தேர்வு நடைமுறை, உண்மையான தகுதிகொண்டுள்ள நபர்கள் வெற்றிடமாகவுள்ள பதவிகளுக்கு நியமனம் பெறுவதற்காக வாய்ப்பையும் அற்றுப்போய்விடச் செய்கிறது. அது மட்டுமன்றி இந்நடைமுறை குறிப்பிட்ட பதவிகளை வகிக்கத் தகுதியுடைய திறமைசாலிகள் இருக்கத்தக்கதாக, தகுதியற்ற திறமை குறைந்த நபர்களுக்குப் பொறுப்புக்களைக் கையளிப்பதன் மூலம் நாட்டின் அபிவிருத்தித்துறை நடவடிக்கைகளும் நேர்சீராக முன்னெடுக்கப்படாது நலிவு நிலை காணநேர்கிறது.

### கல்வித்துறைக்கு ஏற்படும் நலிவு

மற்றொரு புறத்தில் குறிப்பிட்ட பதவிகளை வகிக்கத் தகுதியுடைய நபர்கள் இருக்கும் நிலையில், பதில் அதிபர்களின் பதவிகளை நிரந்தரமாக்குவதன் மூலம் அரசின் இருப்பை வலுவடைய வைக்கும் அணுகுமுறையைக் கைக்கொள்வதானால், அத்தகைய செயற்பாடு நாட்டின் பாடசாலைக் கல்வித் துறைக்குப் பெரும் நலிவையும் பின்னடைவையும் ஏற்படுத்தவல்ல பாதிப்பாக அமையும். அதன் மூலம் இந்நாட்டின் மாணவ சமுதாயத்தின் - கல்வி அபிவிருத்தி நாசமுற நேரும்.

- பாடசாலை மட்டக் கல்விச் செயற்பாடுகளில் பாடசாலை அதிபர்கள் வகிக்கும் பங்களிப்பு மிக முக்கியமான தொன்றாகும். இலங்கையின் பின் தங்கிய கிராமப்புறக் கல்விநிலை தொடர்பாக ஆய்வு முயற்சிகளில் ஈடுபட்டுள்ள பேராசிரியர் விக்டோரியா ஜே.பேகரின் கூற்றுப்படி, "ஒரு பாடசாலையில் கடைப்பிடிக்கப்படும் பலனளிக்கத்தக்க கற்பித்தல் செயற்பாடுகள் தொடர்பாக முக்கியமானதும் பெறுமதிமிக்கதுமான பாத்திரத்தை வகிக்கத்தக்கவர் அப்பாடசாலையின் அதிபரேயாவார்.

### அதிபரின் முக்கியத்துவம்

அவசியமான அடிப்படைக் கல்வித்தகமை மற்றும் அனுபவம் என்பவற்றுடன், நாட்டின் எதிர்கால பிரஜைகளை உருவாக்கி வைக்கும் திடசங்கற்பத்துடன், மாணவர்களின் திறமைகளை வளர்த்துவிடும் ஒரே இலக்குடன், முடிந்த அளவுக்குத் தனிப்பட்ட தேவைக்காக விடுமுறை எடுத்துக்கொள்வதைத் தவிர்த்துக்கொள்ளும் அர்ப்பணிப்பு உணர்வுடன், ஏனையோருக்கு முன்னுதாரணமாகச் செயற்பட்டுக் காட்டும் பொறுப்புணர்வுடன் செயற்படுமொருவராக அடையாளப்படுத்தப்படும் ஒரு கல்லூரி அதிபர், தாம் நிர்வகிக்கும் அக்கல்லூரியின் மாணவ, மாணவியர் கற்றல் செயற்பாடுகளில் மட்டுமன்றி, ஏனைய பல துறைகளிலும் சிறந்து விளங்கி தாம் நிர்வகிக்கும் கல்லூரிக்குப் பெருமைதேடித்தர வேண்டுமென்ற ஒரே குறிக்கோளுடன் கடும் முயற்சியெடுத்துச் செயற்படுமொரு பாத்திரமாகவே அவர் கொள்ளப்படுகிறார்."

அத்தகைய பண்புகொண்ட எத்தனையோ அதிபர்கள் நம் மத்தியில் செயற்பட்டு வருகின்றனர் என்பது மறுத்திட இயலாததொரு உண்மையே ஆகும். அத்தகையதொரு பண்பு கொண்டதொரு அதிபரால், வாய்ப்பற்ற சூழ்நிலையில் அமைந்து, அதன் காரணமாக வளர்ச்சி காணாத - தோல்வி நிலையில் இயங்கிவரும் எந்தவொரு பாடசாலையானபோதிலும், அதனை வளர்ச்சியின் பாதையில் இட்டுச்சென்று வெற்றிகளை ஈட்டுமொரு பாடசாலையாக மாற்றிக் காட்ட இயலும். ★

**தமிழில்: ராஜா**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலைகள் 13 வயதுப் பிரிவுத் துடுப்பாட்டம்; யாழ்.சென்றல் மாவட்டச் சம்பியனாகத் தெரிவு

வலி.வடக்கு,டிசெ.27

இலங்கைப் பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணப் பாடசாலைகள் கிரிக்கெட் சங்கம், யாழ்ப்பாணம் செலான் வங்கி அனுசரணையுடன் யாழ்ப்பாணப் பாடசாலைகளின் 13 வயதுப் பிரிவினர்களுக்கு இடையே நடத்திய கிரிக்கெட் சுற்றுப்போட்டியில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் சென்.ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற இறுதிப்போட்டியில் யாழ்ப்பாணம் சென்.ஜோன்ஸ் கல்லூரியும் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியும் மோதிக்கொண்டன.

பூவா, தலையா போட்டதில் வெற்றி பெற்ற சென்.ஜோன்ஸ் கல்லூரி களத்தடுப்பில் ஈடுபடத் தீர்மானித்தது.

முதலில் துடுப்பெடுத்தாடிய யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி 38 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 92 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது.

சௌமிதரன் 33, அனுசாந்தன் 9, யூலியஸ் 8 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டதுடன் உதிரிகளாக 20 ஓட்டங்களும் பெறப்பட்டன.

துவாரகசீலன் 9 ஓவர்கள் பந்துவீசி 3 ஓட்டமற்ற ஓவர்களுடன் 8 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுகளையும், ஜோரஞ்சன் 5 ஓவர்கள் பந்துவீசி ஓர் ஓட்டமற்ற ஓவருடன் 7 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுகளையும், துசாந் 7 ஓவர்கள் பந்துவீசி 4 ஓட்டமற்ற ஓவர்களுடன் 17 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுகளையும், அனோஜன் 10 ஓவர்கள் பந்துவீசி ஓர் ஓட்டமற்ற ஓவருடன் 27 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினார்கள்.

93 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு பதிலுக்குத் துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய சென்.ஜோன்ஸ் கல்லூரி 24 ஓவர்களில் 5 விக்கெட்டுகளை இழந்து 42 ஓட்டங்களைப் பெற்றிருந்தவேளையில் மழை பெய்ததைத் தொடர்ந்து ஆட்டம் இடைநிறுத்தப்பட்டது.

தொடர்ந்து விளையாடமுடியாத அளவுக்கு மழை பெய்ததைத் தொடர்ந்து ஆட்டத்தின் முடிவு நடுவர்களினால் தீர்மானிக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் சென்.ஜோன்ஸ் கல்லூரி சார்பில் துடுப்பெடுத்தாடிய துசியந் 19, பிரியசங்கர் 5 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டதுடன் உதிரிகளாக 10 ஓட்டங்களும் பெறப்பட்டன.

யாழ்.மத்திய கல்லூரி சார்பில் பந்து வீசிய அனுசாந் 6 ஓவர்கள் பந்துவீசி 2 ஓட்டமற்ற ஓவர்களுடன் 4 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுகளையும், நிரூபன் 6 ஓவர்கள் பந்துவீசி 2 ஓட்டமற்ற ஓவர்களுடன் 6 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டையும், யூலியஸ் 6 ஓவர்கள் பந்துவீசி ஓர் ஓட்ட மற்ற ஓவருடன் 14 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினார்கள்.

சர்வதேச கிரிக்கெட் விதிகளுக்கு அமைவாக, பரப்பளவு விதிகளுக்கு அமைவாக வீசி முடிக்கப்பட்ட இரு அணிகளினதும் 24 பந்து பரிமாற்றங்களின் ஓட்ட எண்ணிக்கையின் அடிப்படையில் முடிவு தீர்மானிக்கப்பட்டது.

இரு அணிகளும் வீசிய 24 பந்து பரிமாற்றங்களில் பெறப்பட்ட ஓட்ட எண்ணிக்கைகளின் அடிப்படையில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி 60 ஓட்டங்களையும், யாழ்ப்பாணம் சென்.ஜோன்ஸ் கல்லூரி 42 ஓட்டங்களையும் பெற்று இருந்ததன் அடிப்படையில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி 18 ஓட்டங்களினால் வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டது.

இப்போட்டிகளில் 14 பாடசாலைகளின் அணிகள் பங்குபற்றியிருந்தன.

இறுதிப்போட்டியில் யாழ்.மத்திய கல்லூரியைச் சேர்ந்த எஸ்.சௌமிதரன் சிறந்த துடுப்பாட்ட வீரனாகவும், எஸ்.அனுசாந்தன் சிறந்த பந்துவீச்சாளராகவும், எஸ்.சௌமிதரன் ஆட்டநாயகனாகவும், யாழ்ப்பாணம் சென்.ஜோன்ஸ் கல்லூரியைச் சேர்ந்த எஸ்.துசாந் சிறந்த களத்தடுப்பாளராகவும் தெரிவுசெய்யப்பட்டனர்.

சுற்றுப்போட்டியின் சிறந்த துடுப்பாட்ட வீரனாக சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரியைச் சேர்ந்த வி.விதுசனும் சிறந்த பந்துவீச்சாளராக கொக்குவில் இந்துக் கல்லூரியைச் சேர்ந்த ஆர்.பார்த்தீபனும் தெரிவு செய்யப்பட்டனர். (1-86)

## கூடைப்பந்தாட்டம்

யாழ்ப்பாணம்,டிசெ.27

யாழ்.மாவட்டக் கூடைப்பந்தாட்டச் சங்கம் கொக்குவில் இந்துக் கல்லூரி கூடைப்பந்தாட்ட ஆடுகளத்தில் நடத்திவரும் சுற்றுப்போட்டியில் இன்று இடம்பெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகளின் விவரம் வருமாறு:

* *பி.ப. 3 மணி* - ஓல்ட்கோல்ட் 'ஏ' அணி எதிர் டி.ஈ.மசனட் அணி.
* *பி.ப. 4 மணி* - ஓல்ட்கோல்ட் 'பி' அணி எதிர் ஜொனியன்ஸ் அணி. (1)

## கரபந்து மத்தியஸ்தர்களுக்கு பயிற்சி வகுப்புகள்

யாழ்ப்பாணம்,டிசெ.27

வடமாகாண கரபந்தாட்ட மத்தியஸ்தர் சங்கம் புதிய மத்தியஸ்தர் தெரிவுக்கான பயிற்சி வகுப்புகளை இன்றும் நாளையும் ஜனவரி 3, 4ஆம் திகதிகளிலும் யாழ்.இந்துக் கல்லூரியில் நடத்தவிருக்கிறது.

கரபந்தாட்ட மத்தியஸ்தர்களாக இணைய விரும்புபவர்கள் குறித்த திகதிகளில் காலை 9 மணிக்குச் சமுகம் தருமாறு கேட்கப்பட்டுள்ளனர். (1)

## சர்வதேச சுத்திகரிப்பு ஆண்டையொட்டி பாடசாலை மாணவரிடையே போட்டி

யாழ்ப்பாணம்,டிசெ.27

ஐக்கிய நாடுகள் ஸ்தாபனம் 2008ஆம் ஆண்டு சர்வதேச சுத்திகரிப்பு ஆண்டாகப் பிரகடனப்படுத்தியுள்ளதையடுத்து, இது தொடர்பாக பாடசாலை மாணவர்களிடையே சித்திரப் போட்டியை அகில இலங்கை ரீதியில் கல்வியமைச்சு நடத்தவுள்ளது.

4ஆம், 5ஆம் தர மாணவர்களிடையே ஆரம்பப் பிரிவாகவும், 6ஆம் தரம் தொடக்கம் 9ஆம் தரம் வரையிலான மாணவர்களிடையே கனிஷ்ட பிரிவாகவும், 10ஆம் தரம் தொடக்கம் 13ஆம் தரம் வரையிலான மாணவர்களிடையே சிரேஷ்ட பிரிவாகவும் இப்போட்டி நடத்தப்படவுள்ளது.

இப்போட்டிக்கான சித்திரங்கள் பாடசாலை அதிபர்கள் ஊடாக எதிர்வரும் ஜனவரி மாதம் 15ஆம் திகதிக்கு முன்னர் 'ஐ.எப்.ஆர்.சி', தொனிப்பொருள் சுத்திகரிப்பு, 16/2, கரகரி வீதி, கொழும்பு - 07' என்ற முகவரிக்கு அனுப்பிவைக்கப்படவேண்டும்.

சகல மாகாணங்களிலிருந்தும் தேர்ந்தெடுக்கப்படும் வெற்றியாளர்கள் 9 பேருக்குப் பெறுமதிமிக்க பரிசில்களும் சான்றிதழ்களும் வழங்கப்படும்.

நீர் மற்றும் சுத்திகரிப்பு வசதிகள் மக்களின் அடிப்படைத் தேவைகளாகும். இந்த வசதிகளை உரியவாறு பயன்படுத்துவது தொடர்பாகச் சிறார்கள் மத்தியில் சிந்தனை ரீதியான மாற்றங்களை ஏற்படுத்துவதன் மூலம் இச்செய்தியைப் பெற்றோர் மற்றும் சமூகத்திற்கு உணர்த்தவே பாடசாலை மாணவர்கள் மத்தியில் சித்திரப் போட்டியை நடத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது எனக் கல்வியமைச்சின் மேலதிகச் செயலாளர் கே.டீ.என்.ரஞ்சித் அசோக்கா தெரிவித்துள்ளார். (202-236)

## தையல் ஆசிரியர் பதவிக்கு விண்ணப்பிக்கலாம்

வடமராட்சி,டிசெ.27

வடமராட்சி செவிப்புலனற்றோர் நிறுவனம் விரைவில் ஆரம்பிக்கவுள்ள தையல் பாடசாலைக்கு தையல் ஆசிரியர் பதவிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

தகுதியான தையல் ஆசிரியர்கள் எதிர்வரும் ஜனவரி மாதம் 4ஆம் திகதிக்கு முன் தலைவர், செவிப்புலனற்றோர் நிறுவனம், நெல்லியடி, கரவெட்டி என்னும் முகவரிக்கு விண்ணப்பிக்குமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

எதிர்வரும் ஜனவரி மாதம் இரண்டாம் வாரத்தில் நெல்லியடியில் ஆரம்பிக்கப்படவுள்ள நிறுவனத் தையல் பயிற்சிப் பாடசாலையில் செவிப்புலனற்றோர் மற்றும் அனைவருக்கும் தையல் பயிற்சி அளிக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (202-236)

## வெள்ளம், புயலால் பாதிக்கப்பட்ட வடபகுதி மக்களுக்கு அனர்த்த நிதியாக லயன்ஸ் கழகம் 11 லட்சம் ரூபா ஒதுக்கீடு

யாழ்ப்பாணம்,டிசெ.27

வடபகுதியில் கடந்த மாத இறுதியில் ஏற்பட்ட வெள்ளம் மற்றும் நிஷா புயலினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு அனர்த்த நிதி உதவி வழங்குவதற்கென சர்வதேச லயன்ஸ் கழகங்களின் நிதியம் 11லட்சம் ரூபாவை ஒதுக்கியுள்ளது.

இந்த நிதி பாதிக்கப்பட்ட மிகவும் வறிய மக்களுக்கு உலர் உணவாக வழங்கப்படவுள்ளது. 306 பி 1 மாவட்ட ஆளுநர் லயன் நிமால் ராஜபக்ஷவின் வேண்டுகோளுக்கு இணங்க இந்நிதி வழங்கப்பட்டுள்ளது.

மன்னார் லயன்ஸ் கழகத்திற்கு ஒரு லட்சத்து 25 ஆயிரம் ரூபாவும், யாழ்.மாவட்டத்தில் இயங்கும் 17 லயன்ஸ் கழகங்களுக்கு 9 லட்சத்து 75 ஆயிரம் ரூபாவும் இந்நிதியிலிருந்து வழங்கப்பட்டுள்ளது.

இந்நிதி பிரதி மாவட்ட ஆளுநர் சபைப் பொருளாளர் லயன் எஸ்.எஸ்.தங்கராஜாவால் கழகங்களுக்கு அண்மையில் வழங்கப்பட்டது.

இச்சேவையின் மூலம் ஆயிரத்துக்கு மேற்பட்ட அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட வறிய குடும்பங்கள் பயனடையும் என பொருளாளர் எஸ்.எஸ்.தங்கராஜா தெரிவித்தார். (202)



பாழ்.சாயி சேவா நிலையத்தில் அண்மையில் மகளிர் திருவிளக்குப் பூசை செய்யும் காட்சி.

## காலங் கடந்த நடவடிக்கைகளுக்கு நடமாடும் சேவை

வடமராட்சி,டிசெ.27

வடமராட்சி வடக்குப் பருத்தித்துறைப் பிரதேச செயலர் பிரிவைச் சேர்ந்த சுமார் 150 பேருக்கான பிறப்பு, இறப்பு, திருமணம் தொடர்பான காலங்கடந்த பதிவுகளை மேற்கொள்ள நடமாடும் சேவை மூலம் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகப் பிரதேச செயலர் இ.வரதீஸ்வரன் தெரிவித்தார்.

காலம் கடந்த பதிவுகளை மேற்கொள்வதற்காக வடமராட்சி வடக்கு, பருத்தித்துறைப் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் வடமராட்சி லயன்ஸ் கழகத்தின் அனுசரணையுடன் நடமாடும் சேவை இடம்பெற்றது.

வடக்கு வலய உதவிப் பதிவாளர் நாயகம் திருமதி மகாராணி இராசரத்தினம் தலைமையில் பிரதேச செயலாளர் இ.வரதீஸ்வரனின் உதவியுடன் நடைபெற்ற இந்நடமாடும் சேவையில் குடாநாட்டிலுள்ள ஏனைய பிரதேச செயலகங்களைச் சேர்ந்த மேலதிக மாவட்டப் பதிவாளர்கள் மற்றும் உள்ளூர் மட்ட பிறப்பு, இறப்பு, விவாகப் பதிவாளர்கள் பலரும் கலந்துகொண்டு சேவைகளை வழங்கினர்.

## மூத்த எழுத்தாளர் தம்பையாவுக்கு இவ்வாண்டுக்கான கலாபூஷணம் விருது


வடமராட்சி,டிசெ.27

மூத்த எழுத்தாளர் புலோலியூர் க.தம்பையாவுக்கு இந்துசமய கலாசார அமைச்சினால் (2008) இவ்வாண்டுக்கான கலாபூஷணம் விருது வழங்கப்பட்டுள்ளது.

அரைநூற்றாண்டுக்கு மேலாக இலக்கியத்துறையில் ஈடுபட்டுவரும் இவர் நூற்றுக்கு மேற்பட்ட சிறுகதைகள், நகைச்சுவை நாடகங்கள், கவிதைகள் என படைத்துள்ளார்.

''கலைமகள்'' நிறுவன ஆசிரியரும், தமிழ்ப் பேரறிஞருமான கி.வா.ஜெகநாதனின் மணிவிழாவையொட்டி 1966ஆம் ஆண்டு அகில இலங்கை ரீதியில் நடத்தப்பட்ட சிறுகதைப் போட்டியில் முதல் பரிசான தங்கப் பதக்கத்தை இவர் பெற்றுள்ளார்.

அத்துடன் சதாவதானி கதிரவேற்பிள்ளையின் நினைவாக 1976ஆம் ஆண்டு அகில இலங்கை ரீதியில் நடத்தப்பட்ட சிறுகதைப் போட்டியில் இவரது ''ஓர் ஆசிரியர் அநாதையாகிறார்'' என்ற சிறுகதைக்கும், நில அளவைத் திணைக்கள இந்துசங்கம் பத்தாவது ஆண்டு நிறைவையொட்டி 1975ஆம் ஆண்டு நடத்திய சிறுகதைப் போட்டியில் இவரது ஒரு தாய், ஒரு மகள், ஒரு தேவன் என்னும் சிறுகதைக்கும் முதல் பரிசான தங்கப் பதக்கம் கிடைத்துள்ளது.



1998ஆம் ஆண்டுக்காலப்பகுதியில் பத்திரிகைகளில் வெளிவந்த சிறுகதைகளில் புலோலியூர் தம்பையா எழுதிய ''பணக்கார அநாதைகள்'' என்ற சிறுகதையை சிறந்த சிறு கதையாக இந்து சமய கலாசார இலக்கியக் குழு இவருக்குப் பணப்பரிசு கொடுத்துக் கௌரவித்திருக்கிறது.

இவர் ''அழியும் கோலங்கள்'', ''ஐம்பதிலும் ஆசை வரும்'' என்னும் இரு சிறுகதைத் தொகுதிகளை வெளியிட்டுள்ளார்.

புற்றளை, புலோலியைச் சேர்ந்த இவர் 1956ஆம் ஆண்டு நிலஅளவைத் திணைக்களத்தில் படவரை தொழில்நுட்ப உத்தியோகத்தராகப் பதவி ஏற்று, பல உயர் பதவிகளை வகித்த பின்னர் 1984ஆம் ஆண்டு சேவையிலிருந்து இளைப்பாறினார். (202-236)

## மீனின் விலை வீழ்ச்சி

நவாலி,டிசெ.27

ஆனைக்கோட்டை மாலைநேரச் சந்தையில் கடந்த சில நாள்களாக மீனின் விலை மிகவும் வீழ்ச்சியடைந்துள்ளது.

மக்கள் மோட்டார் சைக்கிள்கள், ஓட்டோ என்பவற்றில் வந்து இங்கு மீன் கொள்வனவு செய்கின்றனர். (202-100)

## கரோல் நிகழ்வு

நவாலி,டிசெ.27

நத்தார், புதுவருடத்தையொட்டி நவாலிப் பகுதியில் இரவுவேளையில் இளைஞர்கள் கரோல் நிகழ்ச்சிகளை கடந்த சில தினங்களாக வீட்டுக்கு வீடு சென்று நடத்தி வருகின்றனர். (202-100)

## நிவாரணம் விநியோகம்

நவாலி,டிசெ.27

மானிப்பாய் ப.நோ.கூ. சங்கக் கிளைகளில் தற்போது உலக உணவுத் திட்டத்தினால் வழங்கப்படும் நிவாரணம், சமுர்த்தி நிவாரணம், பங்கீட்டு அட்டைக்கான சீனி என்பன வழங்கப்பட்டு வருகின்றன. (202-100)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'X'MAS SALE

## நத்தார் புது வருட அதிரடி அசத்தல் மலிவு விற்பனை

NEW YEAR SALE

சகல ஆடை வகைகளுக்குமான விலைக் கழிவு,
ரூபா 5000/=க்கு மேல் கொள்வனவு செய்யும்
பெண்களுக்கு ஸ்கேட் & பிளவுஸ் ஒன்றும்
ஆண்களுக்கு ரீசேட் ஒன்றும் நத்தார் பரிசாக வழங்கப்படும்.
என்றும் இல்லாத, எங்குமில்லாத் தெரிவுகளுக்கு



**மிலேனியம் பெஷன் & பொம்பே பஸார்**

மலாயன் கபே முன்பாக
*இல.10, 11, மின்சார நிலைய வீதி,*
*பெரிய கடை, யாழ்ப்பாணம்.*


## தீவகக் கல்வி வலய பாடசாலைகளுக்கு திங்கள்- புதன் வரை சீருடை விநியோகம்

யாழ்ப்பாணம், டிசெ.27

தீவகக் கல்வி வலயத்துக்கு உட்பட்ட பாடசாலைகளுக்கு சீருடை விநியோகிக்கப்படவுள்ளது.

வேலணை கோட்டத்திற்குட்பட்ட பாடசாலைகளுக்கு நாளை மறுதினம் திங்கட்கிழமையும், ஊர்காவற்றுறை கோட்டத்திற்குட்பட்ட பாடசாலைகளுக்கு எதிர்வரும் செவ்வாய்க்கிழமையும், நெடுந்தீவு கோட்டத்திற்குட்பட்ட பாடசாலைகளுக்கு எதிர்வரும் புதன் கிழமையும் சீருடைகள் வழங்கப்படவுள்ளன.

பாடசாலைகளின் அதிபர்கள் நேரில் சமுகமளித்து தமக்குரிய சீருடைகளைப் பெற்று மாணவர்களுக்கு விநியோகிக்கும்படி கேட்கப்படுகின்றனர்.

(204)

## செந்தாரகைப் படகின் வெள்ளோட்ட விழா-27.12.2008

காலம்: இன்று (27.12.2008) சனிக்கிழமை மு.ப.10 மணி தொடக்கம் ந.ப.12 மணி வரையுள்ள சுபவேளையில்
இடம்: நயினாதீவு, புங்குடுதீவு துறைமுகம்
தலைவர்: வைத்திய கலாநிதி சு.இராசரெட்ணம் J.P.
(புங்குடுதீவு- நயினாதீவு ப.நோ.கூ.சங்கத் தலைவர்)

**பிரதம விருந்தினர்:**
உயர்திரு.க.கணேஷ் (அரசாங்க அதிபர், யாழ்.)

**சிறப்பு விருந்தினர்கள்:**
திரு.மு.நந்தகோபாலன் (பிரதேச செயலர், வேலணை)
திரு.பொ.சிவலிங்கம்
(கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர், யாழ்.மாவட்டம்)
திரு.ஆ.தியாகராசா
(தலைவர், நயினாதீவு நாகபூசணி அம்பாள் ஆலய அறங்காவலர் சபை)

**கௌரவ விருந்தினர்கள்:**
திரு.சில்வெஸ்திரி அலன்டிவ்றுட்
(அமைப்பாளர், ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி, யாழ்.மாவட்டம்)
திரு.ந.கருணாகரகுருமூர்த்தி J.P.
(முன்னாள் வேலணை பிரதேசசபை தவிசாளர்)
திரு.சி.சிவராசா (போல்)
(ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி வேலணைப் பொறுப்பாளர்)
திரு.க.நிமலன்
(கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர்)

(இ/556261)

**அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.**

பணிப்பாளர்கள், பணியாளர்கள், அங்கத்தவர்கள்,
புங்.நயி.பல நோ.கூ.சங்கம்.

## வீதி புனரமைப்பு

கோப்பாய், டிசெ.27

யாழ்.பருத்தித்துறை வீதி தற்போது செப்பனிடப்பட்டு வருகிறது.

அண்மையில் ஏற்பட்ட வெள்ளத்தினால் இவ் வீதியின் பல இடங்கள் சேதமடைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

(202-72)

## கருத்தரங்கு

சாந்திகத்தின் ஏற்பாட்டில் மக்களிடையே சுகாதார விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கில் சுகாதார விழிப்புணர்வு கருத்தரங்கு நடத்தப்படவுள்ளது.

இன்று சனிக்கிழமை காலை 10 மணிக்கு ஏழாலை தெற்கு (ஜே/202) கிராமசேவகர் பிரிவில் நடைபெறுகின்ற இந்நிகழ்வில் கருத்துரைகள் இடம்பெறும்.

(202-224)

## மரக்கன்றுகள் நடுகை

இணுவில், டிசெ.27

இணுவில் பூவோடை இந்து மயானத்தின் அபிவிருத்திச் சபையினர் அண்மைய நிஷா புயலினால் அழிக்கப்பட்ட மரங்களுக்குப் பதிலாக மயானத்தில் புதிய மரக் கன்றுகளை நாட்டி வருகிறார்கள்.

(202-45)

## ஒளிவிழா

வலி.வடக்கு, டிசெ.27

ஏழாலை வடக்கு அமெரிக்கன் மிஷன் தமிழ் கலவன் பாடசாலையின் ஒளிவிழா இன்று சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு அதிபர் த.வாமதேவன் தலைமையில் பாடசாலை மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இந் நிகழ்வில் முதன்மை விருந்தினர்களாக வண.பிதா எ.ஜே.ஜெயசீலன், இரட்சனிய சேனையைச் சேர்ந்த மேயர் நியூட்டன் ஜேக்கப், தென்னிந்திய திருச்சபையை சேர்ந்த கே.ஜே.டபிள்யூ. தேவசகாயம், கிராம அலுவலர் க. சிவானந்தம் ஆகியோர் கலந்து கொள்வர். (202-86)

## முன்பள்ளி ஆசிரியர் கூட்டம்

யாழ்ப்பாணம், டிசெ.27

வலி.கிழக்கு பிரதேச சபைக்குட்பட்ட முன்பள்ளி ஆசிரியர்களுக்கான பொதுக் கூட்டம் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை தலைமை அலுவலக மாநாட்டு மண்டபத்தில் மு.ப.10 மணிக்கு நடைபெறவுள்ளது.

## இறுதிப் பரீட்சை

யாழ்ப்பாணம், டிசெ.27

சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தினரால் நடத்தப்பட்ட ஆங்கிலப் பயிற்சி வகுப்புகளில் பங்குபற்றியவர்களுக்கான இறுதிப்பரீட்சை நாளை மறுதினம் திங்கட்கிழமை காலை 9 மணிக்கு சாவகச்சேரி மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

பயிற்சி வகுப்புகளில் பங்குபற்றியவர்களை இறுதிப் பரீட்சைக்குத் தோற்றுமாறு கழகச் செயலாளர் லயன் எஸ்.கே. நவரத்தினம் அறிவித்துள்ளார். (202-207)

## வினைத்திறன் பரீட்சை

நல்லூர், டிசெ.27

சமுர்த்தி முகாமையாளர்களுக்கான வினைத்திறன்காண் பரீட்சைகள் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு யாழ்.வைத்தீஸ்வரா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

கொழும்பில் அன்றையதினம் நடைபெறும் என அறிவிக்கப்பட்டிருந்த மேற்படி பரீட்சை யாழ்ப்பாணத்திலும் நடைபெறுகின்றது.

மேற்படி பரீட்சையில் தோற்றுபவர்கள் தத்தமது பிரதேச செயலர்களூடாகத் தமது அனுமதிகளை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

(202-111)

## நன்றி கூறி பாராட்டுகின்றோம்



நாவற் குழியாம் நற்பதி மேற்கில்
வீட்டுத் திட்டம் முந்நூறா மதில்
வாழும் மக்கள் வசதிகள் கருதி
மின் இணைப்பு, பதிபுன ரமைப்பு,
எவரும் தினசரி இனிது விளை யாட
மைதா னத்தினை பெரிதாய் திருத்தி
சனச மூக நிலையம் நடத்த
கட்டடம் கட்ட காசுகள் ஒதுக்கி
வெள்ளத்தால் நாம் வேதனை
அடைந்ததை
அறிந்து கவலை மனத்திடை கொண்டு
நிவாரணம் தர ஒழுங்குகள் செய்துடன்
காணிக ளுக்கு பத்திரம் வழங்கிடும்
மாண்பு மிகுந்த அமைச்சர் டக்ளஸ்
தேவானந்தா ஐயா அவர்கள் தமக்கு
நன்றிகள் கூறிப் பாராட்டு கின்றோம்.

(81192)

நாவற்குழி மேற்கு,
முந்நூறு வீட்டுத்
திட்டத்தில்
வாழ் J/294
மக்கள்.

## நீங்காத நினைவுகளில் ஒன்பதாண்டு



மண்ணில்
10.11.1924

விண்ணில்
27.12.1999

### அமரர் ஆசிரியமணி நமசிவாயம் வாதவூரர்

(அளவெட்டி வடக்கு)

அப்பா,
ஆண்டுகள் ஒன்பது கடந்தாலும்
ஆறவில்லை எம் துயரம்
நீண்டிருக்கும் நினைவுகளை
நெஞ்சிலே சுமந்து வாழ்கின்றோம்
மீண்டிங்கு வாரீரோ!

(81194)

மாவிலங்கை,
அளவெட்டி வடக்கு, அளவெட்டி.

குடும்பத்தினர்.

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



அன்னை மடியில்
10.02.1925

ஆண்டவன் திருவடியில்
27.11.2008

### அமரர் முத்தையா நல்லமுத்து

உயர்ந்த உள்ளம் படைத்த உயர்வான தலைவியே!
அம்மாவில்லை யென பிள்ளைகள் கலங்கிட மாமியில்லை யென
மருமக்கள் கலங்கிட அம்மம்மா, அப்பம்மா இல்லை யென
பேரப்பிள்ளைகள் கலங்கிட பாட்டியில்லையென பூட்டப்பிள்ளைகள்
கலங்கிட அன்பையும் பாசத்தையும் அள்ளித்தந்து விட்டு [27.11.2008]
வியாழக்கிழமை இறைபதமெய்திய எமது குடும்பத் தலைவியின்
இறுதிக்கிரியைகளில் கலந்து கொண்டோருக்கும் தொலைபேசி மூலம்
தமது அனுதாபங்களைத் தெரிவித்து எமது துயரில் பங்கு கொண்டோருக்கும்
எமது மனம் நிறைந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இன்று (27.12.2008) சனிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் வீட்டுக்கிருத்தியத்திலும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இராமகிருஷ்ணா வீதி,
கோண்டாவில் கிழக்கு.

(81191)

குடும்பத்தினர்.

## முதலாம் ஆண்டு நினைவலைகள்

### பிரம்மஸ்ரீ சிவகணேசக் குருக்கள் கணேசராஜ சர்மா

ஓம்
நமசிவாய
நம
ஓம்



ஐயப்ப
சரணம்
ஐயப்பா

**திதி: 18.12.2007**

காலமெல்லாம் சேர்ந்திருப்போம்
என்று என் கைபிடித்தாய்
உணர்வினை உணர்த்தி
உயிர்களைக் கொடுத்தாய்
உயிர்களை மறக்கலாமோ?
உரிமை இழந்து நிற்கின்றோம்
எங்கள் கண்களில் கண்ணீர் சொரிகிறதே!
எங்கள் குல தெய்வம்.

கோப்பாய் தெற்கு,
கோப்பாய்.

(81176)

என்றும் நினைவுடன்:
*மனைவி:* க.தனுஷி,
*மகன்:* க.ஜெகதீஸ்வர சர்மா, *மகள்:* க.துர்க்காஜினி.

## மரண அறிவித்தல்

### திருமதி செல்லையா இராசமணி



கொடிகாமத்தைப் பிறப்பிடமாகவும் "துவாரகை", கண்டி வீதி, பளையை வசிப்பிடமாகவும் வன்னியைத் தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி செல்லையா இராசமணி நேற்றுமுன்தினம் (25.12.2008) வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராமு-சின்னப்பிள்ளை தம்பதியரின் சிரேஷ்ட புதல்வியும் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி-நாகம்மா தம்பதியரின் அன்பு மருமகளும் செல்லையா (கலாபூசணம்) அவர்களின் பாசமிகு துணைவியும் அமரர் தம்பிப்பிள்ளை மற்றும் இராசம்மா, அன்னம்மா (பிரான்ஸ்), யோகராசா (கனடா), தவமணி ஆகியோரின் அன்புச் சகோதரியும் நவரட்ணராசா (ஜேர்மனி), தனபாலசிங்கம் (கொழும்பு), குணபாலசிங்கம் (அதிபர்), இரத்தினசிங்கம், இரத்தினகுமார் (முகாமையாளர்), கிருஷ்ணவேணி (கனடா), லோகநாதன் (கொழும்பு), இராமலட்சுமி, விஜயகுமாரி (ஆசிரியர்), ஜெயலலிதா (பிரதி அதிபர்), மோகனவனிதா (ஆசிரியர்), கோமதி (இலிகிதர்) ஆகியோரின் அன்புத் தாயும் கனகரத்தினம், நாகேஸ்வரி, திரேசாஞானமணி, சரஸ்வதி, புவனேஸ்வரி, வேலாயுதம் (கனடா), பவானி, மகேந்திரம், ஞானசிறீ, துரைசிங்கம் (முகாமையாளர்), தவேந்திரன், இராஜபாஸ்கரன் ஆகியோரின் அன்பு மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.12.2008) சனிக்கிழமை வன்னியிலுள்ள அவரது தற்காலிக வதிவிடத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

"ஞானவாசம்",
அம்மபலவாணர் வீதி,
உடுவில், சுன்னாகம்.
தொ.பே.:
060 2219048.

(81188)

செ.குணபாலசிங்கம் (மகன்),
(அதிபர், யா/நவாலி அட்டகிரி
சைவ வித்தியாசாலை, மானிப்பாய்).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலிகளை ஆதரித்துப் பேசுவோர் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்படும்!!

## கருணாநிதி எச்சரிக்கை



சென்னை, டிச. 27

விடுதலைப் புலிகளை ஆதரித்துப் பேசினாலும், ஆதரவாகச் செயற்பட்டாலும் அவர்கள் மீது சட்டப்படி உரிய நடவடிக்கை எடுக்கப்படும் - என்று முதல்வர் கருணாநிதி எச்சரித்துள்ளார்.

காங்கிரஸ் கட்சியின் தலைமை அலுவலகமான சத்தியமூர்த்தி பவனில் காங்கிரஸ் கட்சியினர் மீது நடத்தப்பட்ட தாக்குதல் தொடர்பாக, விடுதலைச் சிறுத்தைகள் கட்சியினர் கைது செய்யப்பட்டனர். இந்த விவகாரத்தால், இரு கட்சியினரிடையே மோதல்போக்கு முற்றியது. விடுதலைப் புலிகளை ஆதரித்துப் பேசும் விடுதலைச் சிறுத்தைகள் இருக்கும் கூட்டணியில் காங்கிரஸ் இருக்காது என்றுகூட காங்கிரஸ் தலைவர்கள் கூறினர்.


இதுதொடர்பாக, தமிழக காங்கிரஸ் தலைவர் கே.வீ. தங்கபாலு, 'விடுதலைச் சிறுத்தைகளை கூட்டணியில் சேர்ப்பது பற்றி தி.மு.கதான் முடிவெடுக்க வேண்டும்'என்று கூறினார்.

இந்த நிலையில், விடுதலைச் சிறுத்தைகள் கட்சியினர் ஏற்பாடு செய்திருந்த தமிழீழ அங்கீகார மாநாட்டுக்குப் பொலிஸார் தடை விதித்தனர். இதைத் தொடர்ந்து, சென்னை உயர் நீதிமன்றத்துக்கு விடுதலைச் சிறுத்தைகள் சென்றனர். 'தடை செய்யப்பட்ட இயக்கங்களை ஆதரித்துப் பேசக் கூடாது என்ற நிபந்தனையுடன்' மாநாட்டுக்கு விதிக்கப்பட்ட தடையை நீக்கியது நீதிமன்றம்.

இந்த நிலையில், தடை செய்யப்பட்ட இயக்கங்களை ஆதரித்துப் பேசுவோர் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்படும் என்று முதல்வர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இதுகுறித்து, அவர் வெளியிட்ட அறிக்கையில், "இலங்கைத் தமிழர் பாதுகாப்புத்தான் தி.மு.கவின் குறிக்கோள். இந்தியாவில் தடை செய்யப்பட்ட இயக்கங்களை ஆதரிப்போரை தி.மு.க. ஆதரிக்கவில்லை. அவ்வாறு ஆதரித்துப் பேசினாலும், செயற்பட்டாலும், அவர்கள் மீது சட்டப்படி நடவடிக்கை எடுத்திட மாநில அரசு தயக்கம் காட்டாது. இந்த எச்சரிக்கை எல்லோருக்கும் பொருந்தும்" என்று தெரிவித்துள்ளார்.

## இயற்கைத் தாயே ஏன் இந்த வஞ்சனை..!



குமரி மாவட்டம் கொட்டில்பாடு மீனவர் கிராமத்தில் கருத்தடை அறுவை சிகிச்சை செய்து கொண்ட ஆக்னஸ் மேரி என்பவர் ஆழிப்பேரலைக் கொடூரத்தில் தனது 4 குழந்தைகளையும் இழந்தார். பின்னர் அவர் கருத்தடை நீக்க அறுவைச் சிகிச்சை செய்து 3 குழந்தைகளைப் பெற்றுள்ளார். இறந்த குழந்தைகளுக்கு அவரது குடும்பத்தினர் அஞ்சலி செலுத்துகின்றபோது....



அ.தி.மு.க. பொதுச்செயலாளர் ஜெயலலிதா நேற்றுமுன்தினம் போயஸ் தோட்டத்திலுள்ள தனது வீட்டில் 'கேக்' வெட்டி நத்தார் பண்டிகையைக் கொண்டாடினார். அதில் கலந்து கொண்டவர்களுடன் வாழ்த்துக்களை பரிமாறிக்கொண்டபோது..............

# தமிழீழ மக்களின் உரிமை பாதுகாக்கப்பட வேண்டும்

## இதுவே பா.ஜ.கவின் நிலைப்பாடு இல. கணேசன் உறுதி தெரிவிப்பு

பெரம்பலூர், டிசம்பர் 27

**இலங்கைத் தமிழர் பிரச்சினையில் ஒரு தரப்பினர் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாகவும், இன்னொரு தரப்பினர் எதிராகவும் செயற்படுகின்றனர். ஆனால், தமிழ் ஈழ மக்களின் உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும் என்பதே பா.ஜ.கவின் நிலைப்பாடு. இலங்கையில் நடைபெறும் உண்மை நிலையைக் கண்டறிய ஐ.நாவின் பாதுகாப்பு உறுப்பினர்களை அனுப்ப வேண்டும்.**

**- இவ்வாறு அக்கட்சியின் தமிழகத் தலைவர் இல.கணேசன் கூறியுள்ளார்.**

திருமங்கலத்தில் நடைபெறவுள்ள இடைத் தேர்தலில் எந்தக் கட்சியை ஆதரிப்பது என்பது குறித்து மாநில செயற்குழுக் கூட்டத்தில் முடிவு எடுக்கப்படும் - என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

பெரம்பலூரில் செய்தியாளர்களுக்கு பேட்டியளித்த போதே அவர் இவற்றைக் கூறினார்.

மேலும் அவர் கூறியவை வருமாறு-

வாஜ்பாய் அரசு இந்தியாவை வல்லரசாகவும், அடுத்த தலைமுறையினருக்காகவும் கொண்டு வந்த திட்டம்தான் தங்க நாற்கரம் திட்டம். சர்வ தேச சந்தையில் கச்சா எண்ணை விலை குறைந்துள்ள போதும் இந்தியாவில் பெற்றோல், டீசலின் விலை குறையவில்லை. வரும் நாடாளுமன்றத் தேர்தலைக் கருத்தில் கொண்டு தேர்தலுக்கு ஒரு வாரத்திற்கு முன்பு பெற்றோல், டீசலின் விலையைக் குறைக்க மத்திய அரசு நடவடிக்கை எடுக்கும்.

தி.மு.க அரசு தேசிய பாதுகாப்பு சட்டத்தில் கைது செய்யப்பட்ட வன்னியர் சங்கத் தலைவர் காடுவெட்டி குருவை வெளியே கொண்டு வந்ததும், கூட்டணியிலிருந்த வெளியே அனுப்பிய



பா.ம.கவை சேர்த்து கொண்டுள்ளதும் தேர்தல் பயத்தினால் தான். மேலும் பா.ம.கவின் கோரிக்கையை ஏற்று மதுபானக் கடைகள் காலை 10 மணி முதல் இரவு 10 மணி வரை இயங்குமென அறிவித்துள்ளது. இது ராமதாஸுக்குக் கிடைத்த வெற்றி.

இலங்கை தமிழர் பிரச்சினையில் ஒரு தரப்பினர் விடுதலைப்புலிகளுக்கு ஆதரவாகவும், ஒரு தரப்பினர் எதிராகவும் செயற்படுகின்றனர். ஆனால், பா.ஜ.கவை பொறுத்தவரை தமிழ் ஈழ மக்களின் உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும் என்பதுதான். இலங்கையில் நடைபெறும் உண்மை நிலையைக் கண்டறிய ஐ.நா. பாதுகாப்பு உறுப்பினர்களை அனுப்ப வேண்டும்.

வரும் 28ஆம் திகதி நடைபெறும் மாநில செயற்குழுக் கூட்டத்தில் திருமங்கலத்தில் நடைபெறவுள்ள தேர்தலில் எந்தக் கட்சியை ஆதரிப்பது என்பது குறித்து முடிவு செய்யப்படும் - என்றார்.

## ஜனாதிபதியின் இராமேஸ்வரம் வருகையால் கடலோரங்களில் விமானக் கண்காணிப்பு!

இராமேஸ்வரம், டிச. 27

குடியரசுத் தலைவர் பிரதிபா பட்டீல் நாளை 28ஆம் திகதி இராமேஸ்வரம் வருவதை முன்னிட்டு கடலோரங்களில் டோனியர் விமானம் கண்காணிப்பில் ஈடுபட்டுள்ளது. அத்துடன் படகுகளில் மீன்பிடிக்கவும் தடை விதிக்கப்பட்டுள்ளது எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இராமேஸ்வரம் அருள்மிகு இராமநாத சுவாமி கோயிலுக்கு சுவாமி தரிசனம் செய்ய பிரதிபா பட்டீல் நாளை வருகை தரவுள்ளார். இதனால் பாதுகாப்பு ஏற்பாடுகளை ஆட்சியர் கிர் லோஷ்குமார், காவல் துறை கண்காணிப்பாளர் செந்தில்வேலன் ஆகியோர் கவனித்து வருகின்றனர்

# புலி ஆதரவு மும்மூர்த்திகள் மீது தமிழக அரசு தாமதமின்றி நடவடிக்கை எடுக்கவேண்டும்!!

## காங்கிரஸ் வலியுறுத்து

விடுதலைப் புலிகளை ஆதரிப்பது சட்டப்படி குற்றம் என்று தெரிந்தும் அவர்களுக்கு ஆதரவு தெரிவித்துப் பேசி வரும் வைகோ, தொல் திருமாவளவன், பழ.நெடுமாறன் ஆகியோர் மீது தமிழக அரசு தயக்கமின்றி உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் - என்று காங்கிரஸ் மூத்த தலைவர் எஸ்.ஆர்.பாலசுப்ரமணியன் வலியுறுத்தியுள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு-

இந்தியாவில் இருப்பதுபோல் இலங்கையிலும் தமிழர்களுக்கு தனி மாநிலம் ஒன்று உருவாக்கப்பட வேண்டும் என்பதுதான் 1987ஆம் ஆண்டு எட்டப்பட்ட இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின் நோக்கமாக இருந்தது.

ஆனால் விடுதலைப் புலிகளால் இந்த நோக்கம் சிதைக்கப்பட்டது. அதன் தொடர்ச்சியாக இந்த உடன்பாட்டின் சிற்பியான தலைவர் ராஜீவ் காந்தியின் உயிர் தமிழக மண்ணிலேயே பறிக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து விடுதலைப் புலிகள் இயக்கம் ஒரு பயங்கரவாத இயக்கம் என்று அறிவிக்கப்பட்டு அவர்கள் மீது இந்திய அரசு தடை விதித்தது.

அதன் பிறகும் புலிகளுக்கு பல்வேறு கட்சிகளும், அமைப்புகளும் தமிழகத்தில் ஆதரவு தெரிவித்து வருகின்றன. இவர்கள் முன்வைக்கும் தமிழீழ ஆதரவு கோரிக்கை, பிரிவினைவாதத்தை நோக்கமாக கொண்டு அமைந்திருக்கிறது.

இந்தியாவின் ஒருமைப்பாட்டையும் இறையாண்மையையும் சீர்குலைக்கும் வழியில் சென்று கொண்டிருக்கிறது. இதனை எதிர்த்து குரல் கொடுப்பதால் காங்கிரஸ் கட்சியின் மீது ஆத்திரமும், கோபமும் கொப்பளிக்கின்றன. அதன் விளைவாகவே தமிழ்நாடு காங்கிரஸ் தலைமையகமான சத்தியமூர்த்தி பவனில் காங்கிரஸ் ஊழியர்கள் தாக்கப்படும் நிலை உருவானது.

தமிழீழத்துக்கு ஆதரவு தெரிவித்து கூட்டம் நடத்துவதில் விடுதலைச் சிறுத்தைகள் கட்சி பிடிவாதமாக உள்ளது. ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ, புலிகளை என்றும் ஆதரிப்போம் என்று முழக்கமிடுகிறார். தமிழர் தேசிய இயக்கத் தலைவர் நெடுமாறன் போன்றவர்களும் தடை செய்யப்பட்ட பயங்கரவாத இயக்கத்துக்கு தொடர்ந்து ஆதரவு தெரிவித்து பேசி வருகின்றனர்.

சட்டப்படி குற்றம் என்று தெரிந்தும் இவர்கள் தொடர்ந்து இதுபோன்று செயற்பட்டு வருகிறார்கள். எனவே இவர்கள் மீது சட்டப்படி உரிய நடவடிக்கை எடுப்பது தமிழக அரசுக்கு தவிர்க்க முடியாத கடமையாகும் - என்றுள்ளது.

# விடுதலைப் புலிகளை ஆதரித்து மண்டபம் முகாமில் சுவரொட்டி!



கொலைகாரச் சிங்களத்துக்கு இந்தியாவே நீ கூட்டாளியா?

இந்திய அரசே,

1. சிங்கள அரசுக்குக் கொடுத்த ஆயுத, ஆள் உதவியைத் திரும்பப் பெறு!
2. சிங்கள அரசுக்கு எவ்வகையிலும் உதவாதே!
3. தமிழீழ விடுதலைப் போராட்டத்தை ஏற்றுக்கொள்!
4. தமிழீழ விடுதலைப் புலிகள் மீதான தடையை நீக்கு!
5. தமிழக மீனவர்களுக்கு ஆயுதம் கொடு! மீனவர் தற்காப்புப் படை அமைத்திடு!
6. கச்சத் தீவை மீட்டுக் கொடு!

தமிழ்த் தேசிய விடுதலை இயக்கம்

தொடர்புக்கு: 92832 22988

மண்டபம், டிச. 27

விடுதலைப் புலிகளை ஆதரித்தும், இந்திய அரசைக் கண்டித்தும் மண்டபம் அகதிகள் முகாமில் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன.

இந்த முகாமில் மூவாயிரத்துக்கும் மேற்பட்ட இலங்கை அகதிகள் வசித்து வருகின்றனர். அவர்களுக்கு தனி ஈழக் கனவு எப்போதும் உண்டு. அவ்வப்போது புலிகளை ஆதரித்து சுவரொட்டி ஒட்டியும், சுவற்றில் எழுதியும் தங்கள் ஆதரவை வெளிப்படுத்துவர். நேற்றுமுன்தினம் மண்டபம் முகாம் அரசு மருத்துவமனைச் சுவற்றில், தமிழ்த் தேசிய விடுதலை இயக்கம் என்ற பெயரில் போஸ்டர் ஒட்டப்பட்டிருந்தது. அதில், "கொலைகாரச் சிங்களத்துக்கு இந்தியாவே நீ கூட்டாளியா", "விடுதலைப் புலிகள் மீதான தடையை நீக்கி, தமிழக மீனவர்களுக்கு ஆயுதம் கொடு" என்ற வாசகங்கள் இடம்பெற்றிருந்தன.

முகாம் வாசலில் ஆயுதம் தாங்கிய பற்றாலியன் பொலிஸாரும் அகதிகளுக்கென தனிப் பொலிஸாரும் உள்ளனர். அந்நியர்கள் உள்ளே செல்ல முடியாத நிலையில், பாதுகாப்பை மீறி முகாமில் போஸ்டர் ஒட்டப்பட்டிருக்கின்றமை பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. முகாமில் புலிகள் ஆதரவாளர்களால் ஒட்டப்பட்டிருக்கலாம் என்பதால், அவர்கள் குறித்து பொலிஸார் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர் எனத் தெரிவிக்கப்படுகிறது

## இந்தியச் செய்திகள்

# இந்தியப் போர் விமானங்கள் ஒத்திகை பாகிஸ்தானுடன் யுத்தம் வெடிக்கும்?

புதுடில்லி, டிச.27

பாகிஸ்தானுடன் போர் ஏற்படும் சூழ்நிலை ஏற்பட்டுள்ள இந்தச் சமயத்தில் பொக்ரான் பகுதிகளில் குறி தவறாமல் குண்டுகளை வீசி இந்தியப் போர் விமானங்கள் நேற்றுமுன்தினம் ஒத்திகை பார்த்தன.

அதே நேரத்தில் குண்டு வீச்சிலிருந்து தப்பிப்பது எப்படி என்பதற்கான ஒத்திகையை ராவல்பிண்டி உள்ளிட்ட நகரங்களில் பாகிஸ்தான் விமானங்கள் மேற்கொண்டன.

இதே வேளை, இந்தியா தாக்குதல் நடத்தினால் அதை எதிர்கொள்ள தயாராக இருக்கிறோம் என பாகிஸ்தான் ஜனாதிபதி சர்தாரி அறிவித்துள்ளார். ஆனால், 'பாகிஸ்தான்தான் தேவையில்லாமல் போர் பதற்றத்தை ஏற்படுத்தி வருகிறது. அங்குள்ள தீவிரவாத முகாம்களை முதலில் அந்த நாட்டு அரசு அழிக்க வேண்டும்' என்று பிரதமர் மன்மோகன்சிங் வலியுறுத்தியுள்ளார்.

இந்நிலையில் இந்திய விமானங்களும் நேற்றுமுன்தினம் போர் ஒத்திகையில் ஈடுபட்டன. பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீர் பகுதியில்தான் தீவிரவாதிகள் இருக்கின்றனர் எனக் கருதப்படுவதால், அங்கு குறி தவறாமல் குண்டுகளை வீச பயிற்சி எடுத்துக்கொண்டன. இதற்காக ராஜஸ்தான் பாலைவனப் பகுதிகளில் இந்தியப் போர் விமானங்கள் போலிக் குண்டுகளை வீசின. எனினும், இது வழக்கமாக நடைபெறும் போர்ப் பயிற்சி என்று விமானப்படை செய்தி தொடர்பாளர் மகேஷ் உபாசனி தெரிவித்தார்.

# தமிழர் பாதுகாப்புப் பற்றி காங்கிரஸுக்கு யாரும் பாடம் கற்பிக்க வேண்டியதில்லை!

## அமைச்சர் வாசன் ஆவேசம்

சென்னை, டிச.27

தமிழர் பாதுகாப்பு, தமிழர் உணர்வு, தமிழர்களைப் பற்றிய கரிசனம் பற்றி காங்கிரஸுக்கு யாரும் பாடம் சொல்லித்தர வேண்டிய அவசியமில்லை - என்று மத்திய அமைச்சர் ஜி.கே.வாசன் கூறியுள்ளார்.

நத்தார்விழா, புத்தாண்டு விழா மற்றும் பொங்கல் விழா மயிலாப்பூரில் நடந்தன. இதில் சிறப்பு விருந்தினராகப் பங்கேற்ற பின்னர் செய்தியாளர்களிடம் அவர் கூறியவை வருமாறு-

தீவிரவாதம், பயங்கரவாதத்தை ஒடுக்க அனைத்துக் கட்சியினரின் ஆதரவுடன் மத்திய அரசு சட்டம் கொண்டு வந்துள்ளது. இது முழுமையாக செயல் வடிவம் பெற அனைவரும் ஒத்துழைக்கவேண்டும். திருமாவளவன் கருத்து பற்றி எதுவும் சொல்ல விரும்பவில்லை.

தமிழர்களின் பாதுகாப்பு, அவர்களின் உணர்வு, தமிழர்களை பற்றிய கரிசனம் குறித்து யாரும் காங்கிரஸுக்குப் பாடம் சொல்லித்தர வேண்டிய அவசியமில்லை. தமிழர்களின் நலனைக் காக்கின்ற அரசு காங்கிரஸ் அரசு - என்றார்.



விழாவில் சட்டப் பேரவை காங்கிரஸ் தலைவர் சுதர்சனம், ஞானதேசிகன் எம்.பி, எம்.எல்.ஏ.க்கள் பீட்டர் அல்போன்ஸ், தண்டபாணி, முன்னாள் எம்.எல்.ஏ.க்கள் பாரமலை, மகேஸ்வரி, மாவட்ட தலைவர்கள் ராயபுரம் மனோ, சக்கரபாணி ரெட்டியார், மயிலை பெரியசாமி, மயிலை அசோக்குமார் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பங்களாதேஷ் அணியிடம் தடுமாறுகிறது இலங்கை!


இலங்கை மற்றும் பங்களாதேஷ் அணிகளுக்கிடையில் நேற்று ஆரம்பமான முதலாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி 6 விக்கெட்டுகளை ,இழந்து 172 ஓட்டங்களைப் பெற்றிருக்கிறது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற இலங்கை அளித் தலைவர் மஹேல ஜெயவர்த்தனா தமது அணி முதலில் துடுப்பெடுத்தாடும் என்று அறிவித்தார். அதன்படி துடுப்பெடுத்தாட களம் இறங்கிய இலங்கை அணியின் விக்கெட்டுகள் ஒவ்வொன்றும் நீண்ட நேரம் நிலைத்து நிற்கவில்லை. முன்னணித் துடிப்பாட்டவீரர்களான வன்டோட் (44), வர்ணபுர (14), சங்ககாரா (43), மஹேல ஜெயவர்த்தன(3), டில்ஷான் (14), பிரசன்ன ஜெயவர்த்தன(6) ஆகியோரில் ஒருவரேனும் அரைச்சதத்தைக் கூட எடுக்க முடியாமல் தடுமாறியபடி பெவிலியன் திரும்பினர்.

தற்போது சமரவீர (20), சமிந்தவாஸ்(0) ஆகிய இருவரும் களத்தில் ஆடிக்கொண்டிருந்தனர்.

பங்காளதேஷ் அணி சார்பில் ஷொகிப் ஹஸன் 3 விக்கெட்டுக்களையும், ஹா'சைன் 2 விக்கெட்டுகளையும் மொட்ரஸா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

இரண்டாம் நாள் ஆட்டம் இன்று தொடரும்.



ஆட்டமிழந்து செல்கிறார் மஹேல ஜெயர்த்தன...

## அவுஸ்திரேலிய ஓபன் டென்னி: சானியாவுக்கு நேரடி வாய்ப்பு



ஹைதராபாத், டிச. 27

இந்திய நட்சத்திர டென்னிஸ் வீராங்கனை சானியா மிர்சா, மணிக்கட்டு காயம் காரணமாக பல போட்டிகளில் பங்கேற்பதை தவிர்த்தமையால் ஆண்டின் இறுதியில் அவர் தரவரிசையில் 100ஆவது இடத்துக்குத் தள்ளப்பட்டிருக்கிறார்.

இதனால் அடுத்த மாதம் 19ஆம் திகதி மெல்போர்னில் தொடங்கும் அவுஸ்திரேலிய ஓபன் டென்னிஸ் போட்டியில் அவருக்கு நேரடியாகப் பங்கேற்க வாய்ப்புக் கிடைக்குமா என்ற சந்தேகம் எழுந்தது.

இந்த நிலையில், அவுஸ்திரேலிய ஓபனில் அவர் நேரடியாகப் பங்கேற்க வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது. இது குறித்து மகிழ்ச்சி தெரிவித்த சானியா, 'இது மிகவும் நல்ல செய்தி' என்று குறிப்பிட்டார்.

மேலும் அவர் கூறுகையில், 'எனது மணிக்கட்டில் இப்போது எந்த பிரச்சினையும் இல்லை. முன்பைவிட இப்போது பந்தை வேகமாக அடித்து ஆட முடிகிறது' என்றார். அமெரிக்காவின் வானியா கிங்குடன் இணைந்து இரட்டையர் பிரிவில் பங்கேற்க இருப்பதாகவும் அவர் கூறினார்.

## தென்னாபிரிக்காவுடனான டெஸ்டில் அவுஸ்திரேலியா மெதுவான ஆட்டம்

### ரிக்கி பொண்டிங் சதமடித்து அசத்தல்

அவுஸ்திரேலிய மற்றும் தென்னாபிரிக்க அணிகளுக்கிடையில் நேற்று ஆரம்பமான இரண்டாவது டெஸ்ட் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலிய அணி நேற்றைய ஆட்ட நேர முடிவில் 6 விக்கெட்டுக்களை இழந்து 280 ஓட்டங்களைப் பெற்றுள்ளது.

சிறப்பாகத் துடுப்பெடுத்தாடிய அணித் தலைவர் ரிக்கி பொண்டிங் ஒரு சிக்ஸர், 10 பவுண்டரிகளுடன் 101 ஓட்டங்களையும் கடிச் 6 பவுண்டரிகள் அடங்கலாக 54 ஓட்டங்களையும் எடுத்து ஆட்டமிழந்தனர்.

ஏனைய வீரர்களான ஹைடன்(8), ஹஸி (0), கிளார்க் (36), சைமண்ட்ஸ் (27), ஹடின் (40) ஆகியோர் குறைந்த ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து வெளியேறினர். தென்னாபிரிக்கா சார்பாக ஸ்ரெயின், நிற்னி ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களை வீழ்த்தினர். ஆட்டத்தின் இரண்டாம் நாள் இன்றாகும்.

கிரீம் சுமித் தலைமையிலான தென்னாபிரிக்க கிரிக்கெட் அணி அவுஸ்திரேலியாவில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு விளையாடி வருகிறது. இரண்டு அணிகளுக்கு இடையிலான 3 டெஸ்ட் கொண்ட தொடரில் பேர்த்தில் நடந்த முதலாவது டெஸ்டில் தென்னாபிரிக்க அணி சாதனை வெற்றியை ருசித்தது. இதன் மூலம் தொடரில் 1-0 என்ற கணக்கில் முன்னிலை வகிக்கிறது.

அந்த அணியின் சகல துறை வீரர் கலீஸ் மேற்கொண்டு 79 ஓட்டங்களைச் சேர்த்தால் டெஸ்டில் 10 ஆயிரம் ஓட்டங்களை கடந்த முதல் தென்னாபிரிக்க வீரர் என்ற சிறப்பைப் பெறுவார். அந்தச் சாதனையை எட்ட அவர் காத்திருக்கிறார்.

## மேற்கிந்தியா - நியூஸிலாந்து 20 ஓவர் போட்டி சமநிலையில்

### இரு அணிகளும் தலா 155 ஓட்டங்கள்

நியூஸிலாந்து மற்றும் மேற்கிந்தியத் தீவுகள் அணிகளுக்கிடையில் நேற்று நடைபெற்ற ருவென்ரி 20 கிரிக்கெட் போட்டியில் இரு அணிகளும் இறுதிவரை வாழ்வா சாவா போராட்டம் நடத்தி முடிவில் சமநிலையை அடைந்தன.

நாணயச் சுழற்சியில் வெற்றியீட்டிய நியூஸிலாந்து அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. இதன்படி 20 ஓவர்கள் நிறைவில் அந்த அணி 7 விக்கெட்டுக்களை இழந்து 155 ஓட்டங்களைக் குவித்தது. அதிரடியாக ஆடிய ரெய்லர் 50 பந்துகளில் 4 பவுண்டரிகள், 4 சிக்ஸர்கள் அடங்கலாக 63 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டார். ஏனையோரில் ஸ்ரைரிஸ் தவிர வேறு எவரும் 20 ஓட்டங்களைத் தாண்டவில்லை என்பது குறிப்பிடத்தக்கதாகும். மேற்கிந்தியத் தீவுகள் அணியின் வீரர் கிறிஸ்கெய்ல் 2 விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய மேற்கிந்தியத் தீவுகள் அணியும் 20 ஓவர்கள் நிறைவில் 8 விக்கெட்டுக்களை இழந்து 155 ஓட்டங்களையே பெற்றது. கிறிஸ்கெய்ல் சிறப்பாகத் துடுப்பெடுத்தாடி 41 பந்துகளில் 5 சிக்ஸர்களையும் 5 பவுண்டரிகளையும் விளாசி 67 ஓட்டங்களை எடுத்தார். இறுதிக்கட்டத்தில் ஓர் ஓட்டத்தையாவது கூடுதலாக எடுத்து வெற்றியீட்டலாம் என்ற எதிர்பார்ப்பில் இரு அணிகளும் தீவிர முயற்சி எடுத்தன. எனினும், முடிவில் இரு அணிகளும் தலா 155 ஓட்டங்களைப் பெற்று சமநிலை அடைந்தன.

போட்டியின் சிறந்த வீரராக கிறிஸ்கெய்ல் தெரிவானார்.

## ஹெரால்ட் டெஸ்ட் அணியில் அஜந்த மெண்டிஸுக்கு வாய்ப்பு

### அணித்தலைவராக டோனி தெரிவு

இந்த ஆண்டிற்கான ஹெரால்ட் டெஸ்ட் அணியின் அணித்தலைவராக இந்திய கிரிக்கெட் அணியின் தலைவர் மகேந்திரசிங் டோனி தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். அவருடன் இந்திய கிரிக்கெட் அணியின் ஆரம்ப ஆட்டக்காரர் கௌதம் கம்பீரும் தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

இந்த அணியில் இலங்கை அணியின் புதுமுக வீரர் அஜந்த மெண்டிஜுக்கும் வாய்ப்பு அளிக்கப்பட்டிருக்கின்றது. சிட்னியில் இருந்து வெளிவரும் 'தி மார்னிங் ஹெரால்ட்' பத்திரிகை, ஓராண்டில் சிறப்பாக ஆடிய கிரிக்கெட் வீரர்களை கொண்டு ஹெரால்ட் டெஸ்ட் அணியை தேர்வுசெய்து வருகிறது.

இந்த ஆண்டு ஹெரால்ட் டெஸ்ட் அணியின் தலைவராக இந்தியக் கிரிக்கெட் அணியின் அணித்தலைவர் மகேந்திர சிங் டோனி தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

இந்த ஆண்டு அவுஸ்திரேலியா மற்றும் இங்கிலாந்து அணிகளை வீழ்த்தியமைக்காக இந்தச் சிறப்பான கௌரவம் டோனிக்குக் கிட்டியுள்ளது. மேலும் ஹெரால்ட் அணியின் விக்கெட் காப்பாளராகவும் டோனி இருப்பார்.

தென்னாபிரிக்க வீரர் கிரீம் ஸ்மித்துடன் கம்பீர் தொடக்க ஆரம்ப ஆட்டக்காரராக இருப்பார்.

இந்த அணியில் இங்கிலாந்து அணியின் அணித்தலைவர் கெவின் பீற்றர்சனும், அவுஸ்திரேலிய வீரர் சைமன்ஸ் ஹெரால்ட் அணியின் 12ஆவது வீரராக இடம்பெற்றுள்ளார்.

# அனைத்து வீரரும் சிறப்பாக ஆடினால்மட்டுமே அணியின் வெற்றியை உறுதிப்படுத்த முடியும்

## சச்சின் டெண்டுல்கர் தெரிவிப்பு

மிசோரி, டிச. 27

இந்தியா - இங்கிலாந்து டெஸ்ட் தொடர் சில தினங்களுக்கு முன்பு முடிவடைந்தது. அடுத்து நடக்கவிருந்த பாகிஸ்தான் பயணமும் ரத்தாகிவிட்டது. இதனால் இந்தியக் கிரிக்கெட் வீரர்களுக்கு இரண்டு மாத காலம் ஓய்வு கிடைத்திருக்கிறது.

இந்திய அணியின் சிறந்த வீரர் சச்சின் டெண்டுல்கர் தனது மனைவி அஞ்சலி மற்றும் 2 குழந்தைகளுடன் சுற்றுலாத் தலமான உத்தரகாண்ட் மாநிலம் மிஸோரிக்கு சென்று விடுமுறையை கழித்து வருகிறார். அங்கு அவர் கூறியதாவது:-

டோனி திறமையான அணித்தலைவர். ஆனால் சிறந்த அணித்தலைமைக்கு நல்ல அணியும் தேவை. டோனி அணியை வழிநடத்தும் பண்பு சிறப்பாக இருக்கிறது என்பதில் சந்தேகமில்லை. ஆனால் அணியினுடைய செயற்பாடு கூட்டு முயற்சியாக அமைவது அணித் தலைமைக்கு முக்கியமானதாகும். ஒன்று அல்லது இரண்டு வீரர் மட்டும் நன்றாக ஆடினால் எந்த ஒரு அணியும் வெற்றி பெற்றுவிட முடியாது. அனைத்து வீரர்களும் சிறப்பாக விளையாடும்பொழுது தான் நல்ல முடிவு கிடைக்கும். இந்த ஆண்டு முழுவதும் நமது அணி வீரர்கள் நன்றாக விளையாடி இருக்கிறார்கள்.

இங்கிலாந்துக்கு எதிரான போட்டி சிறந்த தொடராகும். இதில் அனைத்து வீரர்களும் நன்றாக ஆடினார்கள். இந்திய அணியின் தொடர் வெற்றியை அடுத்த ஆண்டிலும் தக்க வைத்துக் கொள்ள முயற்சிப்போம். நமது அணி சில இலக்குகளை வைத்திருக்கிறது. அதனை அடைய நாங்கள் முயற்சிப்போம்.

இந்த ஆண்டு முழுவதும் கௌதம் கம்பீரின் துடுப்பாட்டம் மிகவும் அபாரமாக இருந்தது. அவர் தொடர்ந்து நிலையான ஆட்டத்தை வெளிப்படுத்தி வருகின்றமை பாராட்டுக்குரியது. அதிரடி தேவைப்படும் போது அதிரடி, தடுப்பாட்டம் தேவைப்படும் தடுப்பாட்டம் என்று தேவைக்கு ஏற்றபடி ஆடி வருகிறார். தனது திறமைக்கு ஏற்ப ஓட்டங்களைக் குவித்து வருகிறார். அவரது திறமை அணியின் சக வீரர்களுக்கு முன்பே தெரியும். இப்போது அதனை முழு உலகமும் அறிந்துள்ளது.

இந்திய அணியின் பாகிஸ்தான் பயணம் ரத்து செய்யப்பட்டது அரசின் முடிவு. அதனை நாங்கள் மதிக்கிறோம். மும்பையில் நடந்த தாக்குதல் துரதிர்ஷ்டவசமானது. இதில் நிறைய உயிர்கள் பறிக்கப்பட்டுள்ளன. இந்த இழப்புக்கு முன்னால் கிரிக்கெட்டோ அல்லது மற்ற விளையாட்டோ பெரிது கிடையாது.

எனது ஓய்வு குறித்து நான் மட்டும் பேசுவது தான் சரியாக இருக்கும். ஓய்வுபெற வேண்டும் என்று எப்போது நினைக்கிறேனோ அப்போது அது பற்றி அறிவிப்பேன். நீண்ட காலமாக இது போன்ற கேள்விகளை என்னிடம் கேட்டு வருகிறார்கள். எனவே இந்த விடயத்தில் நான் ஏதாவது சொல்லும் வரை நீங்கள் காத்திருக்க வேண்டும்.

அடுத்த ஒன்றரை மாதங்களுக்கு நமது அணிக்கு எந்த ஒரு சர்வதேச போட்டியும் கிடையாது. இந்தக் காலமும் நேரமும், நியூஸிலாந்து சுற்றுப்பயணத்துக்கு (மார்ச் - ஏப்ரல்) நம்மைத் தயார்படுத்திக்கொள்ள உதவும். நமது அணியின் சிறப்பான ஆட்டம் அடுத்த ஆண்டும் தொடரும் என்று நம்புகிறேன்.

- இவ்வாறு டெண்டுல்கர் கூறினார்.

## கம்பீர் விஸ்வரூபம்!

ஒரு நாள் போட்டிகளில் தொடர்ந்து சிறப்பாக ஆடிவந்த இந்திய கிரிக்கெட் அணியின் தொடக்க ஆட்டக்காரர் கௌதம் கம்பீர், அவுஸ்திரேலியா, இங்கிலாந்து அணிகளுக்கு எதிரான டெஸ்ட் தொடரையடுத்து டெஸ்டுகளிலும் ஜொலிக்கத் தொடங்கியுள்ளார்.

டில்லியைச் சேர்ந்த இந்த இடதுகை ஆட்டக்காரர், 2003இல் பங்களாதேஷுக்கு எதிரான ஒரு நாள் தொடரில் அறிமுகமாகி, தனது அபார திறமையால் போட்டியில் இடத்தைத் தக்கவைத்துக் கொண்டுள்ளார். இதுவரை 64 ஒருநாள் போட்டிகளில் 2162 ஓட்டங்களைக் குவித்துள்ளார். ஓட்டச் சராசரி 37.27.

2007-2008இல் அவுஸ்திரேலியாவில் நடந்த முத்தரப்பு தொடரில் (அவுஸ்திரேலியா, இந்தியா, இலங்கை) 2 சதம் உட்பட 440 ஓட்டகளைக் குவித்து முத்திரை பதித்தார். முதல்முறையாக இந்தியா அந்தக் கிண்ணத்தை வெல்ல முக்கிய பங்கு வகித்தார்.

ருவன்ரி - 20 உலகக் கோப்பை போட்டியில் மூத்த வீரர்களான சச்சின், டிராவிட், கங்குலி ஆகியோர் பங்கேற்காததால் தொடக்க ஆட்டக்காரராகக் களமிறங்கினார் கம்பீர். இது அவரது திறமையை வெளிப்படுத்த நல்ல வாய்ப்பாக அமைந்தது.

அத்தொடரில் ஆடிய 7 ஆட்டங்களில் 6 இன்னிங்ஸில் 227 ஓட்டங்களைக் குவித்ததன் மூலம், அதிக ஓட்டங்களைக் குவித்த 2ஆவது வீரர் என்கின்ற பெருமை பெற்றார். பாகிஸ்தானுடனான இறுதிப் போட்டியில் அதிகபட்சமாக 75 ஓட்டங்களைக் குவித்து, ஆட்ட நாயகனாகவும் தேர்வு பெற்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஆழிப்பேரலை அனர்த்தத்தின் போது உயரிழந்தவர்களின் 4 ஆம் ஆண்டு அஞ்சலி நிகழ்வு நேற்று மணற்காடு தூபியில் இடம்பெற்றது.
நினைவுத் தூபியில் அமைக்கப்பட்டிருக்கும் நினைவிடங்களில் உறவினர்கள் சுடர் ஏற்றுவதையும் யாழ். குருமுதல்வர் ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் சுடர் ஏற்றுவதையும் உறவினர்கள் அஞ்சலி செலுத்துவதையும் முதல் மூன்று படங்களிலும் காணலாம்.
உயிரிழந்தவர்களின் உறவினர்கள் நினைவுத் தூபியில் கதறி அழுவதை அடுத்துள்ள இரு படங்களிலும் காணலாம்.
தும்பளை கிழக்கில் நடந்த நிகழ்வில் உயிரிழந்தவர்களின் திருவுருவப்படங்களுக்கு உறவினர்கள் அஞ்சலி செலுத்துவதை கடைசிப்படத்தில் காணலாம்.
(படங்கள் -சுந்தா)

# சோகமே உருவமாக வந்து சுனாமியில் உயிர்நீத்த தமது உறவுகளுக்கு மணற்காட்டில் மக்கள் அஞ்சலி

கரவெட்டி, டிசெ.27

ஆழிப்பேரலையால் உயிரிழந்தவர்களின் 4 ஆம் ஆண்டு அஞ்சலி நிகழ்வுகள், மணற்காட்டில் நேற்று உணர்வுபூர்வமாக இடம்பெற்றன.

உயிர்நீத்தவர்களின் நினைவுத்தூபி அமைந்துள்ள மணற்காட்டில் நேற்றுக் கூடிய உறவினர்கள் தமது உறவுகளுக்கு அஞ்சலியை செலுத்தினர்.

யாழ்.குருமுதல்வர் வண.ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் விசேட திருப்பலியை ஒப்புக்கொடுத்ததுடன், விசேட பிரர்த்தனைகளையும் நடத்தினார்.

அதனைத் தொடர்ந்து உயிரிழந்தவர்களின் உறவினர்கள் தமது உறவுகளின் நினைவாக மரக்கன்றுகளை அங்கு நாட்டினர். அவர்கள் அனைவரும் சோகமே உருவமெடுத்துக் காணப்பட்டனர். பலர் சோகம் தாளாது கடற்கரையில் விழுந்து அழுதனர். கண்ணீரும் கம்பலையுமாக காணப்பட்ட அவர்களின் காட்சியைப் பார்க்க மனம்வெந்தது.

அஞ்சலி நிகழ்வுகளைத் தொடர்ந்து மக்கள் மணற்காடு அந்தோனியார் ஆலயத்தில் வழிபடுவதற்கு படையினர் அனுமதி வழங்கினர். அங்கும் அஞ்சலி நிகழ்வுகள் இடம்பெற்றன.

இந்நிகழ்வில் அருட்தந்தை டேமியன், அருட்தந்தை எட்வின் மற்றும் அருட் சகோதரிகளும் கலந்துகொண்டனர்.

அதேவேளை தும்பளை கிழக்கு கடற்றொழிலாளர் சங்க மண்டபத்திலும் நேற்றுப் பிற்பகல் ஒரு மணிக்கு அஞ்சலி நிகழ்வுகள் இடம்பெற்றன.

சங்கத் தலைவர் தெ.மதிராணன் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் உயிரிழந்தவர்களின் திருவுருவப் படங்களுக்கு உரித்துடையோர் மலர் மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தினர்.

அஞ்சலி உரைகளும் இடம்பெற்றன. இதேவேளை கரையோரப் பகுதியில் உள்ள இந்து ஆலயங்களிலும் தேவாலயங்களிலும் விசேட பிரார்த்தனை நிகழ்வுகள் இடம்பெற்றன.

**அரச அலுவலகங்களில்**

ஆழிப்பேரலை அனர்த்தத்தின் நான்காம் ஆண்டு நாள் நிகழ்வுகள் நேற்றைய தினம் யாழ்ப்பாணத்தில் உள்ள அரச அலுவலகங்கள், திணைக்களங்களிலும் இடம்பெற்றன.

மனிதவள அமைச்சின் ஏற்பாட்டில் அனுப்பப்பட்ட சுற்று நிருபத்துக்கு அமைவாக இந்த நிகழ்வுகள் இடம்பெற்றன.

பகல் 9.26 மணிக்கு அலுவலகங்கள், திணைக்களங்களில் மௌன அஞ்சலி இடம்பெற்றதுடன் கருத்துரையும் வழங்கப்பட்டது. (அ-1-70-68)


நண்பர்கள் விளையாட்டுக்கழக வளர்ச்சி நிதிக்காக நடத்தப்பட்ட அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு

25.12.2008 வியாழக்கிழமை நடைபெற்ற சீட்டிழுப்பில் பரிசு பெற்ற எண்களின் விவரம்

முதலாம் பரிசு - 6085 , 2 ஆம் பரிசு - 1222

3 ஆம் பரிசு - 3687

ஆறுதல் பரிசுகளுக்கான எண்கள்

5736, 5637, 6084, 1635, 5927, 5692, 5996, 2603, 1812, 2499

குறிப்பு- பரிசில்களை வென்றோர் 25.01.2009 இற்கு முன்னர் பெற்றுக்கொள்ளவும்.

தொடர்புகொள்ள வேண்டிய முகவரி:
சரண்யா தொலைத் தொடர்பகம்,
538, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
(81193)


## மரண அறிவித்தல்

### வைத்திலிங்கம் சேதுராசா



மண்டைதீவைப் பிறப்பிடமாகவும் இல.5/7, விதானையார் ஒழுங்கை, கொக்குவில் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட வைத்திலிங்கம் சேதுராசா 23.12.2008 செவ்வாய்க்கிழமை இறைபதமடைந்தார்.

அன்னார் தையல்நாயகியின் அன்புக் கணவரும் யசோதா(சுவிஸ்), சிறீதா(வவுனியா வைத்தியசாலை), சிறிவாசன்(லண்டன்), றஞ்சிதா(ஆசிரியை, யா/ தாவடி இ.த.க.பாடசாலை), ஜெயதரன்(சுவிஸ்), சசிகலா, கருணாகரன்(லண்டன்), ஈஸ்வரன்(சுவிஸ்), தயாகரன் (நியூசிலாந்து) ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை(28.12.2008) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: மருமக்கள் -
வெ.கனகநாயகம்(நல்லூர் பிரதேச சபை),
சு.சதானந்தன்.

5/7, விதானையார் ஒழுங்கை,
கொக்குவில் கிழக்கு.
(81251)

# செயலகப் பதிவாளர் பணிமனையில் சான்றிதழ்கள் வழங்கும் பணி நிறுத்தம்

யாழ்ப்பாணம், டிசெ.27

வருட இறுதிப்பணிகளை முன்னிட்டு 30 ஆம் ,31 ஆம் திகதிகளில் பிறப்பு, இறப்பு, விவாகச் சான்றிதழ்கள் தொடர் பான விண்ணப்பங் கள் மாவட்டச் செயலக மாவட்டப் பதி வகத்தில்ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா என்று காணி மேலதிக மாவட்டப் பணிப்பாளர் பி.பிரபாகர் அறிவித்துள்ளார்.

மீண்டும் எதிர்வரும் முதலாம் திகதியில் இருந்து வழமைபோல் சகல விண்ணப்பங்களும் ஏற்றுக்கொள்ளப்படும் என்றும் அவர் தெரிவித்தார். (1)

# 'வைரப் பனை மரம்' சிறுவர் கதைத் தொகுதி வெளியீட்டு விழா நாளை மானிப்பாயில்

யாழ்ப்பாணம், டிசெ.27

'வைரப்பனை மரம்' சிறுவர் கதைத் தொகுதியின் வெளியீட்டுவிழா நாளை ஞாயிற்றுக்கிழமை பி.ப 3 மணிக்கு மானிப்பாய் பிரதேச சபை கலாசார மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

திருமதி சந்திரா தனபாலசிங்கம் எழுதிய இந்த நூலின் வெளியீட்டு விழா யாழ். பல்கலைக்கழக தமிழ்த்துறை விரிவுரையாளர் ஈ.குமரன் தலைமையில் நடைபெறும்

இந் நிகழ்வில் யாழ். நீதிவான் இ.வசந்தசேனன் பிரதம விருந்தினராகவும் சுதுமலை வைத்திய கலாநிதி பி.உரோமகேஸ்வரன் சிறப்பு விருந்தினராகவும் மானிப்பாய் பிரதேசசபைச் செயலாளர் திருமதி பி.சிவலிங்கம் கௌரவ விருந்தினராகவும் கலந்துகொள்வர்.

நூல் வெளியீட்டுரையை ஆசிரியர் நா.விஜயசுந்தரமும் நூல் மதிப்பீட்டுரையை கலாநிதி மனோன்மணி சண்முகதாஸும் நிகழ்த்துவர்.

திருமதி சந்திரா தனபாலசிங்கம் ஏற்புரை நிகழ்த்துவார். (1)

# ஆண்டு விழாவும் மலர்வெளியீடும்

சாவகச்சேரி கண்டுவில் வீதி புவேந்தன் பாலர் பகல் பராமரிப்பு நிலையத்தில் 14 ஆவது ஆண்டு நிறைவு விழாவும் மலர் வெளியீட்டு நிகழ்வும் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு சாவகச்சேரி சிவன் கோயில் வீதியில் உள்ள தென்மராட்சி கலை மன்ற கலாசார மண்டபத்தில் புவேந்தன் பகல் பராமரிப்பு நிலையத் தலைவர் வை.இராஜரத்தினம் தலைமையில் நடைபெறவுள்ளன.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் க.கணேஸ் கலந்து கொள்வார்.

நூலின் மதிப்புரையை யாழ். தேசிய கல்வியியல் கல்லூரி உப பீடாதிபதி இ.சத்தியேந்திரம்பிள்ளை நிகழ்த்துவார் - பாலர்களின் கலை நிகழ்வுகளும் இடம் பெறவுள்ளன. (1-131)

## மரண அறிவித்தல்

### திருமதி புஸ்பநாயகி சண்முகநாதன்



சித்தரமேழி, இளவாலையைப் பிறப்பிடமாகவும் உடுவில் வீதி, மானிப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி புஸ்பநாயகி சண்முகநாதன் நேற்று(26.12.2008)வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் அமரர்களான சிற்றம்பலம் - பொன்னுப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மகளும் பொன்னுத்துரை சண்முகநாதனின் அன்பு மனைவியும் ஆரணி, சஜீவன் ஆகியோரின் அருமைத் தாயும் செல்லக்கண்டு, செல்வநாயகி, மகேந்திரராசா (மகேந் திரன் - கணித ஆசிரியர்), விக்கினேஸ்வரன்(ஜேர்மனி) ஆகியோ ரின் அன்புச் சகோதரியும் இரத்தினதேவி, பெரியதம்பி, அமரர் கனகசபை மற்றும் நாகேஸ்வரி(ஜேர்மனி), சரவணபவானந்தன்(டோகா) ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரது பூதவுடல் இறுதி நிகழ்வுக்காக அவரது இல்லத்தில் வைக்கப்பட்டு இன்று(27.12.2008)சனிக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு மானிப்பாய் பிப்பிலி இந்துமயானத்துக்கு தகனத்துக்காக எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

'கணேசலிங்கம் முருகபதி'
உடுவில் வீதி, மானிப்பாய். (சி-556271)

தகவல்:
சண்முகநாதன்(கணவர்).


புதுவருடத்தை முன்னிட்டு காவேரியில் அசத்தலான மலிவு விற்பனை முடிவுக்கு வருகிறது
சகல புடைவை வகைகளையும் மிகக் குறைந்த விலையில் அள்ளிக்கொள்ள....
கண்கவரும் தெரிவுகளுக்கு முந்துங்கள்
காவேரி சில்க்ஸ்
இன்னும் ஒரு சில தினங்களுக்கு மட்டுமே! விரையுங்கள்
ஞாயிற்றுக்கிழமைகளிலும் கடை திறந்திருக்கும்
இல.48 பெரிய கடை, வீதி யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அனைத்து....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

13 கட்சிகளின் பிரதிநிதிகள் கடந்த மூன்று வருடங்களாக ஆராய்ந்து இணக்கம் கண்டுள்ள உத்தேச நகலை ஐ.தே.கவின் பிரதிநிதி கே.என்.சொக்ஸியிடம் கையளிக்க உள்ளனர். அவர்கள் தமது யோசனைகளை முன்வைத்தால் அந்த நகல் திட்டம் அரசின் இறுதித்திட்டமாகிவிடும் என்று பேராசிரியர் திஸ்ஸ விதாரண தெரிவித்தார்.

தற்சமயம் வன்னியில் மேற்கொள்ளப் பட்டு வரும் மனிதாபிமான நடவடிக்கை முடிவடைந்ததும், அரசியல் தீர்வுத் திட்டத்தை முன்வைக்க ஜனாதிபதி அக்கறை யாக இருப்பதாகவும் விதாரண மேலும் கூறினார்.

(அ-1)

## இராணுவத்திற்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மேலும் 600 பேரை சேர்ப்பதற்கான முடிவு திகதி எதிர்வரும் 31 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது என்றும் -

தியத்தலாவை படை முகாமில் நேர் முகப் பரீட்சை இடம்பெற்று வருவதாக வும் இராணுவத் தலைமையகம் மேலும் தெரிவித்தது.

(அ-1)

## வன்னியில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பொதுமக்களின் நான்கு குடியிருப்புகள் சேத மாகியுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டது.

அத்துடன், கிளிநொச்சி, பரந்தன் வீதியிலும் நேற்றுக்காலை விமானங்கள் தாக்குதல் நடத்தியிருக்கின்றன.

இதன்போது, 10 மாடுகள் உயிரிழந்தன என்று கூறப்பட்டது. எனினும், பொதுமக்களுக்கு பாதிப்புகள் எதுவும் ஏற்படவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை, தரைப்படையினர் கடுமையான ஷெல் தாக்குதல்களை ஒட்டுசுட்டான், கற்சிலைமடு பிரதேசங்களை நோக்கி நடத்தியுள்ளனர் எனவும், அந்தப் பகுதிகளைச் சேர்ந்த மக்கள் உயிர்ப் பாதுகாப்பிற்காக இடம்பெயர்ந்துள்ளனர் எனவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

மக்களின் வாழ்விடங்களில் ஷெல்கள் வீழ்ந்து வெடிப்பதால் அங்கு வாழும் மக்களும் இடம்பெயர்ந்து வந்து வாழும் மக்களும் பாதுகாப்பான வேறு இடங்களுக்கு இடம் பெயர்ந்து வருகின்றனர்.

எனினும், இந்தத் தாக்குதல்கள் தொடர்பில் படைத்தரப்புத் தகவல்கள் எவையும் இச்செய்தி அச்சுக்குப்போகும்வரை வெளிவரவில்லை.

(அ-சி)

## மட்டு.கராடியனா..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உயிரிழந்தவர்களின் சடலங்கள் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையின் பிரேத அறையில் நேற்று வைக்கப்பட் டிருந்தன.

(சி)

## கணிதபாட...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வரும் 24 ஆம் திகதி பரீட்சையை நடத்துவதற்கு நேற்று மீண்டும் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

அடுத்த கல்வி ஆண்டுக்காக பாடசாலைகள் ஆரம்பிக்கப்பட்ட பின்னர் நேர அட்டவணை தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும் எனவும், இம்முறை பரீட்சைக்குத் தோற்றிய அதே பரீட்சை நிலையங்களிலேயே கணிதம் பகுதி 2 (புதிய பாடத்திட்டம்) பரீட்சைக்குத் தோற்ற முடியும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, பரீட்சையை மீண்டும் நடத்துவதற்காக வினாத் தாள்களைத் தயாரித்து அச்சிடுவதற்கு மட்டும் 50 லட்சம் ரூபாவை அரசு மேலதிகமாக செலவிட்டுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(சி)

## பெற்றோல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நடவடிக்கைகளை எப்படி தேசத்துரோகம் என்று சொல்லமுடியும்?

அப்படி என்றால் பெற்றோல் விலையைக் குறைக்குமாறு உத்தரவிட்ட நீதிமன்றம் தேசத்துரோகியா? இந்தச் சிறிய விடயத்திற்காக அரசு மார்பிலும் தலையிலும் அடித்துக்கொண்டு கூக்குரல் இடுகிறது. பெற்றோல் விலையையே குறைக்க முடியாத இந்த அரசால் எப்படி நாட்டின் வாழ்க்கைச் செலவினத்தைக் கட்டுப்படுத்த முடியும்?

நீதிமன்ற உத்தரவின்படி பெற்றோலின் விலையைக் குறைத்த ஐ.ஓ.சி. நிறுவனத்தையும் மீண்டும் பெற்றோலின் விலையைக் அதிகரிக்க வைத்துள்ளது அரசு.

ஐ.ஓ.சி. நிறுவனம் நான்கு நாள்கள் விலையைக் குறைத்து விற்றது. இதேபோன்று அரசாலும் பெற்றோலின் விலையைக் குறைக்கமுடியும் என்பதை ஐ.ஓ.சி. நிறுவனம் சுட்டிக்காட்டியுள்ளது.

ஆகவே, உடனடியாகப் பெற்றோலின் விலையைக் குறைக்குமாறு கோரி நாம் ஜனவரி ஐந்தாம் திகதி நாட்டில் பல இடங் களில் ஆர்ப்பாட்டங்களை நடத்தவுள்ளோம் என்று ஐக்கிய தேசியக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் ரவி கருநாயக்கா தெரிவித்தார்.

## யாழ்.நகரில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவுப் பாடகர் போட்டி, களியாட்ட நிகழ்வுகள் என்பன நடைபெறவுள்ளன.

யாழ்.பாதுகாப்புப் படைத்தலைமையகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டு, சமாதானச் செயலகத்தினால் ஒருங்கிணைக் கப்பட்டு, கொழும்பு, யாழ்.அரச மற்றும் தனியார் நிறுவனங்களின் அனுசரணை யுடன் இக் கண்காட்சி இடம்பெறுகிறது.

இக் கண்காட்சியைப் பார்வையிட யாழ்.பிரதான வீதியில் நீதிமன்ற சந்தி ஊடாகவும், கே.கே.எஸ்.வீதியில் வீரசிங் கம் மண்டபத்தடி ஊடாகவும் மக்கள் அனுமதிக்கப்படுவர் என்று படைத்தரப்பினர் அறிவுறுத்தியுள்ளனர்.

**நகரில் நேற்றுக் கடும் சோதனை**

இதேவேளை-

இக்கண்காட்சியை ஒட்டி யாழ்.நகருக்குள் செல்பவர்கள் நேற்று கடும் சோதனைக்கு உட்படுத்தப்பட்டனர்.

நகரின் நுழைவாயில்களில் விசேட பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. அவற்றின் ஊடாகச் சென்ற பொதுமக்கள் சோதனையின் பின்பே உள்செல்ல அனுமதிக்கப்பட்டனர். வாகனங்களும் அவ்வாறே கடும் சோதனையின் பின்பே அனுமதிக்கப்பட்டன.

(அ-1-86-224-131)

## கொழும்பிலும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது எனத் தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த இரண்டு மூன்று தினங்களாக நடத்தப்பட்ட இந்தச் சுற்றிவளைப்புத் தேடுதல்களின் போது ஆயிரக்கணக்கான பொதுமக்களிடம் தீவிர விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன், நூற்றுக்கணக்கான வீடுகள், தொழில் நிலையங்கள் மற்றும் வாகனங்கள் போன்றனவும் பலத்த சோதனைகளுக்கு உள்ளாக்கப்பட்டுள்ளன.

இதன்போது விசாரணைகளுக்கு உட்படுத்தப்பட்டவர்களில் சிலரே மேலதிக விசாரணைகளுக்காக அந்தந்த பொலிஸ் நிலையங்களில்தடுத்துவைக்கப் பட்டுள்ளனர்.

## நீதிமன்றை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றிய ஐ.தே.கட்சி எம்.பி ரவி கருணாநாயக்கவே இந்தத் தகவல்களைத் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து கூறியவை வருமாறு:-

எரிபொருள்களின் விலைகள் உலக சந்தையில் இப்போது 39 அமெரிக்க டொலராகக் குறைவடைந்துள்ளன. இந்த விலை வீழ்ச்சியின் நன்மையை இந்த நாட்டு மக்களுக்குப் பெற்றுக்கொடுக்க வேண்டும் என்று கூறி நாம் நீதிமன்றம் சென்றோம்.

பெற்றோலின் விலையை மாத்திரம் குறைக்குமாறு நீதிமன்றம் அரசுக்கு உத்தரவிட்டது. ஆனால் அரசு நீதிமன்றத் தீர்ப்பை அவமதித்துக் கொண்டு அத் தீர்ப்பை நடைமுறைப்படுத்தாமல் உள்ளது.

இதனால் நாம் மீண்டும் நீதிமன்றம் செல்லவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. அப்போது பெற்றோல் உட்பட டீசல்,மண்ணெண்ணெ மற்றும் சமையல் எரிவாயு ஆகியவற்றின் விலைகளைக் குறைக்குமாறு நீதிமன்றத்திடம் கோருவோம்.

பெற்றோலின் விலையைக் குறைக்குமாறு நீதிமன்றம் விடுத்த உத்தரவை அவமதித்த குற்றத்திற்காக நாம் வழக்குத் தொடருவோம்.

எரிபொருள்களின்விலைகள்உலகசந்தையில் வீழ்ச்சியடைந்திருப்பதால் அவற்றின் விலைகளை அரசால் தாராளமா கக் குறைக்க முடியும்.

இப்போது நாம் ஆட்சியில் இருந்திருந்தால் பெற்றோல் ஒரு லீற்றரை 50 ரூபாவுக்கும், டீசல் ஒரு லீற்றரை 30 ரூபாவுக்கும், மண்ணெண்ணை ஒரு லீற்றரை 20 ரூபாவுக்கும் விற்போம் - என்றார்.

(சி)


பொருளியற் கல்லூரி
நாவலர் றோட், யாழ்ப்பாணம்.
கே.கே.எஸ்றோட், இணுவில்
இரு இடங்களிலும்
A/L 2011
கலை - வர்த்தகம்
ஜனவரி- 4இல்
இரு இடங்களிலும் உங்கள் அனுமதிகளை பெற்றுக் கொள்ளவும்.

நிரு ரிபூசன் சென்ரர் கோண்டாவில்
A/L 2011
கணித, விஞ்ஞான வகுப்புக்கள்
ஆரம்பம்:- 03.01.2009
சனி 3மணி

THE SCIENCE CORNER
Clock Tower Lane, Jaffna
2011 A/L கணித, உயிரியல் வகுப்புகள்
ஆரம்பம் : 28.12.2008 ஞாயிறு காலை 7.00
இணை.கணிதம் — ஜங்கரன் சிவகரன்
பௌதிகவியல் — செந்தில்குமரன் வழமையான ஆசிரியர்
இரசாயனவியல் — ராஜா
உயிரியல் — பொன்திவாகரன்
2011 A/L ENGLISH MEDIUM BIO, MATHS CLASSES
COMMENCE ON : 28.12.2008
SUNDAY 8.00 A.M
SPECIAL TEACHERS

BIT/ DBF வகுப்புக்கள்
BIT - 1st Semester
Sat, Sun - 12.00 - 2.00 pm
BIT - 3rd Semester
Sat, Sun - 9.00 - 11.00 am
DBF - Sat, Sun - 7.00 - 8.00 am
By: R.Kumaran - B.Sc
74, Sabapathy Lane,Jaffna.
T.P: 060 221 6083

THE SCIENCE CORNER
Clock Tower Lane, Jaffna
உயிரியல் 2011 A/L
Batch - I Sat, Sun- (7.00-8.00)am
Batch - II Tue, Thu- (4.15 - 5.30)pm
ஆரம்பம்:- 28.12.2008 ஞாயிறு
சு.பொன்திவாகரன்

THE SCIENCE CORNER
Clock Tower Lane, Jaffna.
இரசாயனவியல் 2011 A/L
தமிழ் மொழி மூலம் வகுப்புகள்
Batch - I Sat, Sun-(3 - 4.30)pm
Batch - II Tue, Thu-(6.30 - 7.30)am
English Medium
Sat, Sun- (9.30-11.00) am
ஆரம்பம்:- 28.12.2008 ஞாயிறு
By:- RAJAH

CHEMISTRY Group Classes
2011 A/L
தமிழ் மொழி மூலம்
ஆங்கில மொழி மூலம்
ஆரம்பம்:- 28.12.2008
4 p.m.
DIAS B.sc (Hons) Spl. in chem.
COLLEGE OF CHEMISTRY
32, பழம் வீதி, கந்தர்மடம்.

STP COMPUTER WORLD (PVT,) LTD.
2009 ICT Grade 10/11
2009ம் ஆண்டுக்கான புதிய பிரிவுகள்
தரம் 10, தரம் 11 மாணவர்களுக்கான ICT வகுப்புக்கள் 03.01.2009 முதல் ஆரம்பம்
முற்றுமுழுதான செய்முறைப்பாடக் குறிப்புக்கள்
தமிழ் மொழியிலான விளக்கங்கள்
அலகு ரீதியான மாதாந்தப் பரீட்சைகள்
ICDL Testing Centre
உங்கள் பதிவுகளை 02.01.2009 வரை மேற்கொள்ளலாம்
STP Your Partner in IT Solution
No:149, Kasthuriar Road, Jaffna, T.P: 2222674 Fx: 2228147 web: www.icdl.com

NEW SCIENCE HALL
G.C.E A/L இரசாயனவியல் மீள் பரீட்சார்த்திகளுக்குரியது
THEORY வகுப்புக்கள்
பௌதிக இரசாயனம் — செவ்வாய்க்கிழமைகளில் 11.30 -1.00
சேதன இரசாயனம் — வியாழக்கிழமைகளில் 11.30 -1.00
அசேதன இரசாயனம் — வெள்ளிக்கிழமைகளில் 11.30 - 1.00
ஆரம்பம் 06.01.2009 செவ் 11.30
Day Class இல் அலகு ரீதியான கடந்த கால (1979 - 2008) வினாவிடை வகுப்பில் அசேதன இரசாயனம் ஆரம்பித்து விட்டது.
Mon to Fri - 10.00 - 11.30
2011வகுப்புக்கள் ஆரம்பித்துவிட்டன.
க.சிவத்திரன் B.sc (Hons)

உங்கள் அபிமான ஆசிரிய நட்சத்திரங்களின் ஒன்றிணைந்த சேவையில்
A/L 2011
கலை, வர்த்தகப் பிரிவு
ஆரம்பம்:- ஜனவரி 03
NEC
Clock Tower Road, Jaffna
பெருமாள் கோவிலுக்கு அருகில்
ஆற்றல் வற்றிப் போவதில்லை கடல் என்றுமே வற்றாது

A/L 2011 நாளை ஆரம்பம் (ஞாயிறு 8.30மணி) A/L 2011
கணித, உயிரியல் பிரிவு
இரசாயனவியல் S.வாசு
தமிழ் மொழி மூலம்
ஆங்கில மொழி மூலம்
பௌதிகவியல் K.செல்வன்
உயிரியல் V.A.ஞானேந்திரன்
NEC Clock Tower Road, Jaffna
இணை.கணிதம் S.பூட்
பெருமாள் கோவிலுக்கு அருகில்

"நிறைகுடம் தளம்பாது"
DMI (கலை, வர்த்தகப் பிரிவுகள்) A/L 2011 ஜனவரி - 10 காலை 9.00 மணி DMI
நாவலர் வீதி, யாழ்.
ஸ்ரான்லி வீதி, யாழ்.


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 27.12.2008 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org